நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 211 நவ.26 - டிச.02, 2000 விலை ரூபா 12/-

நிறைவு

உரிமைக்காய் போராடி உயிர்நீத்த மாவீரர்
பெருமையுற நினைவு விழா!: பொருத்தம் தான்! ~நிறைவுஎனில்
உரிமைக்காய்க் குரல் கொடுத்த ஒவ்வொருவர் நினைவுக்கும்
பெருமையுடன் விழவெடுக்கப்பெறின்!

- ஈழமோகம்

## பிரபாகரனின் மாவீரர்தின உரை:



## சாம்பல் பூத்த மேட்டிலிருந்து சமாதானத்திற்கு வழி காட்டுமா?





## உங்கள் கேள்விகளும் விநாயகமூர்த்தியின் பதில்களும்



## அஷ்ரஃப்பின் மரணம்: முஸ்லீம் காங்கிரஸ் மௌனம் சாதிப்பதேன்?



## புலிகளின் மீது சர்வதேச அழுத்தம் சாத்தியமானதா?



## அரசின் சமாதான முயற்சி: வெறும் போக்குக் காட்டும் விடயமா?



## மடு:



## புனித பூமியில் நிகழ்ந்த படுகொலை ஓராண்டு நினைவு



## யாழ்.சமூகம் பற்றிய ஒரு மதிப்பீட்டுக்கான முன்னுரை

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழுக்குப் பதிலாக ஆங்கிலம்

## இரண்டு வீதமானோர் கல்வியைக் கைவிட்டனர்

பல்கலைக்கழகங்களில் இன்று தமிழ்மொழி மூல போதனை புறக்கணிக்கப்படுகிறது. 1956இல் சுயமொழிப் போதனைக்குத் திறக்கப்பட்ட பல்கலைக்கழக கதவுகள் இன்று ஆங்கில மொழிப் போதனை மூலம் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. க.பொ.த.உயர்தரக் கலிவியைத் தமிழ் மொழி மூலம் பெற்றுக் கொண்டு பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு மருத்துவம், சட்டம், விஞ்ஞானம், பொறியியல் துறைகளில் ஆங்கிலத்தில் போதனை இடம் பெறுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் சென்ற ஆண்டிலிருந்து முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் ஆகிய பாடங்கள் ஆங்கிலத்தில் போதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களில் இரண்டு சதவீதமானோர் பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்தி விட்டனர்.

இவ்வாறு கலாநிதி செ.குணராசா (செங்கை ஆழியான்) வட-கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நடாத்தும் 9ஆவது தமிழ் இலக்கிய விழாவின் முதல்நாள் காலை அமர்வுக்குத் தலைமை வகித்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

கலாநிதி குணராசா மேலும் பேசுகையில், தமிழ்மொழியையும், தமிழ் பண்பாட்டையும் வளர்ப்பதில் நாம் பெரிதும் இடர்பாடுகளைச் சந்தித்து வருகிறோம். 1956களில் சுய மொழிகளில் கல்வி பெறுவது இலங்கையில் ஆரம்பமானது. தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியிலும், சிங்கள மாணவர்கள் சிங்கள மொழியிலும் கல்வி பெறும் இத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகக் கல்வியைத் தமிழில் பெற்ற முதல் மாணவர்களில் நானும் ஒருவன். என்னைப் போன்று தமிழ் மொழியில் பல்கலைக்கழகக் கல்வியைக் கற்று இன்று பலர் உயர் நிலையில் உள்ளார்கள். ஆனால் இன்று பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலக் கல்வி புறக்கணிக்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் போதனையை நடத்த ஆரம்பித்ததன் மூலம் பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழியில் படிப்பதை இல்லாமல் செய்யும் காரியம் இடம் பெற்று வருகிறது.

மீண்டும் ஆங்கிலத்தைப் பல்கலைக் கழகங்களில் புகுத்தும் குடியேற்ற காலத்திற்குச் செல்கின்றோம். தமிழ்மொழி மூலம் கல்வி கற்பது மாணவர்களது அடிப்படை உரிமை. அதனை எவரும் மறுக்க முடியாது. ஆங்கிலப் புலமை தேவை தான். ஆங்கிலப் புலமையைப் பூரணமாகப் பெறும் முயற்சி ஒரு புறம் மேற் கொள்ளப்பட வேண்டும்.

இதேவேளை சுயமொழி மூலம் கல்வியைப் பெறுவதும் தொடர வேண்டும். தமிழில் கல்வியைப் போதிக்க தமிழில் போதிய நூல்கள் இல்லை. போதியளவு மொழி பெயர்ப்பு நூல்கள் இல்லையென்று காரணம் காட்டப்படுகிறது. ஆனால் பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் போதிப்பதற்கு ஏற்ற வள ஆளணியினர் உள்ளார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது என்று தெரிவித்தார்.

# ஷெல் வீச்சால் வெளியேற முடியாததால் மட்டுவிலில் அறுவர் பங்கருக்குள் வாழ்வு!

சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் தங்கியிருந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேரை அங்கிருந்து படையினர் அழைத்து வந்து வல்வெட்டித்துறை இடைத்தங்கல் முகாமில் நால்வரையும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் இருவரையும் ஒப்படைத்துள்ளனர். மட்டுவில் பகுதியைச் சேர்ந்த இந்த 6 பேரும் அங்கு ஒரு வீட்டில் நெல் மூடைகளில் பங்கர் அமைத்துக் கடந்த சில மாதங்களாகத் தங்கியிருந்துள்ளனர்.

மட்டுவில் செல்லப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பாலசிங்கம் செல்லம்மா (73 வயது), ஆசிரியையான பாலசிங்கம் புஸ்பராணி (வயது 49), இ.போ.ச பஸ் நடத்துனர் வைரமுத்து இராசலிங்கம் (வயது 45), இராசலிங்கம் அன்னலட்சுமி (வயது 43), சின்னத்துரை சிவகாமிப்பிள்ளை (வயது 74), சுப்பிரமணியம் போதநாயகம் (வயது 71) ஆகியோரே இந்த அறுவருமாவார்.

அவர்களில் சந்திரமௌலிஸ்வர வித்தியாலய ஆசிரியையான பாலசிங்கம் புஸ்பராணி கடந்த செப்டம்பர் மாதம் 24ஆம் திகதி பங்கரில் இருந்து சமயலறைக்குச் சென்ற சமயம் காலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இவர் தமது காயத்திற்கு மஞ்சள், மிளகு இரண்டையும் அரைத்து நல்லெண்ணெய் கலந்து பூசி வந்துள்ளார். காயம் ஆறாமல் இருந்த நிலையில் இவர் வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகப் பின்னர் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த சில மாதங்களாக உணவுப் பொருட்கள் இன்றி சாப்பாட்டுக்காக பெரும் கஷ்டங்களை அனுபவித்ததாகவும், கஞ்சியையே தமது உணவாகக் கொண்டதாகவும், ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி வெளியில் நடமாட முடியாமல் பங்கரிலேயே தஞ்சமடைந்திருந்ததாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

படையினரின் ஷெல் வீச்சுக்காரணமாக வீட்டுக்கூரை சேதமடைந்து மழை நீர் ஒழுகி வீட்டிலிருந்த நெல்மணிகள் முளை விட ஆரம்பித்து விட்டதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை மட்டுவில் பகுதியில் ஞாயிறன்று நடந்த மோதலின் போது ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி பஸ் நடத்துனர் இராசலிங்கத்திற்கு சிறு காயம் ஏற்பட்டிருந்தது. அவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

# கொல்லப்பட்ட இளைஞனின் உடலில் சிகரெட் நெருப்பால் சுட்ட அடையாளங்கள்!

## பிரேத பரிசோதனையில் அறிக்கை

மட்டக்களப்பு சித்தாண்டியை அடுத்துள்ள பாலையடித்தோணா கிராமத்தில் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞரின் மரணம் கொலை என தீர்ப்பளித்த திடீர் மரணவிசாரணை அதிகாரி பி. வீரக்குட்டி இக்கொலை தொடர்பாக பூரணவிசாரணை நடத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஏறாவூர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை பாலையடித்தோணா கடற்கரைப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட கிண்ணையடி வாசியான நடராசா செந்தூரன் (17வயது ) என்ற இளைஞரின் மரண விசாரணைகள் நவ.19 அன்று ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி பி. வீரக்குட்டி முன்னிலையில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனையை ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலை அதிகாரி டாக்டர் கே.சுகுமார் நடத்தினார். துப்பாக்கி சுட்டுக்கு இலக்காகி மரணம் சம்பவித்திருந்தாலும், உடலில் சிகரட் நெருப்பால் சுட்ட காயங்கள் காணப்படுவதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் அவர் தெரிவித்திருக்கிறார்.

சித்தாண்டி இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவ கோப்ரல் குலசூரிய ஜோசப் பெனாண்டோ சாட்சியமளிக்கையில் சம்பவதினம் தானும் மேலும் சில படையினரும் மறைந்திருந்த போது அவ்வழியால் இரு இளைஞர்கள் வந்ததாகவும், நிற்குமாறு கூறியும் அவர்கள் நிற்காமல் ஓடியதால் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும் தெரிவித்தார்.

பின்னர் அந்தப் பகுதியில் இந்த இளைஞரின் சடலமும், கிரனைட் ஒன்றும் காணப்பட்டதாகவும் இவர் விடுதலைப்புலி இயக்க உறுப்பினர் என்றும் அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

செந்தூரன் என்ற இந்த இளைஞர் கறுவாக்கேணி வித்தியாலயத்தில் கல்விகற்று விட்டு வேலை தேடிக்கொண்டிருந்தவர் என்றும் சம்பவ தினம் வேலை விடயமாக சித்தாண்டியில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டிற்கு சென்ற சமயமே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

## அன்புடையார் என்பும்....

புலிகளின் இறைச்சி எங்கள் நாய்களுக்கு' என்ற புகழ் பெற்ற கோசம் ஒன்று சுவரொட்டிகளில் ஒட்டப்பட்டிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

பண்டாரவளை படுகொலையாளர்களால் ஒட்டப்பட்டதாகக் கூறப்படும் இந்தச் சுவரொட்டி, சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை கொல்வதை நியாயப்படுத்துவதற்காக சொல்லப்பட்ட ஒரு சுலோகம்.

பௌத்த தர்மத்தின் அடிப்படையே கொல்லாமையிலும், அன்பு மார்க்கத்திலும் கட்டி எழுப்பப்பட்ட ஒன்றாக இருக்கும் போது, அம்மதத்தைப் பின்பற்றுவதாகவும், அம் மத வழி தொடரும் மக்களை பாதுகாப்பதற்காகவும் செயற்படுவதாக கூறும் ஒரு இயக்கத்தின் சுலோகம் இது என நம்பப்படுகிறது.

ஆனால், உண்மையாகவே பௌத்த மதத்தில் நம்பிக்கை வைத்து, தனது உடல் இறைச்சியை சிங்கங்களுக்கு புசிக்கக் கொடுக்கும் சரீர தானம் செய்யத் துணிந்த ஒரு இளைஞனைப் பற்றி அதிகம் பேர் கேள்விப்படாமல் இருக்கலாம்.

ஆனால் இது நடந்தது கொழும்பு மிருகக் காட்சிச் சாலையில்!

தன்னுடைய உடலை சிங்கங்களுக்கு புசிக்கக் கொடுக்க விரும்பிய ஒரு மிருகக் காட்சிச் சாலை ஊழியர் தனது இந்த விருப்பத்தை காட்சிச் சாலை அதிகாரிக்கும் தனது நண்பர்களுக்கும் கடிதம் எழுதி அறிவித்து விட்டு, தன் உடைகளை களைந்து வைத்து விட்டு சிங்கங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கூட்டுக்குள் குதித்திருக்கிறார்.

சிங்கம் தானாகவே வந்து சேர்ந்த, தன் மீது அன்பு கொண்ட இரையை ஆவலுடன் கௌவி சுவைக்க ஆரம்பித்தது.

ஆனால், மிருகக் காட்சிச் சாலையில் நின்றவர்களும், ஊழியர்களும் பலத்துச் சத்தமிட்டு சிங்கத்தை மிரட்டவே அது இரையைப் போட்டு விட்டு மூலைக்குள் சென்று விட்டது.

இளைஞர் இப்போது களுபோவில மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த இளைஞர் பௌத்த மதத்தைப் பாதுகாக்க அந்த மதத்தின் கடமைகளைச் செய்ய யாரையும் கொல்ல நினைக்கவில்லை. தன்னையே கொடுக்க முன் வந்தார்.

'அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு' என்பார்கள். ஆனால், 'பிறர்க்கு' மட்டுமல்ல, பிறவற்றிற்கும் என்று காட்டியிருக்கிறார் இந்த இளைஞர்.

இது சரியா பிழையா என்ற கேள்விக்கு அப்பால், இவரின் தியாகம் கேள்விப்படுபவரை மெய்சிலிர்க்க வைக்கும் ஒன்று என்பதில் ஐயமில்லை!

ஆனால், இவருக்கு கொஞ்சம் 'ஒரு மாதிரி' என்று இந்தச் சமூகம் விரைவிலேயே கூறத் தொடங்கிவிடும்: ஏற்கெனவே தொடங்கி விட்டதோ தெரியவில்லை.

காவியுடுத்து 'பண' ஓதுபவர்கள் தியாகத்தை இவரிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும்!

## இழுத்தடிப்பது யார்?

உண்மையில் நோர்வேயை இலங்கைப் பிரச்சினையில் தலையிடாதே என்று கோரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நோர்வே தூதரகம் முன் நடாத்தப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கும்.

"நோர்வே தமிழ் இனவாதிகளுக்கு ஆதரவளிக்கிறது' என்று குற்றம் சாட்டும் 'சிஹல உறுமய' அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

'அந்நியர்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது' என்று ஆக்கிரோசமாக கத்துகிறார்கள் இவர்கள். 'இலங்கைப் பிரச்சினையில் தலையிட எந்த அந்நியருக்கும் உரிமையில்லை. அதில் யார் தலையிட்டாலும் எதிர்ப்போம்' என்று கூறுகின்றார் இக்கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன.

இவர்களுக்கு பிரச்சினை பற்றியோ, நாடு பற்றியோ நாட்டு மக்கள் பற்றியோ எந்த அக்கறையும் கிடையாது. எப்படியாவது தமது அரசியல் பிழைப்பை நடாத்த வேண்டும் என்பதற்காக இந்த வெறிக் கூச்சலைப் போடுகிறார்கள்.

ஆனால், உண்மையை விளங்கிக் கொண்ட ஓரிரு பௌத்த பிக்குகளும் கூட இருக்கத் தான் செய்கிறார்கள்.

கதிர்காமத்திலுள்ள ஜனாதிபதி வித்தியாலய அதிபரான ஸ்ரீ சரணதிஸ்ஸ தேரர் இவ்வாறு குறிப்பிடத்தக்க தேரர்களுள் ஒருவர்.

"இன்றைய பிரச்சினையை எப்போதோ தீர்த்திருக்கலாம். யுத்தவாதிகளும், அரசியல் பிழைப்புவாதிகளும் தான் இதை இழுத்தடித்து வருகிறார்கள். மனித உயிர்களை - அவர்கள் தமிழர்களாயினும் சரி, சிங்கள உயிர்களாயினும் சரி- பலி கொள்வதாகவே இந்த யுத்தம் இருக்கிறது. புத்த தர்மத்தை பேச்சுக்கு கூறிய படி இனவாதத்தைப் பரப்புவோரால் நாடும் நாமும் அழிந்தே போவோம்" என்று கூறுகிறார் அவர்.

துயரம் என்னவென்றால் உண்மைகளைப் பேசுவோர் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலராக இருப்பது தான்!

நன்றி - நூலகத்திட்டம்



# புலிகள் மீது சர்வதேச அழுத்தம் சாத்தியமானதா?

–டி.சிவராம்

பிரிட்டிஷ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் வரவு மீண்டும் மூன்றாம்தரப்பு ஊக்குவிப்புடனான சமாதானப் பேச்சுவார்த்தை என்ற விடயத்தைப் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

இது பற்றிப் பல கருத்துகள் அண்மையில் வெளியாகியுள்ளன. மேற்குநாடுகளின் அழுத்தத்தினால் தான் புலிகள் பேச இணங்க வேண்டியதாயிற்று என்பது ஒன்று. நோர்வே, இங்கிலாந்து போன்ற நாடுகளின் உதவியுடன் புலிகளும் சிறிலங்கா அரசும் பேசுவது பற்றி இந்தியா, கொண்டுள்ள நிலைப்பாடு காலப்போக்கில் சில முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தலாம் என்பது இன்னொன்று. இவற்றை நாம் இங்கு ஒவ்வொன்றாக நோக்குவோம்.

தனது நாட்டில் தங்கியிருக்கும் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு மீது ஒரு அரசு அழுத்ததை ஏற்படுத்துவது என்றால் என்ன?

ஒரு குறிப்பிட்ட அரசியல் நிலைப்பாட்டை நீங்கள் எடுக்காவிட்டால் நாம் உங்கள் மீது சில பாதகமான நடவடிக்கைகளை எடுப்போம் என தம் மண்ணில் தங்கியிருந்து செயற்படும் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பிற்கோ அல்லது ஒரு அரசியற் கட்சிக்கோ வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ ஒரு அரசு தெரியப்படுத்துமெனில், அதையே நாம் இங்கு அழுத்தம் எனக் கொள்கிறோம்.

ஒரு இன மக்களின் அலுவல்களிலோ அல்லது இன்னொரு நாட்டின் அரசியலிலோ கேந்திர நோக்குடன் தலையிட எண்ணும் பிராந்திய அரசுகளும், வல்லரசுகளும் இங்ஙனம் அழுத்தம் செலுத்துவதையும் அதற்கான வழிவகைகளையும் ஒரு பெரும் இராஜதந்திரக் கலையாகவே வளர்த்தெடுத்துள்ளன.

பலஸ்தீனருடைய விடுதலைப் போராட்டத்தையும், குர்திஷ் மக்களுடைய உரிமைப் போரையும் அப்போராட்டங்களில் ஈடுபட்ட/ ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இயக்கங்கள் மீது அழுத்தங்களை உண்டாக்கி தமது தேவைகளுக்கேற்ப பல பிராந்திய அரசுகளும், அவற்றின் பின்னணியில் இயங்கிய வல்லரசுகளும் செயற்பட்டன என வரலாறு பகர்கின்றது.

ஒரு இனத்தின் உரிமைப்போரை தனது கேந்திரக் குறிக்கோள்களை அடைந்திடக்கூடிய வகையில் ஒரு பிராந்திய அரசு அல்லது வல்லரசு பின்வரும் நீண்டகால அடிப்படையில் அணுகுகின்றது.

1. உரிமைப்போரில் ஈடுபட்டிருக்கும் இயக்கமொன்றையோ, பலவற்றையோ தனது மண்ணில் காலூன்ற முதலில் ஊக்குவிப்பது.
2. அவ்வியக்கத்தின் செயற்பாடுகளைத் தனது மண்ணில் விரிவாக்க வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ உதவி செய்தல்.
3. முக்கியமான தலைமைகளை இனங்கண்டு மிக நெருங்கிய உறவுகளை அவர்களுடன் வளர்த்தெடுத்தல்.
4. அலுவலகங்களை மூடுவதன் மூலம் அல்லது உதவிகளை நிறுத்துவதன் மூலம் அல்லது தலைவர்களைக் கைது செய்வதன் மூலம் சம்பந்தப்பட்ட இயக்கத்தை அல்லது இயக்கங்களை தனது கேந்திர நலன்களுக்கேற்றவகையில் வளைந்து கொடுக்க வைத்தல்.

இவற்றை வாசித்து வரும் போது இந்திய மத்திய அரசு எமது உரிமைப்போரை அணுகியமுறை நினைவுக்கு வரும். கொசோவோவிலும், இது தானே நடந்தது. அல்பேனிய மக்களைப்போல் உலகில் இன்னற்படுபவர் யாருமில்லை என 98இல் ஆ... ஊ




எனக் கூச்சலிட்டன மேற்கு நாட்டு ஊடகங்கள். கொசோவோ விடுதலைப் படைக்கு (KLA) மேற்கு நாடுகளில் ராஜமரியாதையும் சகல உதவிகளும் கிடைத்தன. KLA கொஞ்ச நாள் மேற்கு நாடுகளின் இனியில்லையென்ற செல்லப் பிள்ளையாயிற்று. சேர்பியருக்கு எதிராகச் சில படை நடவடிக்கைகளை மேற்கொள்ள KLA ஊக்குவிக்கப்பட்டது.

இதன் உச்சக்கட்டமாக செக் அரசுக்கெதிராக ஐக்கிய நாடுகள் கூட்டு ஒன்றை அமெரிக்காவும், இங்கிலாந்தும் உருவாக்கி அந்நாட்டின் மீது வகைதொகையற்றுக் குண்டுமாரி பொழிந்தன. பாதிக்கப்பட்டது சாதாரண சேர்பிய மக்களே. சேர்பியப் படை குண்டுமாரியின் முடிவில் தனது ஆயுதங்களை கிட்டத்தட்ட முழுமையாகவே காப்பாற்றிக்கொண்டது. போரின் காரணமாக சேர்பியா மீது ஏற்பட்ட அழுத்தங்கள் மேற்குலகிற்கும் சாதகமான ஓர் அரசு செக் நாட்டில் பதவிக்கு வர வழிவகுத்தது. ஆனால், இன்றோ அல்பேனியர், KLA என்றால் வீசைக்கு என்ன விலை எனக் கேட்கின்றன மேற்கு நாடுகள். செக் நாட்டில் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள அரசு நாளை கோசோவோவிலுள்ள அல்பேனியர்களைப் போட்டு உதை உதை என்று உதைத்தாலும் ஏன் நாயே என்று கேட்க மாட்டா மேற்கு நாடுகள்.

இதுபோலவே ஈராக் நாட்டின் ஜனாதிபதி சாதாம் உசேய்ன் மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளையாக இருந்த காலம் ஒன்று இருந்தது. அப்போது ஈரானில் ஏற்பட்ட இசுலாமியப் புரட்சியை நசுக்கி அழித்திடுவதற்கான ஒரு போரை அந்நாட்டின் மீது சாதாமை ஏவிவிட்டு நடத்திக் கொண்டிருந்தன மேற்கு நாடுகள். அக்காலகட்டத்தில் ஈராக்கின் தென்பகுதியிலிருந்த குர்திஷ் மக்கள் மீது சதாமின் படைகள் நச்சுவாயுவைப் பயன்படுத்தின. பேரழிவு ஏற்பட்டது. மேற்கு நாடுகளோ மூச்சு விடவில்லை.

இந்த வகையில் தமிழ் மக்கள் இந்திய மத்திய அரசிற்கு நன்றி சொல்ல வேண்டும். எமது உரிமைப் போரை எவ்வாறு பிராந்திய அரசுகளும் வல்லரசுகளும் தமது கேந்திர நலன்களை முன்னெடுக்கும் நோக்குடன் அணுகும் என்பதைப் பற்றி மிகத் தெளிவாகவே எந்தவித ஐயத்திற்குமிடமின்றி அது 15 வருடங்களுக்கு முன்னரே எமக்குப் பாடம் கற்றுத் தந்து விட்டது.

சரி, மேற்கு நாடுகள் எமது போராட்டத்தில் கவனமெடுப்பதன் மூலம் அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளின் ஏற்பாட்டாளர்களாகவும் ஊக்குவிப்பாளர்களாகவும் இருப்பதன் மூலம், எதை அடைய விரும்புகின்றன? அதை சாதிப்பதற்குரிய அழுத்தத்தை அவர்களால் புலிகள் மீது செலுத்த முடியுமா?



இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் தென்னாசியப் பிராந்தியத்தில் பல போர்களும், இனப் பிரச்சினைகளும் நடைபெற்றுள்ளன. எனினும் இவை ஒன்றினூடாகவும் பெரிய அளவில் மேற்கு நாடுகளால் (அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ்) தென்னாசியப் பிராந்தியத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்திட முடியவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் இந்தியாவை அண்டிய நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளில் மேற்கு நாடுகளின் இடையீடுடனான சமசர முயற்சி இலங்கையில் தான் முதன்முதலாக நடைபெறுகிறது. கடந்த ஐம்பது வருடங்களில் கிடைக்காத ஒரு சந்தர்ப்பம் 1996இற்குப்பின் இலங்கைப் பிரச்சினை விடயத்தில் தான் மேற்கு நாடுகளுக்குக் கிடைத்துள்ளது. புலிகள் மிகவும் வளர்ச்சியடைந்து விட்டால் தனது தென்மாநிலத் தமிழ் மக்கள் தமக்கெனவும், ஒரு தனிநாடு வேண்டுமெனப் புறப்பட்டு விடுவார்கள் என அஞ்சுகிறது இந்திய மத்திய அரசு. அதேவேளை சந்திரிகா அரசைப் பலப்படுத்தி அதன்மூலம் தனது வர்த்தக மற்றும் கேந்திர நலன்களை நீண்ட காலத்தில் உறுதிப்படுத்திட விரும்புகிறது அது.

இவைபிரண்டையும் சமாளிப்பதென்றால் ஒன்று புலிகளை விரைவாக சந்திரிகா அரசு முறியடிக்க வேண்டும். அல்லது புலிகளை ஐக்கிய இலங்கைக்குள் சந்திரிகா அரசுடன் சமரசம் செய்து கொள்ள வைக்க வேண்டும் என அது கருதுகிறது. முதலாவது விடயம் இந்த நாளில் முடிகிற காரியம் அல்ல என டெல்லி இன்று திடமாக நம்புகிறது. ஆனால், இரண்டாவதைச் செய்யும்படி புலிகளை நெருக்கிட இந்திய மத்திய அரசிடம் எந்த வழியுமில்லை. புலிகள் தான் இந்தியாவில் தடைசெய்யபட்ட இயக்கமாயிற்றே. பழ. நெடுமாறனைக் கைது செய்து டெல்லிக்குக் கொண்டு சென்று வெருட்டுவதன் மூலம் புலிகளை அதைச் செய் இதைச் செய் என 1987 ஜூலையில் அட்டகாசம் பண்ணியது போல் இன்று டெல்லியால் எதுவும் செய்ய முடியாது. எனவே தவிர்க்க முடியாதபடி மேற்கு நாடுகளின் சமரச முயற்சி வெற்றி பெறட்டும் எனப் பல்லைக் கடித்துக் கொண்டு டெல்லி இன்று காத்திருக்க வேண்டியுள்ளது.

இதில் மேற்கு நாடுகளுக்கு இருவகையான இலாபம் உண்டு. ஒன்று புலிகள் - சந்திரிகா அரசு சமரச முயற்சிகள் மூலமாகத் தமக்குச் சாதகமான ஒரு கேந்திரச் சூழலை இங்கு படிப்படியாக உருவாக்குவது (வளர்ந்து வரும் அமெரிக்கா படைத்துறை - சிறிலங்காப் படைத்துறை உறவை நோக்குக) இரண்டாவது தமிழ்ப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு தொடர்ந்தும் இந்தியர் தம்மை அணுக வேண்டிய ஒரு சூழலை உண்டாக்குவது. இது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வியடம். இதில் மேற்கு நாடுகள் உண்மையில் புலிகளின் மீது எந்தளவிற்கு அழுத்தத்தைச் செலுத்தலாம் என்பதே அடிப்படையான கேள்வி.

உதாரணமாக பாலசிங்கத்தைக் கைது செய்து அல்லது புலிகளின் லண்டன் தலைமையகத்தை மூடி அதன் மூலம் பிரபாகரனை பேச்சுவார்த்தையில் இறங்கு என நிர்ப்பந்திக்கலாமா? அண்மையில் வன்னியில் புனர்வாழ்வுக்கென லண்டனில் நிதிசேகரிக்கும், புலிசார்பு என சிறிலங்கா அரசினால் குற்றஞ்சாட்டப்பட்ட சில நிறுவனங்கள் மீது பிரிட்டிஷ் அரசு அதிரடி நடவடிக்கை எடுத்தது. இது அழுத்தத்துக்கான ஒரு முன்னோட்டமோ என எண்ணக் கூடியதாயுள்ளது.

ஆனால், சுருக்கமான விடயம் என்னவெனில் மேற்கண்டவற்றின் மூலம் புலிகளை எதனையும் செய்யும்படி பிரிட்டிஷ் அரசோ வேறு எந்த மேற்கு அரசோ அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது. இதற்கு முக்கியமான காரணம் அவர்களுடைய இராணுவ மற்றும் நிர்வாக வளங்கள் அனைத்தும் வன்னியில் இருப்பதே. உதாரணமாக பாலசிங்கத்தைக் கைது செய்வதன் மூலமோ, லண்டன் தலைமையகத்தை மூடிவிடுவதன் மூலமோ புலிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தலாம் என நினைத்தால் அது மடமை. ஏனெனில், புலிகளின் உண்மையான சர்வதேசத் தலைமையகம் இருப்பது வன்னியில். அதன் பொறுப்பாளர் அங்குள்ள கஸ்ட்ரோ. இதுபோல பண விடயத்திலும் ஒரேடியடியாகப் புலிகள் நிதி திரட்டுவதை தத்தமது நாடுகளில் கட்டுப்படுத்துவதற்கு அவற்றின் சட்டங்கள் இடமளிக்கவில்லை. புலிகளின் ஆயுதக் கொள்வனவுகளை முடக்கலாம் என நினைத்தாலும் பல மேற்கு நாட்டு உளவுத் துறையினருக்கு இதைச் செய்யும் கே.பி எப்படி இருப்பார் என்பது தெரியாது. அவருடைய சகாக்கள் யாரென்பதோ தெரியாது. இதைக் கருத்திற் கொண்டு தானோ என்னவோ மேற்கு நாட்டு இராஜதந்திரி ஒருவர் என்னுடன் சமரச விடயங்கள் பற்றிப் பேச்சு வந்த போது "புலிகள் மீது அழுத்தம் கொடுப்பது மகா கஸ்டமான காரியம் ஐயா" என சலித்துக் கொண்டார். தமிழர் கொசோவோக்காரைப் போல் இளிச்சவாயர்கள் அல்ல என்பது பல மேற்கு நாடுகளுக்கு நன்றாகவே தெரியும். ஆகவே எமது பிரச்சினையை மிகக் கவனமாகவே அணுகுகின்றன. ⊖

நன்றி - நூலகத்திட்டம்



## உங்கள் கேள்விகளும் தமிழ்க் கட்சித் தலைவர்களின் பதில்களும்

இவ்வாரம் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பா.உ. வினாயகமூர்த்தி பதிலளிக்கிறார்

# நாம் விலை போகும் சரக்குகள் அல்ல!

*நீண்ட காலத்திற்குப் பிறகு உங்கள் கட்சி பாராளுமன்றத்திற்குப் போயிருக்கிறது. பாராளுமன்றத்திற்குள் சென்று. வெளியிலிருந்து செய்வதை விட அதிகமாக என்ன செய்யலாம் என்று கருதி நீங்கள் இந்தத் தேர்தலில் இறங்கினீர்கள்?*

கௌதமன், திருகோணமலை

எமது மறைந்த தலைவர் குமார் பொன்னம்பலத்தின் தொண்டைத் தொடரவே நாம் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் குதித்தோம். பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் வடகிழக்கைப் பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப் புலிகளே ஏக பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டை நிலைநிறுத்தவும், போர் நிறுத்தமொன்றை உடனடியாகக் கொண்டு வருவதற்கும் கடந்த தேர்தலில் போட்டியிட்டோம். அத்துடன் தமிழ் மக்களின் விசுவாசமான உரிமைக் குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்கவும், பேரினவாதத்திடம் விலை போகாதவர்களாகவும் இருப்போம் என்றே தேர்தல் காலத்தில் கூறினோம்.

*அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களது பெயரையும். புலிகள் அவருக்கு மாமனிதர் பட்டம் வழங்கியுள்ளதையும் உங்கள் கட்சி தேர்தல் வெற்றிக்குப் பயன்படுத்தியது என்ற குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?*

தியாகன், வவுனியா

மாமனிதர் குமார் பொன்னம்பலம் எமது கட்சியின் தலைவராக இருந்து படுகொலை செய்யப்பட்டவர். ஆகையால் நமது கட்சி தலைவராக இருந்து தமிழினத்திற்காக உயிர்த் தியாகம் செய்த குமாரின் பெயரை தேர்தலில் பாவிப்பதில் எந்தவிதமான பிழையும் இல்லை. அவரது கட்சியிலேயே நாம் போட்டியிட்டோம். ஆனால், மாமனிதர் என்ற பெயரை அநாவசியமாகவோ வீணாகவோ நாம் பாவிக்கவில்லை: பாவிக்க வேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

*தேர்தல் பிரச்சாரம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் கடைசிக் கணங்களில் நீங்கள் புலிகளின் இலட்சனை பதித்த துண்டுப்பிரசுரம் வெளியிட்டதாகவும். புலிகள் என்று நம்பக் கூடிய விதத்தில் சில இளைஞர்களை அனுப்பி மக்களிடையே உங்களுக்கு வாக்களிக்கும்படி கேட்டதாகவும் கூறப்படுகின்றது. அமைச்சர் டக்ளஸ் உம் இவ்வாறு அண்மையில் குற்றம் சாட்டியுள்ளார். இதற்கு உங்கள் பதில் என்ன?*

சுரேக்கா, நீர்கொழும்பு

நாங்கள் நீங்கள் சொன்னது மாதிரி விடுதலைப் புலிகளின் இலட்சினை பதித்த துண்டுப்பிரசுரம் வெளியிட்டு பிரச்சாரம் செய்யவில்லை. அப்படி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் எமக்கு இருக்கவில்லை. திருகோணமலையில் தமிழ் காங்கிரஸிற்கு ஆதரவு அலை இருந்தது. முதலாவது பிரச்சாரக் கூட்டத்தில் நானும் பங்கு பற்றினேன். தமிழ்க் காங்கிரஸ் திருகோணமலையில் முன்னேறிக் கொண்டிருப்பதை சகிக்க முடியாத சில விஷமிகள் சில கெட்ட வேலைகளைச் செய்துள்ளார்கள். இதற்கு நாம் பொறுப்பல்ல. இந்த விஷமிகளது செயலினாலேயே நாம் ஒரு இடத்தையும் கைப்பற்ற முடியாமல் போனது. டக்ளஸ் என்னில் பிழை காண்பதற்கு பல முறை எத்தனித்திருக்கிறார். அண்மையில் கௌரவ டக்ளஸ் தேவானந்தா நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் தான் அரசிடமிருந்து பணம் பெறுவதையும் தனது கட்சி கூலிப்படையாக இயங்குவதையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். இப்படியான ஒருவருடைய நிலைக்கு இறங்கி அவருக்குப் பதிலளிக்க நான் விரும்பவில்லை.

*தமிழ்க் கட்சிகளிடையே நிலவும் போட்டி மனப்பான்மை பாராளுமன்ற உறுப்பினர் அதிகாரத்தின் கீழ் மக்களுக்குச் செய்யக் கூடிய ஒரு சில செயற்பாடுகளைக் கூட மோசமாகப் பாதிக்கிறது. குறிப்பாக தமிழ் இளைஞர்கள் கைது விவகாரம். சிறைச்சாலையில் காலவரையறையின்றி இளைஞர்கள் கைதிகளாக வைக்கப்பட்டிருத்தல். திருமலை போன்ற பிரதேசங்களில் காணி பறிப்பு குடியேற்றம் போன்ற விடயங்களில் கூட கட்சிகள் ஒற்றுமையுடன் செயற்படுவதில்லை. நீங்கள் இதில் எப்படிச் செயற்பட உள்ளீர்கள்?*

நளாயினி, கொழும்பு

நான் பாராளுமன்றத்திற்குத் தெரிவான பின்பு தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்களை தாக்கும் பிரச்சினைகளுக்கு ஈ.பி.டி.பி தவிர்ந்த மலையகக் கட்சிகள் உட்பட ஏனைய கட்சிகளைக் கூட்டி எல்லோரும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். தமிழர் கைது விவகாரம் பற்றி, அவர்களுக்கு என்ன முறையில் பரிகாரம் காண வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். நான் பாராளுமன்றத்தில் ஆற்றிய இரண்டாவது உரை இதற்குச் சான்று பகரும். இன்னும் நான் மலையகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவர்கள் எக்கட்சியில் இருந்தாலும் அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு அதற்கு எதிராக வாக்களிக்கும்படி பலமுறை வலியுறுத்தியுள்ளேன். இன்னும்



இன்றும் வடகிழக்கைப் பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகளே வடகிழக்கு தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஏற்று வடகிழக்குப் பிரச்சினைக்கு ஒரு முடிவை உடனடியாகக் காண வேண்டும். இதுதான் யதார்த்த நிலை. இதை எவரும் உணர்வர். நாம் விலை போகக் கூடிய சரக்குகள் அல்ல.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து அவரது கட்சியைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக செயற்பட விட வேண்டும் எனக் கேட்டுள்ளேன். இந்த முயற்சியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வேன்.

*யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நீங்களும் கொழும்பிலேயே தங்கி விடுவீர்களா?*

தாரிணி, வத்தளை

நான் எங்கே இருந்தாலும் தமிழர் பிரச்சினையில் கண்ணும் கருத்துமாக இருப்பேன். நான் கொழும்பில் இருந்தும், தமிழ் இனத்திற்காக அப்பாவி இளைஞர்களுக்காக குமார் செய்த தொண்டை தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றேன். இது அனைவரும் அறிந்ததே. ஆனால், யாழ்ப்பாணம் போய் அங்கிருந்து கொண்டும் எனது பாராளுமன்ற கடமைகளை கவனிப்பேன். நான் தேவையான போதெல்லாம் யாழ் போவேன்.

*ஒரு சட்டத்தரணியாக நீங்கள் பல மனித உரிமை வழக்குகளில் முன்னின்று உழைத்திருக்கிறீர்கள். ஒரு பா.உ.வாக இருக்கும் நிலையில் இங்குள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் சக்தியுடன் செயற்பட ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா?*

சுகன், நாவலப்பிட்டிய

நான் பலகாலம் சட்டத்தரணியாக இருந்து கொண்டு மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நீதிமன்றங்களிலும் வெளியிலும் பாடுபட்டுள்ளேன். இன்னும் இங்கே நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் அவை நடைபெற ஏதுவாக இருக்கும் காரணியான பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பற்றியும் வெளிநாட்டிலுள்ளவர்களுக்கும் இன்னும் வெளிநாட்டிலிருந்து என்னை வந்து சந்திக்கும் வெளிநாட்டு மனித உரிமை வாதிகளுக்கும் நான் நல்ல முறையில் விளங்கப்படுத்தியுள்ளேன். என்னுடைய அனுபவத்தைப் பாவித்து இங்கே இருக்கும் மனித உரிமை அமைப்புக்களுடன் நான் பாராளுமன்ற உறுப்பினர் என்ற கோதாவில் சேர்ந்து செயற்படுவேன். உதாரணமாக அண்மையில் நடந்த பிந்துனுவெவ படுகொலை பற்றியும் ஒரு மனித உரிமை அமைப்புடன் சேர்ந்து செயற்பட்டு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். இந்த விடயம் சம்பந்தமாக அவர்களுடன் சேர்ந்து அண்மையில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டையும் நடத்தியுள்ளேன். தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் கரிசனையுடன் இருக்கும் அமைப்புக்களுடன் சேர்ந்து செயற்படுவேன்.

*குமார் பொன்னம்பலத்தின் கொலைச் சூத்திரதாரிகளைக் கண்டு பிடிப்பதில் உங்கள் கட்சி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

சாந்தன், கல்கிசை

குமாரின் கொலையைப் பற்றி நானும் எமது கட்சியும் அவர் இறந்த நாள் தொட்டு இன்று வரை மிகவும் கரிசனையுடன் இயங்கி வருகிறோம். நான் இது பற்றி பாராளுமன்றத்தில் ஆற்றிய இரு உரைகளிலும் குறிப்பிட்டுள்ளேன். குற்றவாளிகள் எவர் என அறிந்த பின்னரும் கூட அரசாங்கம் இது விடயமாக ஒரு விதமான அர்த்தமுள்ள நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஏதாவது மூடி மறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என அஞ்சுகிறேன். நான் தொடர்ந்தும் இது விடயத்தில் கடும் போக்கைக் கடைபிடித்து கொலையாளிக்கு எதிராக நீதிமன்றில் நடவடிக்கை எடுக்கப் பாடுபடுவேன். எமது முயற்சி கள்வனைப் பிடித்துத் தருமாறு அவனின் தாயிடமே கேட்பது போன்று அமையக் கூடாது.

*திம்புப் பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்ட அடிப்படைகளின் மீது இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என குமார் பொன்னம்பலம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார். பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும் இச்சந்தர்ப் பத்தில் உங்கள் கட்சி அதனை வலியுறுத்தி பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் செயற்படுமா?*

தயாளன், மட்டக்களப்பு

திம்பு பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என எமது தலைவர் குமார் பொன்னம்பலம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார் என்பதை எவரும் அறிவர். அதே கருத்தை நான் பாராளுமன்றத்தில் ஆற்றிய இரண்டாவது உரையிலும் வலியுறுத்தியுள்ளேன். இன்னும் உடனடியாக போர் நிறுத்தத்தைக் கொண்டுவந்து பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கி மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் என்றும் அதன் பின்பு திம்பு கோட்பாட்டிற்கு அமைய அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டும் என்பதையும் எனது உரையில் வலியுறுத்தியுள்ளேன். எமது இந்த நிலையிலிருந்து நாம் அணுவளவும் மாறப்போவதில்லை. இன்றும் வடகிழக்கைப் பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகளே வடகிழக்கு தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்று வடகிழக்குப் பிரச்சினைக்கு ஒரு முடிவை உடனடியாகக் காண வேண்டும். இதுதான் யதார்த்த நிலை. இதை எவரும் உணர்வர். நாம் விலை போகக் கூடிய சரக்குகள் அல்ல.

○

இந்தப் பகுதி தொடரும் தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் கேட்க விரும்பும் உங்கள் கேள்விகளை சுருக்கமாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# சட்டமண்ணும் பச்சை மண்ணும்...

-சிசைரோ

ஒன்றுக்கு மேற்படாத நிற, இன, மத, மொழி, கலாசார, பிரதேச வேறுபாடு-களுக்குட்பட்ட குழுக்களைக் கொண்டிராத நாடுகள் உலகில் ஐந்து தான் இருக்கின்றன என்கின்றார்கள். ஏனைய நாடுகளிலெல்லாம் பல்வேறுபட்ட மக்கள் குழுக்கள் தான் அரசியற் சமூகமாக அமைந்துள்ளன. இங்கெல்லாம் பிரச்சினைகள் இல்லாமலுமில்லை. அவற்றுக்கான சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்படாமலுமில்லை. ஆனாலும் பிரச்சினைகளின் பரிமாணத்துக்கு ஏற்ப இந்த முயற்சிகள் வெற்றியளிக்கலாம். அல்லது அங்ஙனம் செய்யத் தவறி விடுவனவும் உள்ளன. இந்த வகையில் இலங்கையின் இனப்பிரச்சினையின் பரிமாணமம் முற்றிலும் தனித்துவமானது தான்.


இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அரசியல் ரீதியில் சிறுபான்மை மக்கள் தாம் அரசாங்கத்தில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றே முறையிட்டு வந்துள்ளார்கள். அதற்குப் பதிலாக அவ்வப்போது வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு 1956, 1958, 1960, 1968, 1977, 1981, 1983 போன்ற வருடங்களில் பெருமளவிலும் வேறு சில சந்தர்ப்பங்களில் சிறிய அளவிலும் இனக்கலவரங்கள் வெடித்துள்ளன. உயிர், உடைமைகள் மட்டுமன்றி தமிழர் தம் தன்மானமும் சூறையாடப்பட்டதே வரலாறு. ஆயின், 1983 கலவரத்தின் பாரிய தன்மையின் விளைவாக தமிழினமும் வன்முறைக்குப் பதில் வன்முறை தான் என்று கோதாவில் இறங்கியுள்ளது. என்ன தான் பயங்கரவாதம் எனச் சித்திரிக்க முனைந்தாலும் பின்னைய வன்முறையின் நெறி-முறைத் தன்மைக்கான அத்திவாரம் (The foundation of legitimacy) இன்னும் அப்படியேதான் உள்ளது. ஒரே நாட்டுக்-குள் அந்நியர் என்ற உணர்வு முன்னெப்-போதையும் விட இப்-போது தான் தீவிரமாக வேர் பதித்து வருகின்றது. வெளி விவகார அமைச்சரின் ஒக்ஸ்போர்ட் ஆங்கிலமும், ஜனாதிபதியின் சமாதானத் திருமுகமும் இந்த உணர்வினை அகற்றுவதில் படுதோல்வியைச் சந்தித்துள்ளமையை அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

"வடக்கு-கிழக்குக்கு வெளியில் தமிழர்கள் எவ்வித பிரச்சினையுமின்றி வாழ்கின்றார்கள். 83 கலவரத்தையிட்டு பெரும்பான்மையின மக்கள் மிகவும் மன வருத்தமடைந்துள்ளார்கள். இனிமேல் அப்படியொரு போதும் நடைபெற அவர்கள் இடமளிக்கப் போவதில்லை. பயங்கரவாதிகள் மட்டுமே இங்கு அமைதியை விரும்பாதவர்-களாக உள்ளார்கள்" என்று எமது வெளி விவகார அமைச்சர் அழகாகப் பிரசங்கித்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதில் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றார். சமாதா-னத்துக்குத் தடையாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமே என்பது தான் ஜனாதிபதியின் பிரச்சாரமுமாகும். வட-கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழர்களைப் பொறுத்தளவில் தனி நாட்டை அவர்கள் விரும்பியதே இல்லை என்றும் ஆட்சியாளர்கள் அடிக்கடி பட்டிமன்றம் நடாத்துவார்கள்.

முன்னே குறிப்பிட்ட கலவரங்கள் ஏதோவொரு விதத்தில் தமிழர்களால் தூண்டப்பட்டதே என்பதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்து அவற்றைச் சர்வதேச சமூகத்திடம் முன்வைப்பதே சிங்களப் புத்திஜீவிகளது வேலையாகவும் இருந்து வந்துள்ளது. முழு உலகமுமே அதிர்ச்சியுடன் பார்த்து நின்ற 83 கலவரத்தையே அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா "சிங்கள மக்களது ஒட்டுமொத்தமான பதிலளிப்பு" என்று வர்ணித்தவர் அல்லவா? ஆனால் உண்மையில் 83 கலவரத்துக்குப் பின்னர் சிங்களச் சமூகமும் நல்ல பாடம் படித்திருக்கின்றது என்று தான் கூற வேண்டும்.

நன்கு திட்டமிட்ட முறையிலும் காதும் காதும் வைத்தாற் போல் அரங்கேற்றப்படும் கொலைகளின் மூலம் இந்தப் புத்திசாலித்தனம் வெளிப்படுத்தப்படுகின்றது. இந்தக் கண்ணோக்கில் தான் அண்மைய பண்டாரவளைப் படுகொலைகளையும் நாம் நோக்க வேண்டும் . இதில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் சில சம்பவங்களை ஞாபகப்படுத்திப் பார்க்கலாம்.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்தோரில் அழைத்துச் செல்லப்பட்ட 150 பேர் கொல்லப்பட்டமை, குறவர் கூட்டமொன்று கொன்றொழிக்-கப்பட்டமை, மயிலந்தனைக் கிராமத்தில் 35 பேர், திருகோணமலை குமாரபுரம் கிராமத்தில் 24 பேர், பொல்கொட வாவியில் மிதந்த 15 சடலங்கள், களுத்துறைச் சிறைச்சாலையில்



கொல்லப்பட்ட இரு கைதிகள் என்றவாறாக யாவும் தமிழர்களுடையவையே. இந்த உண்மையைக் கண்டறிவதற்கு விசாரணைக் கமிஷன் அவசியமில்லை. ஆனால் எம்பிலிப்-பிட்டியவில் இராணுவத்தினால் காணாமல் போகச் செய்யப்பட்ட மாணவர்களைப் பொறுத்தளவில் கமிஷன்கள் துரித வேகத்தில் செயற்பட்டுத் தீர்ப்புக்களும் வழங்கப்பட்டு விட்டன.

83 ஜூலையில் வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழர்களையும் பொறுத்தளவில் இன்றுவரை எந்த விசாரணையும் கிடையாது. ஆட்சியாளர் எந்தப் பொருத்தமான அலங்கார முகத்தைப் போட்டுக் கொண்டாலும் அவர்களால் மறைக்க முடியாத நிரந்தர உண்மையொன்று உள்ளது. அது தான் அவர்களது இன ரீதியிலான அணுகுமுறை என்ற முகமாகும். தமிழர்கள் கொல்லப்பட்ட போதிலெல்லாம் விசாரணைகள் கிடையாது, நஷ்ட ஈடு கிடையாது, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதும் இல்லை. மாறாகச் சிங்கள மக்கள் இறந்தால் உடனடி விசாரணைகளும் நஷ்டஈட்டுப் பேச்சுக்களும் காது புளிக்கும்வரை பிரபல்யப்படுத்தப்படும்.

**இரத்தினபுரியில் பாராளுமன்ற உறுப்பினர் நந்தா எல்லாவெல சுட்டுக் கொல்லப்பட்டபோது எதிராளி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. ஆனால் திருகோணமலையில் தங்கத்துரை பா.உ. சுட்டுக் கொல்லப்பட்ட போது எதிராளி பயங்கரவாதியாகி விடுகின்றார். இறந்தவர்கள் இருவருமே பா.உ.க்கள் தான். எப்படி ஒரு வழக்கு சாதாரண சட்டத்தின் கீழும் மற்றைய வழக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும் கொண்டு வரப்படுகின்றது? யார் இதனைத் தீர்மானிக்கின்றார்கள்?**

## ஜனநாயகத்தின் மீள்பதிப்பா?

ஜனநாயக நாடொன்றில் அரசாங்கம் மக்கள் மீது கட்டுப்பாட்டினைச் செலுத்து-வதற்கான அதிகாரத்தை மக்களிடம் இருந்தே பெறுவதாகக் கூறப்படும். இதனையே ஆட்சியாளர் Mandate என்று கூறுகின்றார்கள். இந்த ஆணை நாட்டின் எல்லைக்குள் உள்ள எல்லா மக்களிடமிருந்தும் பெறப்பட்டதாக இருக்க வேண்டும். மாறாக, ஓரினத்திடமிருந்து மட்டும் பெறப்பட்டதாகவோ அல்லது ஒரே விதமான கொள்கையைக் கொண்டோரி-டமிருந்து மட்டும் பெறப்பட்டதாகவோ இருக்கக் கூடாது என்பதே ஜனநாயகத்தின் ஆணிவேராக உள்ள விடயமாகும்.

சட்டத்தின் முன் எல்லோரும் சமன், சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு எல்லோரும் உரித்துடையவர்கள் என்ற கோட்பாடுகள் மட்டுமன்றி சட்டவாட்சிக் கோட்பாட்டுக்கும் அடித்தளமாக விளங்கவேண்டியது அரசாங்கம் பாரபட்சமின்றிச் சட்டத்தைப் பிரயோகிக்கும் என்பதாகும். அத்தகைய நிலையில்லாத போது ஆயுதப் போராட்ட நிலையேற்படும் என்பதும் அப்போராட்டம் நியாயப்படுத்தப்படலாம் என்பதுக்கும் ஆதாரமான மனித உரிமைகள் பிரகடனங்கள் நிறையவே உள்ளன.

ஆனால் இலங்கையில் நடப்பது தான் என்ன? கொல்லப்பட்டவர்கள் யாவரும் ஓரினத்தைச் சேர்ந்தவர்களாகவும் கொல்-வோர்கள் யாவரும் இன்னொரு இனத்தைச் சேர்ந்தோராகவும் இருந்தால் இதற்கு என்ன பெயர்? இது இனப்படுகொலை இல்லையா? கதிர்காமரின் மனித உரிமைகள் அகராதியில் இதற்கு என்ன பெயர்? 1983 இலிருந்து இது வரை இத்தகைய கொலைகளுக்காக ஒருவராவது தண்டிக்கப்பட்டுள்ளனரா? அங்ஙனம் தண்டிக்கப்படாமல் போனது மட்டும் சிங்களவர்களாகவே இருக்கின்-றார்களே . அது எப்படிச் சாத்தியமாகின்றது? அரசாங்கத்தின் கட்டுப்பாடு கட்டாயமாக நிலவ வேண்டிய சந்தர்ப்பங்களிலும் இடங்களிலும் மட்டுமே இக்கொலைகள் நிகழ்ந்துள்ளனவே? இதிலுள்ள சூக்குமம் என்ன? ஒரு தனிநபர் கொல்லப்பட்டால் அது சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகின்ற போது 100 பேர் கொல்லப்-பட்டால் அது தண்டிக்கப்பட வேண்டிய குற்றமல்லாமல் போய்விடுமா? அப்படியானால் இனிமேல் கொலை செய்வோர் பெருமளவு எண்ணிக்கையில் இறங்கினால் தப்பித்து விடலாம் என்ற புதுச் சித்தாந்தமேதும் உள்ளதா? இதுவே தான் இலங்கை யின் ஜனநாய கத்தின் மீள் பதிப்பா என்று கேட்கவே தோன்றுகின்றது.

## தென்னிலங்கைப் பாதுகாப்பானது தானா?

வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் கோரிவரும் ஏராளமான தமிழர்களைப் பொறுத்தளவில் அவர்கள் வெறுமனே பொருளாதார அகதிகளே என்று பட்டஞ் சூட்டப்பட்டுத் திருப்பி அனுப்பப்படு கின்றார்கள். அவர்களிடம் மேற்கு நாட்டு அதிகாரிகள் கூறும் ஆலோசனை இதுதான்: உங்களுக்கு வடக்குக் கிழக்கில் பாதுகாப்பு இல்லை என்றால் தெற்கில் தாராளமாக வாழலாம் தானே. எத்தனை இலட்சம்பேர் அங்கு பாதுகாப்பாக வாழ்கின்றார்கள் பாருங்கள்! வேண்டுமென்றால் அலவன்ஸ் தருகின்றோம். போய் அங்கு வசியுங்கள்." தெற்கில் வசிப்பதன் இலட்சணம் அந்த அதிகாரிகளுக்கு இப்போதாவது தெரிய வந்திருக்குமா? அல்லது தெரியப்படுத்துவது அவசியமாகாதா?

இலங்கையில் நடக்கும் இனரீதியிலான படுகொலைகளின் இன்னொரு முக்கிய பரிமாணமும் அவதானிக்கப்பட வேண்டும். வெலிக்கடையிலுஞ் சரி தற்போது பிந்துனுவேவவிலுஞ் சரி, கொலைகள் திட்டமிடப்பட்டே நடாத்தப்படுகின்றன.

படைவீரர்கள் அல்லது சிறைச்சாலை அதிகாரிகள் சம்பந்தப்படுகின்றார்கள். இத்தனைக்கும் துரிதமான விசாரணைகளுக்கு உதவவென்று தானே அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் இன்னும் நடைமுறையிலுள்ளன. இவற்றின் பாவிப்பு என்பது தமிழர்கள் பாதிக்கப்படும்போது மட்டுமேன் பாவிக்கப்படுவதில்லை? இவற்றின் பாவிப்பு அரசுக்கு மட்டுமேயுரிய பணியில்-லையா? நாடு சுதந்திரமடைந்ததாகக் கூறப்-படும் காலத்திலிருந்து இன்று மட்டும் அரசு குறிப்பிட்ட ஓரினத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அவர்கள் குற்றமிழைக்கும்போது தண்டனை வழங்காதிருந்து வருமாயின் அது இன ரீதியிலான அரசாகாதா? அப்படியானால் மற்ற இனத்தை ஆள்வதற்கான அதிகார ஆணை அதற்கு உள்ளதாகக் கூற முடியுமா?

சுருங்கக் கூறின் தமிழ் மக்கள் இந்த அரசு தங்களுக்குமான அரசு என்ற நம்பிக்கையை ஏற்படுத்துமளவிற்கான ஏதேனும் நடவடிக்கை-களை இதுவரை எடுத்துள்ளதா? அல்லது அரசு என்பது தமிழ் மக்கள் குற்றமிழைப்பதைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்காக மட்டுமுள்ள ஒரு அமைப்புத்தான் என்ற யதார்த்தம் தமிழ் மக்கள் மனங்களில் வளர்க்கப்படுகின்றதா? அப்படியாயின், இதனது உளவியற் தாக்கம் எப்படிப்பட்டதாக அமையப் போகின்றது? அரசாங்கத்தின் பாதுகாப்பில் உள்ளவர்களே வேட்டையாடப்பட முடியுமாயின் சாதாரண-மாக வீதியிற் செல்லும் ஒரு தமிழரின் உயிருக்கு என்ன உத்தரவாதம்? அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாப்பது அவசியம் என்ற முடிவுக்கு வரலாமா? அப்படியானால் நாட்டில் இருக்கும் சட்டத்தால் யாருக்கு என்ன பயன் கிட்டுகின்றது? அரசுக்கும் தமிழருக்கும் என்ன தொடர்பு? இது இறுதியில் எங்கு போய் முடியும்?

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டின் அடிப்படையை வலியுறுத்துமாப் போல் அண்மைக்கால நிகழ்வுகள் அமைந்துள்ளன. மலையகத்தில் கூட அடக்குமுறைக்கான எதிர்ப்புணர்வு எந்தளவுக்கு உள்ளது என்பதைப் பரீட்சிக்குமாப் போன்றே அண்மைய கலவரங்கள் அங்கு அரங்கேறியுள்ளன. நல்லவேளையாக மலையக மக்கள் காட்டிய ஏகோபித்த எதிர்ப்புணர்வு ஆட்சியாளருக்கு எச்சரிக்கை வேட்டாகவே அமைந்து விட்டது.

சிறைச்சாலைகளும் புனர்வாழ்வு முகாம்களும் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் தென்னிலங்கையில் மட்டுமே அமைய வேண்டும் என்பதும் தலைவிதியாகிப் போய்விட்டது. உண்மையில் இதுகூடச் சர்வதேச சட்ட விதிகளுக்கு மாறானதாகும். தண்டனை என்பது ஒருவரது உயிர்வாழும் உரிமையில் குறிப்பிட்டளவு மட்டுப்பாட்டை விதித்தலாகுமே தவிர அவரை ஒன்றுக்கும் உதவாதவனாக மாற்றுவதல்ல என்பது ஒப்புக் கொள்ளளப்பட்ட விடயமாகும். ஆக அவர்களைக் கட்டாயமாகத் தென்னிலங்கை யில் தடுத்து வைப்பது என்பது உள் நோக்குடனான செயலென்றே வாதிட முடியும்.

இவைபோன்ற விடயங்களில் சர்வதேச சமூகம் அதிகளவு அக்கறை காட்டாமல் அரசாங்கம் சமர்ப்பிக்கும் வெறும் புள்ளிவிவரக் கோலங்களை மட்டும் நம்பிக் கொண்டு உதவியளித்து வருமாயின் நாட்டில் கொலைகளின் எண்ணிக்கைக்கு குறைவெப்படி ஏற்படப்போகின்றது? சாவதேச சமூகத்தின் காதுகளுக்கு எட்ட வேண்டிய முக்கிய விடயம் இதுவாகும்.

தொடர்ச்சி 19

நன்றி - நூலகத்திட்டம்



- எம்.எச்.முஸ்தாக் முகம்மட்


# அஷ்ரப்பின் மரணம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் மௌனம் சாதிப்பதேன்?

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுத் தடயங்களை எம்.எச்.எம். அஷ்ரஃப் என்ற மனிதனின் செயற்பாடுகளுக்கப்பால் நின்று கற்பனையில் கூட கனவு காண முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளது. 16 செப்டெம்பர் 2000 ஆண்டின் தினத்தினை நினைத்துப் பார்க்கையில் நெஞ்சம் கனக்கும் உணர்வுகள் ததும்பிக் கொண்டிருக்கி ன்றன. தலைவரைத் தேடியலைய வேண்டிய கட்டாயத் தேவை முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் விடுதலையும் தனித்துவமும் உணரப்படும் வரை சதா போராடிக் கொண்டிருந்த தலைவர். பாராளுமன்ற நாற்காலிகளிலிருந்து முஸ்லிம் சமூகத்திற்கு அவ்வப்போது ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு தேடித் தந்து தேசிய நீரோட்டத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு முகவரி தேடித் தந்த முஸ்லிம்களின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் இல்லை மறைக்கப்பட்டாரா என்பது இன்னுமே மக்கள் மத்தியில் உணர்த்தப்படாத விடயம்.

முஸ்லிம் சமூகத்திற்கு காலத்தால் ஏற்பட்ட தடயமும் போராட்ட வீரர்களின் துப்பாக்கி அச்சுறுத்தல்களும் மலிந்து கிடந்த காலத்தில் தலைவிதி என்று மௌனித்துப் போன சமூகத்தில் எம்.எச்.எம்.அஷ்ஃரப் என்ற தனி மனிதன் முஸ்லிம் சமூகத்தை தலையில் சுமக்க வெளிப்பட்டார். இந்த தலைவரின் வரலாற்றுப் பாதையில் துவண்டு திரிந்து போராளிகளாக இச்சமூகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட சில்லறைத் தலைவர்களும், மூத்த இணைத் தலைவர்களும் முஸ்லிம் காங்கிரஸ் எனும் போராட்டத் தளத்தில் குளிர் காய நினைக்கின்றார்கள். இத்தலைவர்கள் அவர்களுக்குள்ளேயே பட்டம், பதவிகளுக்காய் போட்டா போட்டி போட்டுக் கொண்டு முஸ்லிம் காங்கிரசுக்கு தனி நபர்களின் பெயர்களைச் சூடி அவர்களுக்கு பதவி பெற்றுக் கொள்ளும் பெரும் சதி நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தலைவர் எம்.எச்.எம். அஷ்ஃரப்பின் மறைவு குறித்து கேள்விகளோ, அறிக்கைகளோ விட்டு பேச முடியாமல் போனது தான் என்ன? பேசா ஊமைகளின் குருட்டு நியாயத்திற்கு பதவிகள் உணர்த்தி விட்டதா? சந்தேகங்களை அவரின் பாதுகாப்புக்காக தீர்த்துக் கொண்டாரா? இல்லை பதவிகளைத் காக்கும் முதன் முயற்சியா, இல்லை உயிர்களைக் காக்கும் முதற் கட்டமா?

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும், முஸ்லிம் காங்கிரசிற்கும் தொடர்ந்து நடைபெற்ற முறுகல் நிலையும் கடைசிக் கட்டத்தில் அஷ்ஃரப்பின் வெளியேற்றமும் தீர்க்கதரிசனம் சொல்லும் இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களை இனம் காண வேண்டும்.



மூன்று நான்கு தடவைகள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் முஸ்லிம் சமூகத்தை பேரம் பேசிய றவூப் ஹக்கீம் ஏன் தலைவர் அஷ்ஃரப்பின் மரணம் திட்டமிட்டு செய்யப்பட்ட மிகப் பெரும் சதி என்று தெரிந்தும் இந்தச் சதிகாரக் கும்பலை இனம்காண முன்வரவில்லை. தலைவர் எம்.எச்.எம். அஷ்ஃரப்பின் மறைவிற்குப் பின்னர் துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பதவி தருவதாகக் கூறி ஜனாதிபதியால் றவூப் ஹக்கீம் ஏமாற்றப்பட்டபோது தலைவரின் மரணம் ஓர் சதி, மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று குரலுரைத்தாரே! இப்போது சதி இல்லையென்று அமைச்சர் தெரிந்தும், கூட சந்திரிகாவே தனது காலடிக்கு வந்து விட்டார் என்ற அகங்காரத்தில் வாய் கூசாமல் நிபந்தனையற்ற ஆதரவு என்று கூறிய பேரியல் அஷ்ஃரப் ஏன் கணவரின் மரணம் ஓர் சதி. இதனைச் செய்தவர்களை இந்தச் சமூகத்திற்கு இனம்காட்ட வேண்டும் என்று ஓர் வார்த்தையும் சொல்லவில்லை? அதிகார வெறியால் கணவரை மறந்தாரா? இல்லை அக்கால கட்டம் காலநிலை சீர்கேடு என்பதை உணர்த்தியதா?

அஷ்ஃரப்பின் மரணம் இயற்கையாக நேர்ந்த ஒன்றல்ல. மாறாக, அம்மரணம் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரும் சதியாகும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது என்று சரிநிகர் 203வது இதழில் "வரலாறு கைமாறும் மிகப் பெரும் பின்னடைவு" எனும் தலைப்பில் அறுதியாகக் கூறியிருக்கின்றார் தலைவர் அஷ்ஃரப்புடன் கட்சி, தனிப்பட்ட ரீதியாக மிகவும் நெருங்கிப் பழகிய அவரது நண்பர். அவை மட்டுமல்ல மூன்று பாரிய வெடிச் சத்தங்களுடன் புகை கக்கியவாறு ஹெலி விழுந்தது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறினார்கள். இரண்டு தரைப் படைவீரர்கள் பயணம் செய்தார்களே அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதா?

விமான ஓட்டிகளின் சடலம் மீட்கப்பட்டதா? அரச மரியாதையுடன் எங்கு புதைக்கப்பட்டது? உலக சரித்திரத்தில் கறுப்புப் பெட்டி கருகிப் போனதாய் நம்பச் சொல்கிறார்களே என்ன நியாயம் இது?

மூதூர் பள்ளிவாசல் முஸ்லிம் சகோதரர்களின் உடல்கள் சல்லடையாக்கப்பட்ட போது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரினவாத ஏஜென்டுகளாக குரல் கொடுக்கவில்லை என்று முஸ்லிம்களுக்கென்று தனிக் குரலாய் தனிக்கட்சி வளர்த்த அஷ்ஃரப்பின் மரணம் பற்றி பேசாதவாறு கட்சியின் சில்லறைத் தலைவர்களை பதவி எனும் பாலூட்டி பேரினவாதிகளின் கூலியாட்களாக மாற்றிவிட்டு மரணித்துப் போனாரா?

மூத்த தலைவர் என்று அறிக்கைகளால் காலம் கடத்தும் மனிதர் அஷ்ஃரப்பின் மரணத்தில் மனிதாபிமானம் பார்க்கின்றார். அவரின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காய் அஷ்ஃரப்பின் மரணம் காலநிலை சீர்கேடு தான் என்கின்றார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலைக்கு நியாயம் கேட்டு வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் தலைவர் ஏன் அஷ்ஃரப்பின் மரணத்திற்கு ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. சம்மாந்துறையில் பிரதி அமைச்சர் பதவி யூ.எல்.எம். முகீதீன் எம்.பிக்கு கிடைக்காததற்கு வீதியெங்கிலும் டயர்களை எரித்து ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் கூட்டம்

▶ 19

- சுனந்த தேசப்பிரிய

# பிரதமரும் சொல்ஹெய்மும்

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் கடந்த கால தேர்தல் பிரச்சாரங்கள் முழுவதும் சமூக அநீதிகளையும், போரின் வெற்றியையும் வலியுறுத்தி வந்தன. 1994ல் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த எடுத்த தீர்மானம் தவறு என்றும், இதன் மூலம் பொ.ஐ.மு ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டது எனவும் அவர் நாடு முழுதும் பிரச்சாரம் செய்தார். அவரது பிரச்சார இயக்கங்கள் புலிகள் இயக்கத்தை போர் செயற்பாடுகள் மூலம் அழித்தொழிக்க வேண்டும் என வலியுறுத்தியதுடன், அவ்வாறு செய்வதாக உறுதிமொழியும்



வழங்கின. பொ.ஐ.மு சமர்ப்பித்த அரசியலமைப்பு யோசனைகளை மீண்டும் சமர்ப்பிக்கப் போவதாக அவர் உறுதியளித்தார். நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் குறித்து பிரதமர் எதிர்ப்புணர்வையே கொண்டிருந்தார். பொதுத் தேர்தல் பிரச்சாரங்களில் இந்நாட்டு பொதுமக்களுக்கு பொ.ஐ.மு, பிரபாகரனைத் தோற்கடிக்கும் வரை போரிடுவதாகத் தெரிவித்திருந்தது.

1994ல் போனறன்றி 2000ல் பொ.ஐ.மு பொதுத்தேர்தலை யுத்தவாத நிகழ்ச்சி நிரலுடனுயே சந்தித்தது எனலாம். அன்று தொடக்கம் பொ.ஐ.மு.வின் பாரிய மற்றும் மிக மோசமான தாக்குதல்கள் புலிகளுக்கு எதிராகவே காணப்பட்டன. பொ.ஐ.முவின் தேர்தல் பிரச்சாரங்களை தொடர்ச்சியாக அவதானித்தவர்களுக்கு பேச்சுவார்த்தை மூலமான சமாதானம் தேவையில்லை என்ற அதன் கருத்து புலனாகும். தந்திரோபாயமான வகையில் பொ.ஐ.மு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு விரோதமான, இறுதி யுத்த வெற்றிக்கு சார்பான அரசியலையே கொண்டு நடாத்தியது.


எனினும், பொதுத்தேர்தலின் பின்னர் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நேருக்கு நேர் பேச்சுவார்த்தை நடாத்த நோர்வேஜிய தூதுவரான எரிக் சொல்ஹெயிமுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது. இவ் அனுமதி வெறுமனே பிரபாகரனைப் பார்த்து வர வழங்கிய அனுமதி அல்ல. மாறாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் குறித்து ஆராயவே. இலங்கை அரசாங்கம் சொல்ஹெயிமின் சமாதான தூதர் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டது. இது உண்மையான அக்கறையின் காரணமாகவா அல்லது சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவா செய்யப்பட்டது என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. புலிகள் சொல்ஹெய்ம் அவர்களுக்கு அழைப்பு விடுத்ததும் உண்மையான அக்கறையின் காரணமாகவா அல்லது சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவா என்ற கேள்வியும் எஞ்சியுள்ளது. எவ்வாறாயினும், வாக்காளர்கள் மத்தியில் யுத்தவாத நிகழ்ச்சி நிரலையும், சர்வதேச சமூகத்திற்கு சமாதான நிகழ்ச்சி நிரலையும் சமர்ப்பிக்க பொ.ஐ.மு நடவடிக்கை எடுத்துள்ளமையை தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது.

சொல்ஹெய்ம் அவர்களின் வன்னி சமாதான நடவடிக்கையைப் பொ.ஐ.மு தேர்தல் பிரச்சார இயக்கத்தின் தலைவரான தான் கூட அறியாதிருந்ததாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்திருந்தார்.

தற்போது சொல்ஹெயிம் அவர்களின் சமாதான நடவடிக்கைகளுக்கு முழு சர்வதேச சமூகத்தினதும் ஆதரவு தேவையென குறிப்பிடப்பட்டுள்ளது. நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை தான் முழுமையாக அங்கீகரிப்பதாக ஐரோப்பிய சங்கத்தின் பேச்சாளர்கள் தெரிவித்திருந்தனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளும், இந்தியாவும் இத்தலையீட்டிற்கு கடந்த மே மாதம் ஆதரவு தெரிவித்திருந்தன.

எனினும், ஐரோப்பா சங்கத்தின் முடிவு குறித்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இன்னும் மௌனம் சாதித்து வருகின்றார்.

எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் வன்னிக்கு சென்று பிரபாகரனை சந்தித்து மேற்கொண்ட கலந்துரையாடல் முழுவதுமாக வெளிப்படுத்தப்படாத போதும், மிகவும் முக்கியமான விடயமான பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வு குறித்து தான் முன்வைத்த அடிப்படைகளை சொல்ஹெயிம் அவர்கள் முன்வைத்துள்ளார். இலங்கையில் சுதந்திர அரசுகள் இரண்டு உருவாகுவது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தீர்வல்ல என்பதுடன், இந்நாட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சாதகமான அரசியல் தீர்வு அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது. இந்நிலைப்பாடு சர்வதேசப் பிரஜைகளின் கருத்து என சொல்ஹெய்ம் அவர்கள் அரசுக்கும், புலிகளுக்கும் தெரிவித்திருந்தார். உண்மையில் இந்த



நிலைப்பாடுகள் இந்தியாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளாகும். தற்போது இந் நடைமுறைகள் சர்வதேச சமூகத்தினால் இலங்கை

▶ 19

நன்றி - நூலகத்திட்டம்



# பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்கு செய்ய வேண்டியது என்ன?

சோதிடம் பார்ப்பதற்காக ஆலாய்ப் பறப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு சோதிடத்தில் நம்பிக்கை இருப்பதில்லை.

அதிலும் பலருக்கு சொல்பவரில் நம்பிக்கை இருக்காது.

ஆனாலும், சோதிடம் பார்ப்பதை இந்தக் காரணங்களுக்காக அவர்கள் விட்டு விடுவதில்லை. ஒரு சோதிடர் மாறி இன்னொரு சோதிடர், எண் சாஸ்திரத்திலிருந்து ஜாதகக்



குறிப்பு, ஜாதகக் குறிப்பிலிருந்து கைரேகை, கைரேகையிலிருந்து நினைத்த காரியம் சொல்லல், காண்டம் வாசித்தல் என்று மாறி மாறி சோதிடம் கேட்பதில் அவர்கள் ஒருபோதும் களைத்துப் போவதில்லை.

நம்பிக்கை இல்லாத ஒன்றிற்காக, நம்பிக்கை வைக்க முடியாதவர்களிடமெல்லாம் ஏன் தான் இவர்கள் ஓடிப் போகிறார்கள்?

காரணம் இதுதான். சோதிடம் என்பது பொய்யாக இருக்கட்டும்: சொல்பவர் வெறும் புளுகராக இருக்கட்டும்: அதெல்லாம் முக்கியம் இல்லை. அதை விடயம் முக்கியம் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தான். நாம் எதைக் காண, எதை அடைய, எப்படி மாற ஆசைப்படுகிறோமோ அவை நடக்கும் என்று யாராவது சொன்னால் கேட்கச் சந்தோசமாக இருக்கிறது. இந்த சந்தோசத்திற்காகத் தான் இப்படி ஆலாய்ப் பறக்கிறார்கள் இவர்கள்.

"பேய்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனாலும், பயமாக இருக்கிறது" என்று ஒரு முறை புதுமைப்பித்தன் எழுதியிருந்ததை படித்த ஞாபகம் இருக்கிறது. அதேபோல் தான் சோதிடமும். 'சோதிடத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், கேட்பதில் சந்தோசமும், ஒரு சுகமும் இருக்கிறது!'

'ஏன் இந்தச் சோதிடக்கதை திடீரென்று' என்று வாசகர்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது. ஆனால், இந்தச் சோதிடத்தின் ஞாபகம் இப்போது வந்ததற்கு நிச்சயமாக ஒரு காரணம் இருக்கிறது.

'புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடக்கவுள்ளது', 'நிபந்தனையற்ற பேச்சுக்கு பிரபாகரன் தயார்', 'விரைவில் லண்டனில் பேச்சுவார்த்தை நடைபெறும்?', 'புலிகளின் உயர்மட்டக்குழு லண்டன்/நோர்வே பயணம்?', 'பிரபாகரனும் சந்திரிகாவும் நேரடியாக பேசுவார்கள்?' போன்ற செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கையில் இந்த சோதிட ஞாபகம் வருவதை தவிர்க்க முடியவில்லை.

ஆம்! பேச்சுவார்த்தை வெற்றி பெறுமோ, இல்லையோ, அது நடக்கப்போகிறது என்று கேட்பதே அத்துணை சந்தோசத்தை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது. ஆம், கடந்த இரண்டு தசாப்த காலமாக யுத்தத்தின் நெருக்கடிக்குக் கீழ் அவல வாழ்வு வாழ்ந்து வரும் மக்களுக்குள் 'சமாதானப் பேச்சு' என்பது ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றாகத் தோன்றுவதில் ஆச்சரியம் இல்லை. மனித வாழ்வு அவலங்களையும், நெருக்கடிகளையும் சந்திக்கிற வேளைகளில் இத்தகைய நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புக்கும் உள்ளான மனோநிலைக்கு மனிதர்கள் உந்தப்படுவது மிகவும் இயல்பானதே.

இன்று, பேச்சுவார்த்தைக்கு தயார் என்ற அறிவிப்பை புலிகள் அறிவித்தது தான் தாமதம், மக்களின் ஆசைகளும் ஆர்வத் துடிப்புகளும் மிகவும் வெளிப்படையாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

ஆனால், பேச்சுவார்த்தை என்பது நல்லதொரு முடிவை அடைவதற்கான ஒரு ஆரம்பம் மட்டுமே. அது ஒழுங்காக நடாத்தப்பட்டு இருதரப்பும் உடன்படுகிற தமிழ் சிங்கள மக்களது தேவைகளையும், அபிலாசைகளையும் முடிந்தளவு தீர்க்க முயல்கிற ஒரு முடிவைக் காணும் மட்டத்திற்கு அது வளர்ந்து வருமா? அல்லது முன்பு பல தடவைகள் திரும்பத் திரும்ப நடந்ததுபோல இந்தப் பேச்சுவார்த்தையும் பாழ்பட்டுப் போகுமா?

இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை என்பது எல்லைகளைப் பிரிப்பதற்கோ, ஒரு சில வசதி வாய்ப்புகளைப் பெற்று கொள்வதற்கான பேரம் பேசலை செய்வதற்காகவோ நடாத்தப்படும் ஒன்று அல்ல. பேசுபவர்களது நல்லியல்பும், உறவும் ஏன் பரஸ்பர நம்பிக்கையும் கூட ஒரு பேச்சுவார்த்தையின் வெற்றியையோ, பிரச்சினைக்கான தீர்வை காண்பதற்கோ பெரிதும் உதவப் போவதில்லை.

உண்மையில், பேச்சுவார்த்தையின் நோக்கம் என்ன? பிரச்சினையை தீர்ப்பதற்கான அடிப்படைகள் எவை? அதை எங்கிருந்து தொடங்க வேண்டும்? இரு தரப்பும் சமரசம் செய்யக் கூடிய விடயங்கள் எவை? உடனடியாக நடைமுறைப்படுத்தப்படக் கூடிய விடயங்கள் என்ன? சமரசம் காண முடியாத விடயங்கள் எவை? போன்ற கேள்விகளுக்கு சரியான பதில் இல்லாமல் அல்லது இவ்விடயங்கள் தொடர்பாக பேச விரும்பாமல் பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக நடாத்த முடியாது.

இன்று இலங்கையின் அரசியல் சூழலை எடுத்தாலோ, இந்தக் கேள்விகள் தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டிய இரு தரப்பாரிடமும் ஒரு உடன்பாடான கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒற்றை ஆட்சியின் கீழ் தீர்க்க முடியாது என்று ஜனாதிபதி சந்திரிகா அரசியலுக்கு வந்த புதிதில் திரும்பத் திரும்பக் கூறி வந்தார் என்றாலும் இப்போதெல்லாம் அவர் அது பற்றிப் பேசுவதில்லை. பிரச்சினையைத் தீர்க்க யுத்தத்தினை நாடிச் செல்பவராகவே இன்று வரை அவர் இருக்கிறார். பேச்சுவார்த்தை, அரசியலமைப்பு மாற்றம் எல்லாம் அதற்காக கத்துபவர்களது வாய்களை அடக்கும் அளவுக்கு அப்பால் இல்லை என்றே சொல்ல வேண்டும். ஐ.தே.கவோ ஒற்றை ஆட்சி என்ற கோட்பாட்டை மிகவும் வலிந்து பிடித்துக் கொண்டு நிற்கிறது. அதற்கு இந்தக் கருத்தை விட்டுக் கொடுத்தால், தான் இளக்காரமான ஒரு கட்சியாக கருதப்பட்டு விடுவோமோ என்று அச்சம். பிடித்ததை விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. பொ.ஐ.முவிலுள்ள சந்திரிகாவையும், ஜி.எல். பீரிசையும் தவிர்ந்த ஏனையோருக்கு குறைந்த பட்சம் இந்த நாட்டில் என்ன நடக்கிறது என்ற பிரக்ஞையே கிடையாது. அவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையை ஒன்றில் சம்பள உயர்வுக்கான ஒரு தொழிற்சங்க பேச்சுவார்த்தை மட்டத்திற்கு இறக்கி யோசிக்கிறார்கள். அல்லது புலிகளின் கொட்டத்தை அடக்கி விட்டு பேசினால் நாம் சொல்வதை புலிகள் கேட்பார்கள் என்று நினைக்கிறார்கள். ஜீ.எல். பீரிசுக்கு நீண்ட நேரம் ஒரு வார்த்தைக்குள் இன்னொரு வார்த்தை கொழுவப்பட்ட படி ஒரு சங்கிலி போல இழுத்து இழுத்து மணிக்கணக்காக பேச முடிகிற அளவுக்கு, பிரச்சினைக்கு நடைமுறை சார்ந்த ஒரு தீர்வுக்கு வழிகாட்டும் பலமோ ஆளுமையோ இருப்பதாக தெரியவில்லை.

ஜே.வி.பி.யோ - இப்போது பாராளுமன்றத்தில் மூன்றாவது பலமான சக்தியாக அது வந்துள்ளது - இனப்பிரச்சினையை இன்னமும் ஏகாதிபத்தியங்களதும் தமிழ் இனவாதிகளதும் கூட்டுச் சதி என்ற அளவுக்கு அப்பால் புரிந்து கொள்ளும் விருப்பத்தையும் தெளிவையும் அறவே இழந்து மந்தித்துப் போய் நிற்கிறது சிவப்பு நிறமும், புரட்சிக் கோசமும் புரட்சியை சாதித்து விடும் என்று பம்மாத்துக் காட்டுகிற அரசியலை மற்றைய அரசியல்வாதிகளை விட 'விஞ்ஞானபூர்வமாக' நடாத்திக் காட்டிக் கொண்டிருக்கிறது. நடைமுறை அரசியலின் யதார்த்தப் பண்புகளை இனவாதிகளின் கண்ணோட்டத்தில் புரிந்துகொண்டு இடதுசாரி சொல்லடுக்குகளால் வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தையையோ இனப்பிரச்சினைத் தீர்வையோ பற்றி அதன் புரிதல் இன்னமும் ஐம்பதுகளில் இடதுசாரிகளிடமிருந்த புரிதல் மட்டத்திற்குக் கூட வளரவில்லை. அடுத்தமுறை பாராளுமன்றத்தில் இன்னும் சில ஆசனங்களை மேலதிகமாக கைப்பற்றிக் கொள்ள என்ன செய்யலாம் என்ற கேள்விக்கு சிஹல உறுமயவின் கோட்பாடுகளில் விளக்கம் தேடிக் கொண்டிருக்கிறது அது.

நாட்டின் பிற அரசியல் இயக்கங்கள் தொழிற்சங்கள், மனித உரிமை அமைப்புகளுக்கும் இவ்விவகாரம் ஒரு 'தலையிடி' மட்டுமே. இதிலிருந்து எப்படியாவது விடுபட்டாக வேண்டும் என்பதற்கு மேல் அவை அதிக அக்கறையை இதன் மீது காட்டுவதில்லை. மனிதாபிமானம், மனித உரிமை, அடிப்படை உரிமை போன்ற 'உரிமைகள்' பற்றிய கண்ணோட்டத்திலிருந்து இந்தப் பிரச்சினையை அணுகுபவர்கள் பெரும்பாலும் பிரச்சினையின் அரசியலை கவனிப்பதில்லை. அரசியல் உரிமை எப்படி இருப்பினும், மனிதாபிமானமும் மனித உரிமையுமே பிரதானம் என்ற பார்வை பலவீதமான கோளாறான முடிவுகட்கு இட்டுச் சென்றுவிடும் ஆபத்துக் கொண்டது. மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் (UTHR) போல, அரசுக்கு ஏவற் பணி செய்யும் ஏஜென்டுகளையொத்த கருத்துகளை வெளியிடுபவர்களாக இந்தப் பார்வை அவர்களை மாற்றிவிடுகிறது. மனிதாபிமானமும், மனித உரிமைப் பிரச்சினைகளும் முக்கியமற்றவை அல்ல என்பதல்ல இதன் அர்த்தம். அரசியலை ஒதுக்கிவிட்டு இவற்றைப் பேசினால் ஒடுக்கு முறையாளருக்கு 'ஒதி'விட்டுக்கொலை செய்தால்' பாவமில்லை' என்று அவர்களது நடைமுறைக்கு ஒரு ஒழுக்கவியல் போதனை மட்டுமே அவற்றால் செய்ய முடியும் என்பது தான் இதன் அர்த்தம். சிறைச்சாலையில் கைதிகள் காலவரையறையின்றி வைக்கப்பட்டிருத்தல், சித்திரவதை செய்யப்படல் என்பன மனித உரிமை மீறல்கள். ஆனால், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் என்ற காரணத்திற்காக கைது செய்யப்படல் 'சட்ட நியதிக்குட்பட்டது'. அவர்கள் கைது செய்யப்பட்டதை உறவினர்கள் உரியவர்களிடம் அறிவிக்காவிட்டால் அது மனித உரிமை மீறல். ஆனால் எந்த உறுதியான குற்றச்சாட்டும் இன்றி கைது செய்யப்படுவது சட்டபூர்வமானது என்ற நிலைக்கு இந்த 'அரசியல் அற்ற' போக்கு இவர்களை இட்டுச் சென்றிருக்கிறது.

தமிழ்க் கட்சிகளோ 'புலிகள் பேசி ஒரு முடிவுக்கு வந்தால் சரி' என்று சொல்வதற்கு அப்பால் 'வேறெதைத் தான் நாம் செய்ய முடியும்' என்ற பாணியில் தமது பாட்டில் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் புலிகள் பேச தயாரென அறிவித்திருக்கிறார்கள். என்னமாதிரியான ஒரு மாற்றுத் தீர்வை முன்வைத்தால் நாம் உடன்படுவோம் என்பதைப் பற்றி புலிகள் இதுவரை முன்வைத்திருப்பவைகள் சரியானவை தான் என்ற போதும், அவற்றில் எவை எவை தொடர்பாக விட்டுக் கொடுத்தலுக்கு வாய்ப்பு உண்டு அல்லது இல்லை என்பன பற்றிய விடயங்களை அவர்கள் இன்னமும் தெளிவாக அறிவிக்கவில்லை.

ஆக, இந்த நிலையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடாத்தப்படப் போகும் பேச்சுவார்த்தை வெற்றி பெறும் சூழல் நிலவுகிறதா?

நிலவுகிறது என்று சோதிடத்தின் மீது



நம்பிக்கை வைப்பவர்களுடன் சேர்ந்து நாமும் நம்பி, அற்ப சந்தோசத்தில் திருப்திபட்டுக் கொள்ளப்போகிறோமா? இந்த நம்பிக்கைக்கு மேல் எமக்கு செய்வதற்கு ஒன்றுமேயில்லையா?

உண்மையில், இவ்வளவு பிரச்சினைகளும், இருப்பதை இந்த இருதரப்பும் தமது பேச்சுவார்த்தை ஆரம்பமாகுவதற்கு முன் விளங்கிக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக அரசு இந்தப் பிரச்சினைகளை எப்படிக் கையாளப் போகிறோம், போகவேண்டும் என்ற தீர்மானத்தை முதலில் எடுக்க வேண்டும்.

இராணுவ வாதிகளுக்கும், இனவாதிகட்கும், மதவாதிகட்கும் மனம் நோகாமல், புலிகளுடன் பேசி உடன்பாட்டுக்கு வருவது சாத்தியமில்லை என்பது முதலிலேயே தெளிவுபடுத்திக் கொள்ளப்படவேண்டும். புலிகளுடன் உடன்பாட்டுக்கு வருகிற விடயங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய அளவுக்கு இந்த சக்திகள் மீது தனது கட்டுப்பாட்டை அரசு உருவாக்கிக் கொள்ள வேண்டும். மாறாக 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்ற நிலையில் இருந்து கொண்டு இப்பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக நடாத்த முடியாது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களது மாவீரர் தினத்தன்று ஆற்றும் -முழு உலகமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் - விரைவில் பேச்சுவார்த்தை வெற்றி பெற தாம் என்ன செய்ய முடியும் என்பதை வலியுத்திக் கூறவேண்டும்.

இவ்வளவும் சரி வர நடக்குமானால், நாம் சோதிட விரும்பிகளைப் போல வெறும் 'நம்பிக்கை' வைக்கத் தேவையில்லை.

என்ன நடக்கப்போகிறது என்பதை எம்மால் புரிந்து கொண்டு சந்தோசப்பட முடியும். அந்தச் சந்தோசம் தான் நிலையான சந்தோசமாக இருக்க முடியும்.

நிலையற்ற சந்தோசத்திலிருந்து மக்களை விடுவிக்க அரசும் புலிகளும் செய்யவுள்ளதைப் பொறுத்திருந்து பார்ப்பதை விடுத்து அரசியல் சனநாயக சக்திகளும் தமது அழுத்தமான குரலை ஓங்கி ஒலிக்க வேண்டும்.

அதுதான் இன்று நம்முன்னுள்ள கடமை!

[illegible]

நன்றி - நூலகத்திட்டம்



## மலையகத் தமிழருக்கு வதிவிட அடையாள அட்டை:

# சிங்கள அரசின் இன ஒதுக்கல்?

~அர்ஜுன்

மலையகத்தின் இதயத்தில் சொருகப்பட்ட பண்டாரவளைப் படுகொலை என்கிற பேரினவாத விசனத்தனத்தை எதிர்த்து எழுந்த மலையகத்தை ஒடுக்கிடத் துடிக்கிறது சிங்கள அரசாங்கம்.

எதிர்ப்புக்குப் பதிலடியாக மலையகமெங்கும் பகிரங்கக் காடைத்தனங்களை கட்டவிழ்த்து விட்ட பேரினவாதிகளின் பின்னால் சக்திமிக்க அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் அரச ஆயுதப் படையினரும் பொலிஸாரும் இருந்து செயல்பட்டிருக்கிறார்கள்: செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 50க்கும் மேற்பட்ட கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. தியகல, கினிகத்தேன, வட்டவளை பாதுகாப்பு மையங்களைச் சூழவுள்ள பகுதிகளில் காடையர் வீதியில் தமிழர்களை வழிமறித்து வெட்டியும், கொத்தியும் பலி தீர்த்தார்கள். அக்கரகந்த தோட்டத்தில் 15 வயது 17 வயது சிறுமிகள் கதறக் கதற பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் தந்தை படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். கினிகத்தேனை நகரை அண்டிய இரண்டு தோட்டங்களில் இருந்து தொழிலாளர்கள் காடையர்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். உடைமைகள் சூறையாடப்பட்டுள்ளன. திருமண வீட்டுக்கு வந்தவர்கள் வழிமறிக்கப்பட்டும் தாக்கப்பட்டும் 60 பேர் படுகாயமடைந்தும் ஆற்றில் வீழ்ந்தும் மரணித்துள்ளனர். பொலிஸ் இராணுவம் தமிழ் இளைஞர்களை கொலை செய்யவென்றே துப்பாக்கியால் சுட்டதில் 10க்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். கொடி கட்டியதற்காகவும், சுவரொட்டி ஒட்டியதற்காகவும் இராணுவத்தை வரவிடாமல் வீதித் தடைகள், போட்டதற்காகவும் கல்லெறிந்ததற்காகவும், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதற்காகவும் 100க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 10 கோடி ரூபாவுக்கு மேல் தமிழர் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த காட்டு மிராண்டித்தனமான இன ஒழிப்பைப் பற்றி விசாரணை நடத்த எந்த மனித உரிமைக்குழுவும், முன்வரவில்லை. அரச ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. குற்றவாளிகள் பகிரங்கமாக திரிகிறார்கள் அவர்கள் கைது செய்யப்படவில்லை. தடுப்புக் காவல் உத்தரவு போடப்படவில்லை.

ஆனால், சிங்கள அரசின் நிவாரணங்களும் உதவிகளும், சிங்கள மக்களுக்கு மட்டுமே இன்றுவரை வழங்கப்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. மேலும் தமிழ் அகதிகளைப் பலவந்தமாக, விரட்டியடிப்பதில் பொலிஸாரும் ஆளும்கட்சிக் கும்பல்களும் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஆக, மலையகத் தமிழர்கள் இந்நாட்டில் எவ்வித ஜனநாயக, மனித உரிமைகளையும் கொண்டிருக்க முடியாது என்பதையும் அவர்கள் தம்மீதான இன ஒதுக்கலை எதிர்த்து குரல் தரும், போராடும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதையும், தாம் அகதிகளாகவும், கைதிகளாகவும் இருப்பதற்கான உரிமைகள் கூட நசுக்கப்பட்டிருப்பதையும் தமக்கு நேர்ந்துள்ள அவலங்கள் குறித்தோ, தமது எழுச்சி நசுக்கப்பட்ட விதம் குறித்தோ மூச்சுவிட முடியாத நிலையில் இருப்பதையும் கூட வெளியே சொல்ல முடியாதவாறு அடிமை விலங்கு இறுக்கப்பட்டு திறந்த வெளிச் சிறைகளில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இச்சம்பவங்கள் வெளிக்காட்டுகின்றன.

ஆனால், பேரினவாத வெறியர்களுக்கு இது போதுமானதாக இல்லை. எப்பொழுதும் மலையகத் தமிழரின் கண்களில் விரலைவிட்டு ஆட்டிக் கொண்டிருக்கவும் இதயங்களை பூட்ஸ் கால்களால் நசுக்கிக்கொண்டே இருக்க வேண்டுமெனவும் அது விரும்புகிறது. என்றென்றும் திறந்த வெளிச் சிறைகளில் அடைத்து வைப்பதற்கான பிரயத்தனத்தில் அரசு இறங்க முயல்கிறது. ஆம், மலையகத் தோட்டங்களில் வாழும் மக்களுக்கு தேசிய அடையாள அட்டை மட்டுமன்றி விசேட வதிவிட அடையாள அட்டை ஒன்றை வழங்கி பாதுகாப்பை உறுதி செய்யப் போவதாக 06.11.2000 அன்று சொன்னறுவவில் பிரதேச செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய விவசாய அமைச்சர் ஜயரட்ன தெரிவித்திருக்கிறார். அதுவும் முதலில் கொய்பரவ, ஹேவாகெட்ட, கம்பளை பகுதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அறிவித்துள்ளார். இத்திட்டம் அப்பட்டமான இன ஒதுக்கல் திட்டம் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

அடையாள அட்டைகளை வைத்தே மலையக தமிழரை நாடுகடத்தியது ஐக்கிய முன்னணி அரசு. கடந்த 25 வருடமாக அடையாள அட்டைகள் தமிழர்களை அடையாளம் காட்டிக் கொடுக்கவும், அவமானங்களை சுமக்கவும் காரணமாய் இருந்திருக்கிறது. இனி வதிவிட அடையாள அட்டை, தோட்டத்துறையின் ஆரம்பகால "துண்டு முறை" யை புதுப்பிப்பதாக இருக்கும். தோட்டத்துறை, மேலதிகாரிகள், பொலிஸார், இராணுவம், புலனாய்வு பிரிவுகள், நகர்புற கிராமப்புற குண்டர்களிடம் தம்மை அன்னியராக அடையாளம் காட்டவும் நடமாடும் சுதந்திரம் மறுக்கப்படவும் இத்திட்டம் வழிவகுக்கும்.

பண்டாரவளை படுகொலைக்கு நியாயம் கேட்கப் புறப்பட்டு தாமே தூக்கியெறியப்பட்ட மலையகத் தமிழரை மீண்டும் என்றென்றைக்குமான அடிமைக்குடிகளாய் அன்னியக் குடிகளாய் நடத்துவிக்கும் இத்திட்டத்தை எதிர்த்து தடுத்து நிறுத்த வேண்டியது அவசர கடமையாகிறது.

தோட்டங்கள் தோறும் பொலிஸ் பதிவுகள் வதிவிட அடையாள அட்டைகள் வழங்கப்படும் நடைமுறை ஏற்றுக் கொள்ளப் பட்டால் மலையகத் தமிழர் ஒரு திறந்தவெளி இராணுவ முகாமில் வைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிவிடும்.

இந்த அபாயத்தைப் புரிந்து கொண்டு மலையக அமைப்புகளும், மனித உரிமைக் குழுக்களும் உடனே நடவடிக்கையில் இறங்க வேண்டும். தேவைப்பட்டால் பொலிஸ் பதிவு நடைமுறையையும் வதிவிட அடையாள அட்டை திட்டத்தையும் எதிர்த்து நீதிமன்றத்தை நாடவும் அனைத்துலக மட்டத்தில் பிரச்சாரங்களை முன்னெடுக்கவும் முன்வர வேண்டும்.

எத்தனை கொடிய அடக்கு முறைகளைப் பிரயோகித்தாலும் ஆர்த்தெழும்பும் பெருங்கடலின் முன் அவை பயனற்றுப் போகும் காலம் வெகுதொலைவில் இல்லை. ஊடகவியலாளர்களையும், நிரபராதிகளையும் குற்றவாளியாக்கிவிட்டு பேட்டை ரவுடிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அரசு ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒரு தேசம் என்றென்றைக்குமாக செத்துக் கிடக்கப் போவதில்லை!

○

# பாதுகாவலர் யார்?

~ தசக்கிரீவன்

மழை விட்டும் துவானம் விடாதது போல் இன்று வரை பண்டாரவளை (பிந்துனுவெவ) துயர் சம்ப வங்களுக்கு முன்னுரிமை வழங்கி பத்திரிகைகள் பிரசுரிப்பதை அறிவோம்.

அதோடு இணைந்தாற்போல் பெ. சந்திரசேகரன் (ம.ம.முன்னணி) அவர்களின் கைதும் விடுதலையும் முக்கியமடைவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

பண்டாரவளை அனர்த்தத்திற்கு அரசு பதில் கூறித் தான் ஆக வேண்டும். ஆனால், அதை விடுத்து தனது தவறை யாரின் தலையில் (புலிகள், சிஹல உறுமய) வைப்பதென்பதைத் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதுவும் அரசிற்கு நேசமில்லா அமைப்பில் போடுவது 'ஒரு கல்லில் பல மாங்காய்கள்' நிலை.

இதன் ஒரு வெளிப்பாடு தான் சந்திரசேகரன் அவர்களின் கைது. தமது இருப்புக்குத் தூணாக அமைந்த நேசக் கட்சிகளின் மகிழ்ச்சிக்கும், தேவைகளுக்குமான கைது. ஆனால், அதுவே எதிர்கால மலையகத் தேர்தலுக்கான பெருமளவு வாக்குகள் சந்திரசேகரனுக்காக வாக்கு வங்கிகளில் இடப்பட்ட நிலையான வைப்புக் கணக்கென்பதை இப்போது உணர முடியாது தான்.

இதில் உணரப்பட வேண்டிய இன்னுமொன்று உள்ளது.


1989ம் ஆண்டு மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரனால் ஆரம்பிக்கப்பட்டு வியப்புறு வளர்ச்சியடைந்து பொ.ஐ.முன்னணியில் (சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில்) சேர்ந்து நின்று வெற்றியும் பெற்று அமைச்சரவையில் ஓர் பிரதியமைச்சராகவும் இருந்ததோடு தனியொரு நபராக சந்திரசேகரன் அவர்கள் முண்டு கொடுத்ததையும் இலகுவில் மறந்திருக்க முடியாது. அதுவே அவருக்கு வினையாயிற்று.

அக்காலங்களில் மாதம் தவறாமல் 'அவசரகாலச் சட்டத்திற்கு' கை தூக்கி அரசை வாழவைத்தவர்களில் ஒருவராக அவர் இருந்த போது வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் நிலைமை புலப்படாதிருந்திருக்க முடியாது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தன்னை ஐ.தே.கட்சிக்கு மாற்றிக் கொண்ட அவர் இன்று வரை அதனுடன் இணைந்திருப்பதும், அறிந்ததே. இச்சந்தர்ப்பத்திலும் கூட ரணில் விக்கிரமசிங்க அல்லது அதன் நிறைவேற்றுக்குழு சொல்வதையே செய்ய வேண்டிய நிலைப்பாடு அனைத்து தமிழ் பாராளுமன்ற (ஐ.தே.க) உறுப்பினர்களுக்கும் உள்ளது.

அவரசகாலச் சட்டத்திற்கு வாக்களிக்காமல் பகிஷ்கரிக்கலாம். ஆனால், எதிர்த்து வாக்களிக்க முடியாத நிலையையே ஐ.தே.க தமிழ் பா.உறுப்பினர்கள் எடுக்க வேண்டியுள்ளது.

ஆகவே 'அவசரகாலச்சட்டம்' இப்போது மரணிக்கும் வாய்ப்பில்லை. இவையனைத்தையும் மீறிய துணிகர செயல் தான் பண்டரவளை அனர்த்தத்திற்காக தமிழ் மக்கள் திரண்டெழுந்தது இது அரசுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகும். அதுவும் வடகிழக்கைப் போன்றல்லாது அதாவது 'தமிழ் மக்களுக்கு ஏதும் நடந்தால் அன்றிரவு சிங்கள கிராமங்களுக்கு என்ன நடக்குமோ தெரியாது' என்ற பின்புலமின்றி மலையக மக்கள்



திரண்டு வந்து வீரத்தைக் காட்டியது போற்றப்படக் கூடியதொன்றோடு படிக்கப்பட வேண்டியதுமாகும். மெது மெதுவாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்தும் 'வீரம் விளைந்த மண்ணாக மாறுவதை அவதானிக்கக் கூடியதாவுள்ளது.

அரசியல் பிரதிநிதித்துவத்தால் தமிழ் மண்ணைக் காப்பாற்றப் புறப்பட்ட வீரவான்கள் (திருகோணமலை) இதை உணர வேண்டும்.

83 தொடங்கி ஏறக்குறைய ஏழு ஆண்டுகளுக்கு மேல் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாத காலங்களில் இந்த மண் பறி போயிருக்க வேண்டும். அல்லது அதன் பின்னர் இருந்த காலங்களில் ஆக்கபூர்வமான பணிகள் நடந்திருக்க வேண்டும். (மண் என்ன சொப்பிங் பேக்கிலா உள்ளது காப்பாற்ற) ஆகவே, 'மண் காப்பாற்றலைப் பற்றி பீற்றித் திரிபவர்கள் இத்தோடு விட்டு விடவேண்டும்.

இறுதியாக ஒரு விடயம். கடந்த (10.10.2000) பொதுத் தேர்தலின் போது திருகோணமலை மாவட்டத்திற்கு தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனதை நினைப்போம். அரசியல் தோல்வியால் எமது பாதுகாப்பு உட்பட அனைத்தும் அடிபட்டுவிட்டதை எண்ணிய எமக்கு, 'நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக இருக்கிறோம்' என தேர்தல் முடிந்த பத்து நாட்களுக்குள் திருகோணமலைத் துறைமுகமும், அரச பாதுகாப்பு பாசறைகளும் அதிர்வு கண்டமை உணர்த்தவில்லையா?

○

பண்டாரவளை அனர்த்தத்திற்கு அரசு பதில் கூறித் தான் ஆக வேண்டும். ஆனால், அதை விடுத்து தனது தவறை யாரின் தலையில் (புலிகள், சிஹல உறுமய) வைப்பதென்பதைத் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு தமிழீழப் போராளியின் கதை

## தப்பி ஓட தேடிய வழி!

ரெலோவில் இருந்த அந்த நாட்களில் நான் இருந்த வீட்டில் இருந்த ஒருவருக்கு கண்ணாடி வாங்குவதற்காக, நானும் அவரும் வீட்டுப் பொறுப்பாளரின் அனுமதியுடன் வெளியில் சென்றோம். கண்ணாடி வாங்கிய பின் படம் பார்த்து விட்டு வீட்டிற்கு வரும் போது வீட்டின் பொறுப்பாளர் கண்ணாடி வாங்குவதற்கு இவ்வளவு நேரமாக எங்கு போயிருந்தீர்கள் என்று கேட்டார். உண்மையில் படம் முடிவடைந்த பின் உடனே வீட்டிற்கு வந்திருந்தால் இவர்கள் எம்மைத் தேடி இருக்க மாட்டார்கள். சென்னையில் உள்ள பஸ்களில் பஸ் புறப்படும் இடம் போகும் இடம் இரண்டுமே எழுதியபடி தான் பலகையை மாட்டி இருப்பார்கள். பஸ் எங்கிருந்து வருகின்றது எங்கே போகின்றது என்று சென்னையைப் பழகியவர்களுக்கு மாத்திரம் தெரியும். நாம் போக வேண்டிய திசையில் செல்லாமல் மற்றத் திசையில் சென்று விட்டோம். இதை உணர்ந்த போது நாம் திரும்பி வரவும் மற்றவர்கள் அரசியல் வகுப்புக்கள் முடிந்து வந்து விட்டார்கள். இதன் விளைவாக என்னை வேறு ஒரு வீட்டிற்கு மாற்றினார்கள்.


அந்த வீட்டில் தலைவருக்கு அடுத்ததாக இருக்கும் சில தோழர்களின் பொறுப்பில் அவர்களின் கண்காணிப்பின் கீழ் நான் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. என்னால் தனியாக வெளியே போக முடியாத நிலை. துணையுடன் தான் போக வேண்டி இருந்தது. இந்த நிலையில் அந்த வீட்டில் எவருமே என்னுடன் கதைப்பதில்லை. கதைக்கும் போதும் கூட தாங்கள் தலைவர்கள் போலத் தான் என்னை அணுகினார்கள். அதில் ஒருவர் மட்டும் தான் என்னுடன் தோழமையாகப் பழக ஆரம்பித்தார். அதற்குக் காரணம் அவருக்கும் அங்கு நடப்பவை எதுவும் பிடிக்கவில்லை என்பது தான். இதனூடாக நாம் இருவரும் நெருங்கிய நண்பர்களானோம்.

### சுதன் . ரமேஷ் பிரச்சினையும் என் நிலைப்பாடும்

எமது அரசியல் வாழ்க்கையில் முக்கியமான கட்டமாக அமைந்தது ரெலோவில் நடந்த பிரச்சினையும் அந்தப் பிரச்சினையில் நான் எடுத்துக் கொண்ட நிலைப்பாடுமே ஆகும். 1984 ஆம் ஆண்டு ஏப்பிரல் நடுப்பகுதியில் ஒருநாள் இரவு சில பொறுப்பாளர்கள் எமது அறைக்கு வந்தனர். அவர்கள் சொன்னவை: தலைவரான சிறி சபாரெத்தினத்தை அடுத்த கட்டத்திலுள்ள உப தலைவர்களான சுதா, ரமேஸ் என்பவர்கள் புலிகளிடம் ஆயுதம் வாங்கிக் கடத்திச் செல்ல எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் தம்மிடம் தான் உள்ளனர். இதனால் புலிகள் ஆத்திரப்பட்டு சிலவேளைகளில் எமது பாதுகாப்பிற்கே ஆபத்துக்கள் கொண்டு வரலாம். ஆகவே எவரும் வெளியே போக வேண்டாம்.

இதன் பின்னர் மனோ மாஸ்ரர் எமது இடத்துக்கு வந்தார். நாம் அவரிடம் இப்பிரச்சினை பற்றிக் கேட்டோம். அவர் கூறினார்: கடந்த சில காலங்களாக தலைவருக்கும் உப தலைவர்களுக்குமிடையே மத்திய குழு அமைப்பது தொடர்பாக பிரச்சினைகள் வந்ததாகவும் தலைவர் மத்திய குழு அமைப்பதைத் தட்டிக் கழித்து வந்தார் எனவும், அதன் காரணமாக இவர்களிடையே உறவுகள் சீர்குலைந்ததாகவும் ஆனால் ரெலோவின் தலைமை கூறுவது போல் நடந்திருக்கச் சாத்தியமில்லை என்றும், இது ஒரு பக்கக் கருத்துத் தான் என்றும் சுதா, ரமேஸ் என்பவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை எனவும் கூறினார். அப்படிச் சொல்லி விட்டுப் போனதும் எமக்குள் குழப்பமான கருத்துக்கள் வந்தன. எமக்கு என்ன நடக்கப் போகிறதோ என்று எல்லோரும் குழம்பி விட்டோம். இரவு பன்னிரண்டு மணியளவில் எம் போன்று பல வீடுகளில் இருந்தவர்களை வேறு வீடுகளுக்கு இரவோடிரவாக மாற்றம் செய்யத் தொடங்கினர். இது சம்பந்தமாக அவர்கள் எமக்குக் கூறியது: புலிகளிடமிருந்து எம்மைப் பாதுகாக்கவே இதைச் செய்கின்றோம். விருப்பமில்லாவிட்டால் உங்கள் உயிருக்கு பாதுகாப்பு அளிக்க முடியாது என்றனர். எமது வீட்டிற்கு அவர்கள் உடனடியாக வராததினால் நாம் சில முடிவுகளை எடுக்கக் கூடியதாக இருந்தது.

எமது வீட்டிலிருந்த இருபது பேரில் பலர் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். எமது வீட்டில் பலர் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவும் உப தலைவர்களுடன் கூடிய தொடர்புகளைக்




கொண்டிருந்தவர்களாகவும் இருந்தனர். அத்துடன் எல்லாரும் தமக்கும் ஏதாவது நடக்கக் கூடும் என்றும் நினைத்தனர். என்னைப் போல் சிலரே தனிநபர்களாக எவருடனும் எதையுமே கதைக்க முடியாதவர்களாக இருந்தனர். எனினும் எமக்குச் சரியென நினைப்பதை எவர் எமது வீட்டுக்கு வந்தாலும் (தலைமை உட்பட) பிரச்சினைகளைக் கதைப்பது. கதைக்கச் சந்தர்ப்பம் கிடைக்கா விட்டால் வீடு மாறுவதைத் தவிர்ப்பது என முடிவெடுத்தோம். இதில் முக்கியமாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு தோழர்களும் நானும் எதைப் பற்றியுமே கவலைப்படவில்லை. உதாரணமாக, யார் எமக்குள் உளவாளியாக இருப்பார்கள் என்றெல்லாம் பயப்படவில்லை. தலைவர்-உப தலைவர்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்க்காமல் நாம் வீடு மாறப்போவதில்லை. இந்த நிலைப் பாட்டை எமது வீட்டிலிருந்த இருபது பேருக்கு முன்பாகவும் வைத்தோம். எவ்வாறு எனினும் எவர் மேலும் எவருக்கும் நம்பிக்கை அற்ற ஒரு நிலை தான் காணப்பட்டது.

வேறு வீடுகளில் இருந்தும் ஒருவராக அல்லது இருவராக எமது வீட்டிற்கு வந்தனர். இந்தப் பிரச்சினைகள் பற்றிக் கதைத்தனர். இவ்வாறு வந்தவர்கள் வடமராட்சிப் பகுதியினைச் சேர்ந்தவர்களும் சுதா, ரமேஸ் ஆகியோருடன் குறைந்த பட்ச உறவுகளை வைத்திருந்தவர்களுமே. இவர்களும் எமது வீட்டில் சேர்ந்து விட்டனர். அதிகாலையில் எம்மை வீடு மாற்றுவதற்காக ஒரு குழுவினர் வந்தனர். நாலு பேர் வரை அவர்களுடன் சென்றனர். நாம் இந்தப் பிரச்சினை பற்றித் தலைமை மட்டத்தில் யாருடனாவது கதைக்க வேண்டும் எனக் கேட்டோம். பதில் வரவில்லை. சில மணித்தியாலங்களின் பின்னர் வேறு குழுவினர் வந்து தமது நிலைமையை விளக்கினர். அதாவது தற்பாதுகாப்பிற்காகத் தான் தலைமை வீடு மாற்றச் சொல்கிறது எனவும் புதிய வீட்டில் இந்தப் பிரச்சினையைக் கதைப்போம் என்றனர். இதன் விளைவாக மேலும் நாலு பேர் அவர்களு டன் சென்றனர். பின்னர் ஒரு குழுவினர் வந்தார்கள். தலைமைக்குக் கட்டுப்பட வேண்டும் எனவும் தலைமை வீடு மாறச் சொல்கின்ற போது வீடு மாற வேண்டும். வீடு மாற விரும்பாதவர்கள் தலைமைக்கு எதிரானவர்கள் எனவும் அவர்கள் சம்பந்தமாக தலைமை நடவடிக்கை எடுக்கும் எனவும் கூறினர். இந்த எச்சரிக்கையின் விளைவாக மேலும் பலரை அவர்கள் இடம் மாற்றினார்கள். என்னைப் போல் சிலர் இந்தப் பிரச்சினையைக் கதைப்பதற்கு சந்தர்ப்பம் தாருங்கள். அதன் பிறகு இடம் மாறுவோம். சில நாட்கள் இங்கே இருந்தாலும் பரவாயில்லை எனக் கூறினோம். இதன் விளைவு மேலும் எச்சரிக்கைகளாக உங்கள் மீது இரவோடிரவாக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீங்கள் எல்லாரும் புலிகளின் ஆட்கள் எனவும் தலைமைக்கு எதிரானவர்களுக்கு மரண தண்டனை என்றெல்லாம் அவரவர் விரும்பியபடியே எச்சரித்தனர். இதன் விளைவாக மேலும் சிலர் அவர்களுடன் சென்றனர். எமது வீட்டில் இருந்தவர்களில் ஒருவர் தனது உடுதுணிகளை எல்லாம் அவர்களுடன் அனுப்பி விட்டு எம்மைச் சமாதானப்படுத்திக் கூட்டிக் கொண்டு வருவதற்காக நின்றவர் பின்னர் தலைமையின் எச்சரிக்கையைக் கண்டு பயந்து போய்ப் பிந்திப் போனால் தனக்கு என்ன நடக்குமோ என்று நினைத்து விட்டு அவரும் எம்முடன் நின்று விட்டார்.

### உயிருக்கு ஆபத்தும் தப்பி ஓடுதலும்

எமது உயிர்களுக்கு ஆபத்து என்ற கட்டத்தில் இப்பிரச்சினையை தமிழ் நாட்டு மக்களுக்கு அறிவிப்பது அல்லது குறைந்த பட்சம் பொலிஸ் உதவியை நாடுவது என்ற நிலைக்கு வந்து விட்டோம். எம்மில் ஒருவர் தீக்குளிக்கும் முயற்சியில் வீதிக்கு வந்து விட்டார். தீக்குளிப்பது என்பது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பலரின் கவனத்தை ஈர்க்கும் என்பது அவரின் முடிவாகும். அவரைச் சமாளித்து அவரின் முடிவை மாற்றினோம். எதிர்பார்த்தது போல் அன்றைய இரவில எதுவும் நடைபெறாததால் எமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் எம்மைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தினோம். அடுத்த வேலையாக எமது பிரச்சினையை ரெலோவுடன் உறவுகளை வைத்திருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் போன்ற அமைப்புக்களுக்கு தெரியப்படுத்த முயற்சித்தோம். ஆனால் எவருக்குமே இவ்வமைப்புக்களின் தொடர்புகள் இருக்கவில்லை. இதே நேரத்தில் தீக்குளிக்க முயன்றவரும் இன்னுமொருவருமாக அதிகாலையில் தப்பி ஓடப் புறப்பட்டனர். இதை அறிந்தவுடன் நானும் அவர்களுடன் ஓடப் புறப்பட்டேன். அவர்கள் இருவரும் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். நான் அந்தப் பகுதியைச் சேராதவன் என்பதால் அவர்களுக்கு என்னில் நம்பிக்கை இல்லாததால் என்னைப் புறப்படச் சொல்லி விட்டு அவர்கள் ஓடிப் போய் விட்டார்கள்.

நான் தப்பி ஓடும் முடிவெடுத்தவுடன் உடனடியாக என்னுடன் பழகும் மதிப்புக்குரிய தோழருடன் - அவரைச் சுந்தரம் என்று அழைக்க விரும்புகிறேன் - இங்குள்ள நிலைமைகள் மோசமாக உள்ளது. நான் தப்பி ஓடப் போகின்றேன். நீங்கள் விரும்பினால் வரலாம். எல்லாரும் தப்புவது பிரச்சினையானது எனவும் எனக்கு யாரிலும் நம்பிக்கை இல்லை எனவும் கூறினேன். அதற்கு சுந்தரம் தனது சகோதரர் ஒருவர் இந்தப் பிரச்சினைகளின் மத்தியில் உள்ளார் எனவும், தான் தப்பி ஓடினால் அதன் விளைவாக அவருக்கு ஏதாவது நடக்கலாம் எனவும் அவரைத் தலைமைப் பீடம் ஏதாவது செய்தால் அதன் பிறகு தான் தப்பி ஓடுவேன் என்றும் கூறினார். நான் அவரைத் தப்பியோட அழைத்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன: ஒன்று எனக்கு நம்பிக்கை உள்ள ஒருவர் என்பதால் எனக்கு உதவியாக இருப்பார் என்பது. இரண்டாவது எனக்குச் சென்னையிலுள்ள ஒரேயொரு வெளித்தொடர்பு அவருக்கு மட்டும் தான் தெரியும். இவரை விட்டுப் போனால் இவரைப் பிடித்துச் சித்திரவதை செய்தால் இவர் காட்டிக் கொடுக்கலாம் என்பதால், இவர் என்னுடன் இருப்பது எனக்குப் பாதுகாப்பாகப் பட்டது. ஆனால் விடிந்தால் என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் தப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் அன்று அப்படிப்பட்ட முடிவைத் தான் என்னால் எடுக்க முடிந்தது.

இந்த வேளையில் காலையில் தப்பி ஓடிய இருவரும் மாலையில் ஓட்டோவில் வந்து இறங்கினர். இவர்கள் பிடிபட்டுத் தான் வீட்டிற்கு வருகிறார்கள் என்று நாம் நினைத்தோம். ஏற்கெனவே வீட்டினில் அடைபட்ட நிலையில் வெளியால் ரெலோ உறுப்பினர்கள் ஒருவகையான காவலுடன் எம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் வேளையில் இவர்கள் இருவரும் திரும்பி வந்தது எமக்குள் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இவர்கள் இருவரும் தப்பி விட்டார்கள் என்றும் இவர்கள் பிரச்சினையை வெளியால் சொல்லி இருப்பார்கள். அதுவே எமக்குப் பாதுகாப்பாக இருக்கும் என நம்பி இருந்த நமக்கு இவர்கள் திரும்பி வந்தது பிரச்சினையாக இருந்தது. அதிலும் எனக்குப் பிரச்சினையாக இருந்த விடயம் இவர்களுடன் தப்பியோட காலையில் முயன்றவன் நான் என்பதால் நானும் மாட்டுப்பட்டது போல் உணர்ந்தேன்.

தொடரும்

எமது உயிர்களுக்கு ஆபத்து என்ற கட்டத்தில் இப்பிரச்சினையை தமிழ் நாட்டு மக்களுக்கு அறிவிப்பது அல்லது குறைந்த பட்சம் பொலிஸ் உதவியை நாடுவது என்ற நிலைக்கு வந்து விட்டோம். எம்மில் ஒருவர் தீக்குளிக்கும் முயற்சியில் வீதிக்கு வந்து விட்டார். தீக்குளிப்பது என்பது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பலரின் கவனத்தை ஈர்க்கும் என்பது அவரின் முடிவாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



*அலைபோவியன்*

# புனித பூமியில் சாத்தான்களின் வெறியாட்டம்

## படுகொலைக் களம் ஓராண்டு நிறைவு

இரத்தமும் கண்ணீரு-மாக இரு தசாப்த காலமாக ஓடிக் கொண்-டிருக்கும் ஈழத் தமிழர் சோக வரலாறு இதுவரை காலங்களிலும் பல்வேறுபட்ட இழப்புக்களை சந்தித்துள்ளது. இவ் இழப்புக்கள் உயிர், உடமை என்ற வகை இழப்புக்களாகவும் காணப்-படுகின்றன.

அவ்வாறான தியாக வரிசையில் சர்வதேச புகழ் பெற்ற மடுத் தேவாலய திருப்பதி மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை இம்மாதம் (நவம்பர்) 20ம் திகதியுடன் ஒரு வருடத்தை பூர்த்தி செய்கின்றது. இத்தாக்குதல் சம்பவத்தின் போது தேவாலய வளவில் பாதுகாப்புக் கருதி தஞ்சம் அடைந்திருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட பல்வேறு வயது பராயத்தினர் உட்பட ஏறத்தாழ 31 பேர் ஸ்தலத்திலேயே உயிர் துடித்து பரிதாபமாக உயிரிழந்தனர். இலங்கைத் திருநாட்டைப் பொறுத்த அளவில் யுத்த சூனியப் பிரதேசங்களான வணக்கத் தலங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது ஒன்றும் ஆச்சரியமானதும் புதியதுமானதும் புதிரானதுமான விடயமல்லவே.

இத்தாக்குதல் யாரால் நடாத்தப்பட்டது என்பது குறித்து தேவாலய குருமார்களுக்கு தெரிந்திருந்தாலும் மௌனம் சாதிக்குமாறு தொடர்ந்தும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள ஒரு சூழ்நிலையிலேயே இன்னும் உள்ளனர்.

எவ்வாறு இருப்பினும் இராணுவத்தாலேயே இம் மிலேச்-சத்தனமான தாக்குதல் மேற்கொள்-ளப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் (உறவினர்களை கண் முன் இழந்தவர்கள்) தெரிவித்திருந்தனர்.

1999 நவ.20ம் திகதி காலை 9.00 மணியளவில் சிறிலங்கா படையினர் மடுப் பகுதியை விட்டுப் பின்வாங்கத் தொடங்கினர். இதனால் புலிகளின் சிறு குழுவொன்றும் நடமாட (மடுப்பகுதியில்) ஆரம்பித்தது. ஆனால், திடீரென பெரியமடு பகுதியில் இருந்து 3.30 மணியளவில் மீண்டும் இராணுவத்தினர் மடுப்பகுதிக்குள் பிரவேசித்தனர். இதனை எதிர்பார்க்காத புலிகளுக்கும் இராணுவத்துக்கு இடையில் சிறிது மோதல் இடம்பெற்று சிறிது நேரத்தில் அப்பகுதியில் அமைதி நிலை தோன்றியது. மாலை 6.30 மணியளவில் இராணுவத்தினரால் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்-களுக்கு அறிவித்தல் விடப்பட்டுள்ளது. அதாவது மடுப்பகுதியில் புலிகள் நடமாடுவதால் மோதல்கள் இடம் பெறலாம் எனவே மடுப்பகுதியில் வீடுகளில் இருக்கும் மக்கள் அனைவரையும் பாதுகாப்பு கருதி மடுத்தேவாலயத்தில் தங்கும்படியும் கூறப்பட்டது.

நிலைமையின் வீபரீதத்தினை உணராத அப்பாவி மக்களும், இரவு தேவால-யத்தில் ஒன்று கூடியிருந்-தனர். இரவு 9.00 மணியளவில் தேவாலய பின் பகுதியிலிருந்து இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் ஒரு சில வேட்டுக்கள் தீர்க்கப்-பட்டன. பின்னர் தாக்குதல் நடத்திய 8 பேர் கொண்ட புலிகள்



கோஷ்டி மடுப்பகுதியை விட்டு வெளியேறியது. இது நடந்தது ஒரு சில நிமிடங்களில் மக்கள் கூடியிருந்த தேவாலய வளவுக்குள் இரண்டு இராணுவ டாங்கிகள் வந்து நின்றன. இதனை யாருமே விபரீதமாக உணரவில்லை.

அப்போது திடீரென டாங்கி-யிலிருந்து முதல் வேட்டு தீர்க்கப்பட்டது. இதில் துடிதுடித்து சிலர் பலியாகினர். நிலைமையை உணர்ந்த சிலர் சுதாகரிப்பதற்குள் மீண்டும் அடுத்த வேட்டும் தீர்க்கப்பட்டது. பின்னர் அவ்விடத்தை விட்டு டாங்கிகள் நகர்ந்துள்ளன. இத்தாக்குதல் 31 பேர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர். 31பேர் காயமடைந்தனர்.

நான்கு பிள்ளைகளை இழந்த விதவைத் தாயாரும் 3 பிள்ளைகளை இழந்த குடும்பத் தலைவரின் புலம்பலும் நெஞ்சை உருக்கியது. இத்தாக்குதல் புலிகளாலேயே மேற்கொள்ளப்-பட்டதாக அரச ஊடகங்கள் மூலமாக பொய் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு பிரதியமைச்சர் ரத்வத்தையும், தான் புலிகள் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டிப்பதாக அப்பட்டமாகப் புளுகியிருந்தார். உண்மை நிலை பற்றி தமிழ்க் கட்சிகள் கூட வாய் திறக்கவில்லை.

இப்படுகொலை நடந்து ஓராண்டு நிறைவெய்துகின்ற வேளையிலும் பாதிக்கப்பட்ட-வர்களுக்கு நஷ்டஈடு வழங்-குமாறு கூறப்பட்ட போதிலும், இதுவரையிலும் 3 பிள்ளைகளை இழந்த தட்ணா மருதமடுவைச் சேர்ந்த குணவீரசிங்கம் என்பவருக்கு மாத்திரம் ரூபா 15,000 வழங்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ இவருக்கு ரூபா 65,000 வழங்கப்படவேண்டிய இடத்தில் இவருக்கு மேற்குறிப்பிட்ட தொகை மாத்திரமே வழங்கப்-பட்டுள்ளது.

இது தவிர வேறெவருக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

### கொலைக்களத்தில் பலியானவர்களின் பெயர் விபரங்கள்

| | கொலைக்களத்தில் பலியானவர்கள் | வயது | இடம் |
|---|---|---|---|
| 1 | முத்தையா சிவ்நந்தன் | 28 | தட்சணா மருதமடு |
| 2 | சிவருந்தன் சுகந்தினி | 23 | தட்சணா மருதமடு |
| 3 | குணவீரசிங்கம் யோகேஸ்வரி | 22 | தட்சணா மருதமடு |
| 4 | குணவீரசிங்கம் சுகன்யா | 13 | தட்சணா மருதமடு |
| 5 | குணவீரசிங்கம் ஜெயசீலன் | 21 | தட்சணா மருதமடு |
| 6 | கதிரேசு செல்வராசா | 39 | நெடுங்கேணி, இரணை இலுப்பைக்குள |
| 7 | கருணராசா தெய்வானை | 46 | பாலம்பிட்டி |
| 8 | வேலுப்பிள்ளை தர்மலிங்கம் | 35 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 9 | சற்குருசேகரன் பூமணி | 62 | தட்சணா மருதமடு |
| 10 | திசை வீரசிங்கம் அம்பிகாவதி | 40 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 11 | தம்பிப்பிள்ளை திசைவீரசிங்கம் | 45 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 12 | சந்திரமோகன் தட்சாயினி | 13 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 13 | சந்திரமோகன் பபிதரன் | 7 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 14 | சந்திரமோகன் சுஜித்ரன் | 9 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 15 | சந்திரமோகன் சுதாகரன் | 9 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 16 | கனகரட்ணம் வாரித்தம்பி | 54 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 17 | வரித்தம்பி பவானி | 18 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 18 | நவரட்ணம் ராஜேஸ்வரி | 65 | தட்சணா மருதமடு அகதி முகாம் |
| 19 | முனியாண்டி உதயகுமார் | 22 | இரணை இலுப்பைக்குளம் |
| 20 | முனியாண்டி செல்வம் | 55 | இரணை இலுப்பைக்குளம் |
| 21 | நிக்கலஸ் யூட் யாழினி | 25 | கட்டையடம்பன் |
| 22 | ஏகாம்பரம் இராஜேஸ்வரி | 52 | செங்கபடை, இரணை இலுப்பைக்குளம் |
| 23 | செல்வராசா ரதன் | 13 | இரணை இலுப்பை குளம் |
| 24 | செல்வராசா நிராஜ் | 9 | இரணை இலுப்பை குளம் |
| 25 | சூரிய குமார் சுவந்தன் | 17 | தட்சணா மருதமடு |
| 26 | திசைவீரசிங்கம் மதிராஜ் | 2 | தட்சணா மருதமடு |
| 27 | சிறிபாஸ்கரன் மைந்தினி | 4 | கொல்லங்கலட்டி, யாழ்ப்பாணம் |

## வைத்திய சான்றிதழ் விவகாரம்:


# வைத்தியருக்கு நீதவான் எச்சரிக்கை

முறைகேடான பாலியல் வல்லுறவுக்கு கடந்த பெப்.5ஆம் திகதி உட்படுத்தப்பட்டதாக பாதிக்கப்பட்ட பதினாறு வயது பெண் பொலிசாருக்கு முறையிட்டிருந்த போதிலும், அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, அவரின் உடலில் வெளியிலோ உள்ளுறுப்புக்-களிலோ காயங்கள் இல்லை என்றும், அவருடைய கன்னிமை கழியவில்லை என்றும் நீதிமன்றத்திற்குச் வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்-பட்டிருந்ததன் பின்னர், இம்மாதம் 12 ஆம் திகதி அப்பெண் வவுனியா ஆதார வைத்தியசாலையில் குழந்தையொன்றை பிரசவித்திருந்தார் என்ற தகவலை கடந்த வாரம் சரிநிகரில் குறிப்பிட்டி-ருந்தோம். இதனையடுத்து, பாலியல் வல்லுறவு இடம் பெற்றதற்கு அடையாளமாக அப்பெண் குழந்தை பிரசவித்ததனால் சந்தேகத்திற்கு இடமாகிய முரண்பாடான வைத்திய அறிக்கை குறித்து வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் ஆணையின்பேரில் புலன் விசாரணைகளை நடத்திய வவுனியா குற்றத்தடுப்பு பொலிசார் தமது அறிக்கையை திங்களன்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

வவுனியா ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த குறிப்பிட்ட பெண் நோய் வைத்திய நிபுணரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். பாதிக்கப்பட்ட பெண்ணும் தனது தாயாருடனும், தனக்குப் பிறந்த கைக்குழந்தையுடனும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

வைத்தியரின் அறிக்கை குறித்து, மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் அவரிடம் விளக்கம் கோரிய போது, குறிப்பிட்ட பெண்ணை தானே கடைசியாக வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியதை அவர் ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து, கன்னிமை கழியவில்லை என்று நீதிமன்றத்திற்கு வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அவருக்கு எவ்வாறு குழந்தை பிறந்தது, அது எவ்வாறு சாத்தியமானது என்பதை நீதிமன்றத்திற்கு விளக்க வேண்டிய பொறுப்பும் பெண்நோய் நிபுணராகிய வைத்தியருக்கு உள்ளது என்பதை வலியுறுத்திய நீதிவான், இந்த வழக்கில் பாலியல் வல்லுறவு குற்றம் நடைபெற்றதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக அப்பெண்ணைப் பரிசோதனை செய்து வைத்திய அறிக்கை சமர்ப்பித்த வைத்திய நிபுணர் என்ற வகையில் பல விடயங்களில் நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்த விரும்புகின்றது என்றும் நீதிவான் தெரிவித்தார். அதன் பிரகாரம், 16 வயதுக்கு உட்பட்ட பெண்ணு-டன் தகாத முறையில் உடலுறவு கொள்வது சட்டத்தின்படி, நியதிச்சட்டப் பாலியல் வல்லுறவுக் குற்றமாகின்றது. இந்த வழக்கில் சிறிய தந்தை முறையான ஒருவரே இக் குற்றத்தைச் செய்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. இதிலிருந்தே, பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும் வைத்தியர் அல்லது வைத்திய நிபுணரின் வைத்திய பரிசோதனை



உயர் தரத்தில் இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் வெளிப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பெண் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் தான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வைத்திய அறிக்கையின் நோயாளருடைய வரலாறு என்ற குறிப்புப் பந்தியில் பாலியல் வல்லுறவு செய்ய முயற்சிக்கப்பட்டது என்று பாதிக்கப்பட்ட பெண் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட பெண் பொலிசாருக்குப் பொய் கூறியிருக்கின்றாரா அல்லது வைத்திய நிபுணருக்குப் பொய்யுரைத்திருக்கின்றாரா என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

முறையற்ற உறவினரால் பெண்ணொருவர் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டிருப்பது தெரிந்தால், அதன் மூலம் உருவாகிய கருவை நீதிமன்றத்தின் அனுமதியோடு கலைத்து விடுவதற்கான வசதி இருக்கின்றது. இந்த வழக்கில் அவ்வாறான முறையற்ற உறவினராகிய சிறிய தந்தையினால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கர்ப்பம் ஏற்பட்டி-ருந்தும், அந்தக் கருவைக் கலைத்து விடுவதற்கு இருந்த வாய்ப்பும்

▶ 19

நன்றி - நூலகத்திட்டம்



# திருமலையிலிருந்து கோபி அனானுக்கு ஒரு கடிதம்!

- விவேகி

கடந்த வாரம் திருகோணமலையைச் சேர்ந்த 25ஆயிரம் தமிழர்களிடம் கையெழுத்துகள் பெறப்பட்ட மகஜர் ஒன்றை நகரப்பிரமுகர்கள் சிலர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் கோபி அனானிடம் சேர்ப்பிக்கும் முகமாக திருகோணமலை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப்பிரதிநிதிகளிடம் கையளித்திருந்தனர்.

அந்த மகஜரின் தமிழாக்கம் இது.

திருகோணமலை
இலங்கை

இலங்கை மாண்புமிகு கொபி அனான்
ஐக்கிய நாடுகளவைச் செயலாளர் நாயகம்.
ஐக்கிய நாடுகளைத் தலைமையகம்
நியூயோர்க்
ஐக்கிய அமெரிக்கா

தங்கள் உயர் கவனத்திற்கு:

மத்திய இலங்கையிலுள்ள பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் 31க்கு மேற்பட்ட தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் படுகொலையுண்டதும், கடுங்காயங்களுக்குள்ளானதும் தொடர்பாக திருகோணமலையைச் சேர்ந்த 25,000 தமிழர்களின் கையெழுத்துக்கள் அடங்கி கோரிக்கை.

இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் பரந்து வாழ்கின்ற தமிழர்களின் ஒரு தொகையினரான திருகோண-



மலை மக்கள் சார்பில் கையெழுத்திட்டு 25,000 தமிழர்களான எங்கள் கோரிக்கை.

1. இலங்கையின் இரண்டாவது பெரிய இனமான தமிழர்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 20 சதவீதத்தினர். சிங்களவர்கள் ஏறத்தாழ 70 சதவீதத்தினர்.

2. 1948 பெப்ரவரி 4ல் இலங்கை பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாட்தொடக்கம் பெரும்பான்மைப்பலம் கொண்ட சிங்கள அரசினால் தொடர்ந்தும் அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

3. குறிப்பாக 1983 ஜூலைக்கலவரத்தைத் தொடர்ந்து இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை காரணமாகவும் தமிழர்களுக்கெதிரான உயிர், உடமை அச்சுறுத்தல்கள் காரணமாகவும், அரைவாசித் தொகைக்கும் மேற்பட்ட மக்கள் நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

4. அரசும், அதைச் சார்ந்தவர்களும் எவ்வளவு கூறினாலும், வடக்கு கிழக்கில் உருவான யுத்தச் சூழ்நிலை காரணமாக தமிழர்கள் தமது உயிர் வாழ்வுக்கும், உடமைக்கும் தமது பாரம்பரிய மண்ணிலேயே போராட வேண்டியவர்களானார்கள்.

5. மத்திய இலங்கையிலுள்ள பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் சரணடைந்தவர்களும், போராளிக்குழுவுடன் தொடர்புள்ளவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களுமாக 51 தமிழ் இளைஞர்கள் ஒக்டோபர் 25, 2000 அன்று இருந்திருக்கிறார்கள். இந்த முகாம் இராணுவத்தாலும், பொலிசாராலும் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. இப்புனர்வாழ்வு முகாம் 10 வருடங்களாக இயங்கி வருகிறது.

6. இம்முகாமில் நடந்த படுகொலைகள் பற்றி அரசும் மென்று விழுங்க முடியாத நிலையில் ஊடத்துறையினரும் பரப்பிய பொய்ச் செய்திகளின் பின்னால் மறைத்து கிடந்த உண்மை நிலை வருமாறு:

அ. 25.10.2000 அன்று பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் முகாமில் இருந்தவர்களைத் தாக்கவும் படுகொலை செய்யவும் ஏற்கெனவே திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஆ. அப்பாவித்தனமான கைதிகள் இதுபற்றி அறிந்திருக்கவில்லை.

இ. திடீரென வந்த அடையாளம் தெரியாத நூற்றுக்கணக்கானோரைக் கொண்ட கும்பல் ஏதுமறியாதிருந்த நிராயுதபாணிகளான தமிழ்க் கைதிகளை வெட்டியும், தாக்கியும் மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்துள்ளார்கள்.

ஈ. இறந்தோர் தொகை இன்னமும் வெளியாகவில்லை. 31பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும், 16 பேர் காயமடைந்தும் இருப்பதோடு ஏனைய 35 பேர்களின் நிலைமைபற்றி எதுவும் தெரியாத நிலைமையே நீடிக்கிறது.

உ. தமிழ் தடுப்புக் கைதிகள் கொல்லப்பட்டு இலங்கையில் இது முதல் தடவையல்ல. இலங்கையின் தலைநகரான கொழும்பில் அதி உயர் பாதுகாப்பு வசதிகள் கொண்ட வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஜே.ஆர்.ஜெவர்த்தன ஆட்சியின் கீழ் 1983 ஜூலையில் 52 பேர் இரத்தத்தை உரைய வைக்கும் வகையில் பயங்கரமாகக் கொல்லப்பட்டனர். இதுபற்றி எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. குற்றவாளிகளும், சூத்திரதாரிகளும் தப்பி விட்டனர். இதேபோன்று சம்பவங்கள் பல பின்னாட்களில் களுத்துறை, பூஸா தடுப்பு முகாம்களிலும் கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையிலும் இடம் பெற்றிருக்கின்றன.

ஊ. களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டது சம்பந்தமாக உயர் நீதிமன்ற நீதியரசர் ராஜா பெர்னாண்டோ தலைமையிலான தனிநபர் ஆணைக் குழுவொன்று அரசால் அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு தனது முடிவுகளை அரசிடம் சமர்பித்தது. ஆனால், ஆணைக்குழுவின் விதந்துரைக்கமைய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் இப்போது பண்டாரவளைப் படுகொலை இடம்பெற்றுள்ளது.

எ. சிறிலங்காப் படைத்தரப்பால் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அரசால் எதிர் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் அலட்சியப் படுத்தப்பட்டுள்ள சம்பவங்கள் இங்கு குறிப்பிடுகிறோம். அவையாவன:

1983 ஜூலை இனக்கலவரம்

1985 மே வல்வெட்டித்துறை (யாழ்ப்பாண) 76 பொதுமக்கள் நூலகத்துள் ஸ்ரீலங்காப் படையினரால் வெடிவைத்துக் கொல்லப்பட்டனர்.

1985 மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை 147க்கு மேற்பட்ட பொதுமக்கள் படைகளால் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டனர்.

1987 வடமராட்சி ஒப்பரேசன்




946 பொதுமக்கள் சிங்களப் படைகளால் கொல்லப்பட்டனர்.

1990 ஜூன் வந்தாறுமூலை மட்டக்களப்பு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட 156 இளைஞர்கள் காணாமல் போயினர்.

1990 மட்டக்களப்பு ஊறணிக்கிராமப் படுகொலை 56 சிறுவர்கள், தாய்மார்கள், வயோதிபர் உட்பட 250க்கும்



மேற்பட்ட மக்கள் ஸ்ரீலங்காப் படையினரால் கொண்டு செல்லப்பட்டு வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டனர்.

1992 கொக்கட்டிச்சோலை 2 வது படுகொலை. 245க்கு மேற்பட்ட மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டமை.

1994 வடபகுதி குமாரபுரம் படுகொலைகள்: 50க்கு மேற்பட்ட சிவிலியன்கள் இராணுவத்தால் படுகொலை.

1995 ஓகஸ்ட் நவாலி ஆலயம், யாழ்ப்பாணம் - குண்டு வீச்சு அடைக்கலம் புகுந்த 285 பேர் கொல்லப்பட்டனர்.

1995 செப்டெம்பர் யாழ்ப்பாணம் நாகர்கோவில் பாடசாலை

பாடசாலை நேரத்தில் குண்டுவீசி 17 வயதிற்குட்பட்ட 48 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

1998 புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வான் குண்டு வீச்சால் 21 பொதுமக்கள் பொதுச்சந்தையில் கொல்லப்பட்டனர்.

ஏ. சர்வதேச சமூகம் குறிப்பாக உதவி வழங்கும் நாடுகள் அழுத்தம் கொடுத்தால் ஒழிய 25.10.2000 ல் நிகழ்ந்தமை போன்ற படுகொலைகள் இலங்கையில் தொடரும் எனத் தமிழ் மக்கள் முற்றுமுழுதாக விரக்தியடைந்து போவதோடு சர்வதேச சமூகத்தின் நீதியான தலையீட்டை வேண்டிநிற்கிறார்கள்.

ஐ. இத்தகைய கொடூரமான கொலைகளைத் தடுத்து நிறுத்துவதில் அர்த்தமுள்ள ஆக்கபூர்வமான அறிவுறுத்தல்களை இலங்கை அரசுக்கு வழங்கி உதவ வேண்டுமென்று ஐக்கிய நாடுகளின் தலைமையாகத்தைக் கேட்டுக் கொள்கிறோம். வழக்கம் போல விசாரணைக் கமிஷன் அமைத்து இந்த நிகழ்வும் அலட்சியப் படுத்தப்படலாம் என அஞ்சுகிறோம்.

ஒ. எவருமற்ற நிலையில் தமிழர்களாகிய நாம் தங்கள் உதவிக்கு இறைஞ்சுகிறோம்.

பிற்குறிப்பு:

இதைப் படித்துப் பார்த்த என் நண்பர் ஒருவர் சொன்னார். பரவாயில்லை, நல்ல விஷயங்கள் தான். கட்டாயம் செய்யப்பட வேண்டியது தான். ஆனால், எங்கள் ஊர்ப் பிரமுகர்கள் வேலியால் எட்டிப் பார்த்து பக்கத்து வீடுகளில் நடந்தவற்றை உன்னிப்பாகக் கவனித்த அளவுக்கு சொந்த வீட்டு விவகாரங்களைக் கவனிக்காமல் விட்டு விட்டார்களே என்றார். "ஏன்?" என்றேன். பின்னே என்ன...

1985 கட்டைப்பறிச்சானில் 18 பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை,

1986ல் மணல்சேனையில் 62பேர் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர்.

கிளிவெட்டியில் 35பேர் கைகள் பின்புறம் கட்டப்பட்டுச் சுட்டுக்கொன்று எரிக்கப்பட்டமை.

1996 பெப்ரவரி கிளிவெட்டிக் குமாரபுரம் படுகொலைகள் (24பேர்)

1990 திருகோணமலை பெரிய கடையில் 40பேர் கொலை.

1996 - ஒக்டோபர் திருகோணமலைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் கொலை.

1998 ஜனவரி தம்பலகாமம் படுகொலைகள் (8பேர்)

2000 ஒக்டோபர் ஈச்சிலம்பற்றுப் பகுதியில் 7 கிராமத்தவர்கள் வெட்டிக் கொலை.

ஆகியன என்னால் சட்டென்று சொல்லக்கூடிய ஞாபகத்தில் இருக்கும் போது இவர்கள் எப்படி மறந்து போனார்கள்...?" என்று கூறினார்.

சரியான கேள்விகள் தான்.

நன்றி - நூலகத்திட்டம்



# இதுவரை காலமும் எந்தக் கவிஞனும் புத்தரை இப்படிக் கீழிறக்கியதில்லை!

~ சு.வில்வரத்தினம்

சரிநிகர் இதழில் (208) கலாவின் 'அழுகை" எனும் கவிதையைப் படித்தேன். மோசமான மனித உரிமை மீறல்களினால், திட்டமிடப்பட்ட அரச பயங்கரவாதச் செயல்களினால் பாதிக்கப் படுகின்ற மெல்லிதயம் கொண்ட ஒரு படைப்பு உள்ளத்தின் கொந்தளிப்பு இவரது கவிதைகளில் காணக்கிடக்கிறது. சிலவேளைகளில் இந்தக் கொந்தளிப்பின் அத்துமீறிய உணர்ச்சி வேகத்தையும் காணலாம். இதனால் அறிவு பூர்வமான பார்வையும் அதற்கேற்றதான சொற்தேர்வும் பின்தள்ளப்பட்டு உணர்ச்சி பூர்வமானவையே முன்னிலை வகிக்கின்ற ஆபத்தும் நேர்ந்து விடுகிறது. இவரது 'கோணேஸ்வரி" கவிதையிலும் இத்தகைய ஒரு ஆபத்து விளிம்பு நிலையில் தப்பிக் கொண்டது. இவரின் கவியாற்றலில் குறைவில்லை. ஆனால் உணர்ச்சியின் உந்துதலுக்கு மட்டுமே வடிவம் கொடுப்பதால் இயல்பாக ஒரு கவிஞனுக்கு / கவிஞைக்கு அமைய வேண்டிய தரிசனத்திற்கு குந்தகம் செய்து விடுகிறது. அறிவு, உணர்வு இரண்டிற்கும் இணைவு கண்டு அதனூடான ஒரு தரிசனம் கவிதையில் புலப்பாடு காணுவதே கவனிக்கப்பட வேண்டிய அம்சம் என்பது எனது கருத்து. இத்தகைய தரிசனமின்மையால், கட்டுமீறிய சொற்களின் சில வரிகளினால், நன்றாக வந்திருக்கக் கூடிய ஒரு கவிதை கெட்டுப் போனதற்கான அடையாளங்களை கலாவின் 'அழுகை" கவிதை கொண்டிருக்கின்றது. அதில் சில வரிகளை கீழே கவனிப்போம்.

"எங்கள் ஈரலை இரத்தத்தில் தோய்த்து

சுட்டுத் தின்றார்கள் அவர்கள்"

..............................

"புத்தர் கடைவாயில் வடிந்த வீணீரை

திருட்டுத்தனமாய் உள்ளிழுத்துக் கொண்டார்

விக்கித்துப் போயிற்று எல்லாம்"

நானும் கூட விக்கித்துப் தான் போனேன். ஈழப் போராட்டச் சூழலில் இதுகால வரையும் எந்தக் கவிஞரும் புத்தரை இப்படிக் கீழிறக்கியதில்லை. புத்தரை முன்னிறுத்தி பௌத்தத்தை பின்பற்றுவதாய்ச் சொல்லி கொள்ளும் அரசு களினதும், பௌத்த பிக்குகளினதும் நடவடிக்கைகளை கேள்விக்குள்ளாக்குவதும், இரண்டிற்கும் இடையேயுள்ள முரண் நிலையை வெளிப்படுத்திக் காட்டுவதையுமே போராட்டச் சூழலில் எழுதப்பட்ட கவிதைகள் கொண்டிருந்தன. உதாரணமாக நுஃமானின் "புத்தர் படுகொலை" சு.வி.யின் "புத்தரின் மௌனம் எடுத்த பேச்சுக்குரல்" ஹம்வத்வனியின் ஒரு கவிதை போன்றவற்றைக் குறிப்பிடலாம். (இவை பற்றிய ஒரு சிறுகுறிப்பை "ஞானம்" புரட்டாதி இதழில் துரை மனோகரனால் பட்டியலிட்டு எழுதப்பட்டமை குறிப்பிடத்-தக்கது.)

1983 இற்குப் பின்னால் வலுவடைந்த ஈழப் போராட்ட காலத்தின் சுவரொட்டிப் பிரச்சாரங்களில் கூட புத்தரின் கண்களில் இரத்தக் கண்ணீர் வடிவதாக சித்திரிக்கப்பட்ட பல்வேறு இயக்களின் உணர்ச்சி மிக்க வெளியீடுகள், பத்திரிகைகள், நூல்கள், எல்லாவற்றிலும் புத்தரின் உன்னத ஸ்தானத்தை முன்னிறுத்தியவாறே அதற்கு எதிர்மறையாக அமைந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தமிழ் விரோதச் செயற்பாடுகள் கண்டனத்திற்குரியவையாக அமைந்தன.

காவிய காலம் தொட்டு இன்று வரையும் தமிழகத்தின் பல கவிஞர்களும் புத்தரின் அன்பும் கருணையும் நிரம்பிய வடிவையே சித்திரித்தனர். தேசிகவிநாயகம் பிள்ளையிலிருந்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வரையிலும் இப்படித்தான். "காலொடிந்த ஆட்டிற்காக கண்ணீர் விட்ட புத்தரும்" என்ற பட்டுக் கோட்டையின் பாடல் வரிகள் மிகவும் பிரசித்தமானது. இவ்வாறாக தமிழ்க் கவிஞர்கள் புத்தரை கருணையின் உருவமாகவுமே தான் முன்னிறுத்தினார்கள். உண்மையும் அதுதான்.

புத்தர் உண்மையைத் தேடியவர். அதன் பொருட்டாக அரச போக வாழ்வையே துறந்தவர். இந்தியாவில் வருணாச்சிரமக் கோட்பாடு மனித விடுதலைக்கெதிரான கோட்பாடாக இறுகிய போது அதை உடைத்தெறியும் வகையில் சாதி, வர்ண, இன, பேதம் தாண்டிய மாற்றத்திற்கான சிந்தனையை முன்வைத்தார். அதற்காகக் கடுமையாக உழைத்தவர். நவீன இந்தியாவிலும் பிராமணியத்தை மேன்நிலைப்படுத்திய இந்துத்துவ வருணாச்சிரம தர்மக் கோட்பாட்டின் காரணமாக, நிறுவன மயப்பட்ட சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்த தலித் முன்னோடியான அம்பேத்கார் புத்தரின் கோட்பாட்டை வரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்திலும் "தமிழன்" என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்திய அயோத்தி தாசப் பண்டிதர் பௌத்த நெறி தமிழ் நெறியே என உள்வாங்கி ஒடுக்கப்-பட்டோரின் விடுதலைக்குரிய விடுதலை நெறியாக இனங் காட்டினார்.

பண்டைய தமிழகத்தில் வாழ்ந்த பல பௌத்த அறிஞர்கள் (இவர்களின் அறிவோர் கூடம் காஞ்சிபுரத்தில் அமைந்திருந்தது). உலகமெல்லாம் யாத்திரை செய்து பௌத்த சிந்தனையைப் பரப்பியவர்கள். பௌத்தம் இந்தியாவில் தனது செல்வாக்கை இழந்த பின்னாட்களில் தமிழகத்திலும் அது குன்ற-லாயிற்று. ஈழத்திலும் வடக்குக் கிழக்கில் வாழ்ந்த தமிழர்கள் மத்தியிலும் பௌத்தத்தின் செல்வாக்கு குன்றியது. அவர்கள் வழிபட்ட பௌத்த சின்னங்கள் தான் தொல்பொருளாய்வில் கண்டெடுக்கப்பட்ட போது அப்பிரதேசங்கள் சிங்களவரது பூமியாக இருந்தன என்று சிங்கள வரலாற்றாசிரியர்கள் திரிபு படுத்தினர். இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில் பொய்யான ஆவணங்களையும் இடைச் செருகினர். உண்மையில் ஒரு காலத்தில் பௌத்தர்களாக இருந்த தமிழர்களால் வழிபடப்பட்ட பௌத்த சின்னங்கள் தான் கண்டெடுக்கப்பட்டவையாம். இதனை பொ.இரகுபதி போன்ற வரலாற்றாய்வாளர்கள் நிறுவியுள்ளனர்.

எங்கள் ஊரான புங்குடுதீவிலும் கூட முன்னர் ஒரு புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டது. ஊரில் அறியாமைக்குரிய மக்கள் சிலர் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலையின் கைகளையும் கால்களையும் உடைத்து தலையையும் பெயர்த்து புங்குடுதீவு வல்லனிலுள்ள பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைக்கும் கல்லாக வைத்து விட்டனர். போவோர் வருவோர் எல்லாம் புத்தர் சிலையில் தேங்காயால் மொத்த காணும் போதெல்லாம் நாம் வருந்திய நாட்கள் பல. இது மக்களின் அறியாமையால் மட்டும் நேர்ந்ததல்ல. சிங்கள பௌத்த பேரினவாத நடவடிக்கைகளால் ஏற்பட்ட எதிர்விளைவு தான் என்பதையும் நாம் புரிந்தே இருந்தோம்.

எங்கள் ஊரான புங்குடுதீவிலும் கூட முன்னர் ஒரு புத்தர் சிலை கண்டெடுக்கப்-பட்டது. ஊரில் அறியாமைக்குரிய மக்கள் சிலர் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலையின் கைகளையும் கால்களையும் உடைத்து தலையையும் பெயர்த்து புங்குடுதீவு வல்லனிலுள்ள பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைக்கும் கல்லாக வைத்து விட்டனர். போவோர் வருவோர் எல்லாம் புத்தர் சிலையில் தேங்காயால் மொத்த காணும் போதெல்லாம் நாம் வருந்திய நாட்கள் பல. இது மக்களின் அறியாமையால் மட்டும் நேர்ந்ததல்ல. சிங்கள பௌத்த பேரினவாத நடவடிக்கைகளால் ஏற்பட்ட எதிர்விளைவு தான் என்பதையும் நாம் புரிந்தே இருந்தோம். (அங்கவீனப்படுத்தப்பட்ட புத்தர் சிலை பின்னால் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளராய் இருந்த பொ.இரகுபதி அவர்களாலும் மாணவர்களாலும் எடுத்துச் செல்லப்பட்டு தொல் பொருட் கூடத்தில் பேணப்பட்டது.) எப்படியோ சாதாரண மக்கள் புத்தரையும் ஆக்கிரமிப்பின் சின்னமாக அடையாளம் கண்டு புத்தர் சிலையை உடைத்தமையை நாம் மன்னித்து விடலாம். ஆனால் அறிவறிந்தோர் தமது பேச்சிலும், எழுத்திலும் உணர்ச்சி மிகுதியால் புத்தரின் விடுதலை விம்பத்தை உடைத்துச் சிதைக்கும் வகையில் சித்திரிப்பதை மன்னிக்க முடியாது. புத்தர் இரத்தக் கண்ணீர் வடிப்பதாகக் காட்டுவதற்கும் மனித ஈரலை சுட்டுத் தின்பதைக் கண்டு புத்தர் வீணீர் வடிப்பதாகவும் பிறகு திருட்டுத்தனமாக உள்ளிழுத்துக் கொள்வதாகக் காட்டுவதற்கும் இடையே எத்தனை மோசமான வேறுபாடு-கள். சிங்கள சித்தாந்தப் பிடியில் இருந்து புத்தரையும் அவரது சிந்தனைகளையும் விடுவித்து இன்றைய காலத்திற்கும் ஏற்புடைய புதிய தரிசனத்தை உருவாக்க வேண்டிய நாம் உணர்ச்சிகளின் வயப்பட்டு அறிவார்த்தமான சமதளப் பார்வையை இழந்து விடல் கூடாது.

இந்த இடத்தில் எனது 'அகங்களும் முகங்களும் - 1 என்ற கவிதை குறித்த விமர்சனத்தை முன் வைத்த சி.சிவசேகரம் அவர்கள் ஆட்சேபனைக்குட்படுத்தியிருந்த வரிகள் சில ஞாபகத்திற்கு வருகின்றன.

"மழித்த தலைகளிற்கும் மஞ்சள் அங்கிகளிற்கும்

புலப்படாது புதைக்கப்பட்டு விட்ட

புத்தரின் அன்பு துலங்கும் வரை செதுக்குங்கள்"

மேற்கண்ட வரிகளில் மழித்த தலைகள், மஞ்சள் அங்கிகள் என்பவையே சிவசேகரம் அவர்களின் ஆட்சேபனைக்குரியவையாக இருந்தன. உண்மையான பௌத்த துறவி-களையும் சீண்டுபவையாக உள்ளன அவ்வரிகள் என்ற வகையில் அவரது ஆட்சேபனைக்குள் அடங்கியிருந்த ஆதங்கத்தை நான் புரிந்து கொண்டேன். எனினும், புத்தரின் அன்பு துலங்காத வெளிவாரியான துறவுக் கோலம் குறித்த கண்டனமாகவே அவ்வரிகள் அமைந்-திருந்தன. இதில் உலகம் பழித்ததை ஒழிக்-காமல் மழித்தலும் நீட்டலும் ஏன்? என்ற வள்ளுவனின் கருத்தையே நான் எதிரொலித்தேன். இது புத்தரின் மீதான கண்டனமாக அல்லாது புத்தரைப் பின்பற்றுவோராகச் சொல்பவரின் நெறி பிறழ்தலையே விமர்சனத்திற்குட்படுத்தியது.

ஆனால் கலா தனது கவிதையில் கையாண்ட சொற்றொடரோ பாவம் ஓரிடத்திலிருக்க பழியை புத்தரின் தலையில் போடுவதாக, உலகம் பழிக்கும் சொற்களையும் புத்தர் மீது வாரியிறைப்பதாக உள்ளன. வாரியிறைக்கப்பட்ட இந்தச் சொற்களின் சேறு புத்தரின் மீதல்ல: ஒரு காலத்தில் ஒப்பற்ற சிந்தனையின் மீதும்., அச்சிந்தனை-களை அடியொற்றி விடுதலை வளர்ப்போரின் நல்லுணர்வின் மீதும் வாரி வீசப்பட்டது என்பதே என் அபிப்பிராயம். இத்தகைய கவிதை வரிகளெல்லாம் ஒரு எதிர்ப்பிலக்கிய வகையை சார்ந்தவையாகாதா? என்று எவரேனும் கேள்வி எழுப்பினால் அவரது அறியாமைக்காக நாம் சற்றே வருத்தப்படலாம்.

சரி, புத்தர் போகட்டும், மிச்சமுள்ள மனுநீதிச் சோழர்கள் என்றும் சோழர் பெருமை பற்றிய கவிதை வரிகளிற்கு வருவோம்.

உங்களிடம் நீதி விசாரணை கோரப் போவதில்லை

ஏனெனில் நீங்கள் மனுநீதிச் சோழர்கள் அல்ல.

என்ற கவிதை வரிகளில் இன்றைய அரசின் நீதி விசாரணைகளின் போலித்தனங்கள் குறித்து ஆட்சேபம் இல்லை. ஆனால் இந்த பிரச்சினை இந்த மனுநீதி பற்றியதும், மனுநீதிச் சோழர்கள் பற்றியதும் தான். மனுநீதிச் சோழன் என்று ஒற்றையில் குறிப்பிட்டிருந்தாலும் பரவா-யில்லை. ஏதோ ஒரு சோழன் நீதியாய் இருந்து விட்டும் போனானாக்கும் என்று கொள்ளலாம். அது சேக்கிழார் குறிப்பிடும் அநபாயச் சோழனாய் இருந்தாலும் சரி. ஆனால் புத்தரை இகழ்ந்த வாயால் மனுநீதிச் சோழர்கள் என்று புகழ்க்கிற அடைமொழி இருக்கிறதே அது பற்றிச் சிறிது அலசத் தான் வேண்டியுள்ளது.

அது என்ன மனுநீதி. இது பற்றி திருக்குறள் புகழ்ந்து எழுதிய ஒரு பாடலை உதாரணத்திற்கு தந்தாலே போதும். விஷயம் விளங்கிவடும்.

வள்ளுவர் செய் திருக்குறளை

மறுவற நன்குணர்ந்தோர்கள் (தேரர்கள்)

வள்ளுவரோள மனுவாதி

ஒரு குலத்துக்கொரு நீதி"

இதன் மூலம் மனுதர்ம சாஸ்திரம் ஒரு குலத்திற்கு ஒரு நீதியை முன்வைத்தது என்பது தெளிவாகிறது. இந்த நீதி முறைமை மட்டுமல்ல. பல்வேறு முறைமைகளும் சோழர் காலத்தில் அவர்களால் பெரிதும் ஆட்சி முறை அழுத்தத்திற்கு வந்த ஆரிய மயமாக்கலின் விளைவுகள் தான். எல்லா மன்னர்களையும் போலச் சோழர்களும் ஆதிக்கக் கனவுகளோடு அரசுக்கு வந்தவர்கள் தான். ஆதிக்க சக்தி-யுடையவர்களாகவும் மாறி சோழ மண்ட-லத்தை மும்முடிச் சோழ மண்டலமாகவும் மாற்றிக் கொண்டார்கள். வடக்கில் இருந்து பிராமணர்களை ஏராளமாகக் கொண்டு வந்து தமிழகத்தில் குடியேற்றி எண்ணிறந்த காணிகளை நிரந்தமாக வழங்கி தமிழரை அவர்களுக்கு அடிமை செய்ய வைத்தனர். பிராமணியம் தமிழகத்தில் கோலோச்சத் தொடங்கிய காலமும் அதுதான். அதுமட்டுமன்றி அவர்களின் மேம்பாட்டிற்காக ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உழைப்பாளிகளுக்கும் வரி விதிப்பு செய்தமைக்கு எதிராக அம்மக்கள் சோழர் கட்டிய கோபுரங்களில் ஏறி விழுந்து தற்கொலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வரலாறுகளும் சோழகுலப் பெருமைகளுள் ஒடுங்கிப் போயின. ஏன் ஈழத்திலும் முதலில் வடக்கே உருவாகிய தமிழரசாகிய கதிரை மலை அரசையும் சிதைத்து தமது ஆதிபத்தியத்தை விதைத்தவர்களும் வரும் சோழர்கள் தான். இதை பொ.இரகுபதி அவர்கள் தமது வரலாற்று ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி நிலாந்தன்

⇨17

நன்றி - நூலகத்திட்டம்



# எவரேனும் சொல்க!

சுவரொட்டிகளுக்கும்
இரண்டு முகம்
என்பது தெளிவாச்சு
சுவர்ப்புறமாய்
முகம் மறைந்த பின்புறத்தில்
எழுதியாச்சு
வன்முறையின் வாசகங்கள்
தெருநாய்கள் இதைப் பார்த்து
முறைத்து விட்டு
சிறுநீர் கழித்துச் செல்லலாம்;
இனவாத நாய்கள்
கடிக்கவும் குதறவும் புலியிறைச்சி
தின்னவும் பொழுதாச்சுதென்று
சப்புக் கொண்டியபடியும் செல்லலாம்";

கும்பிட்ட சுவரொட்டி
கொடுவாள் தூக்கியதைக்
கண்டுபிடிப்பதற்குள்
பண்டாரவளைக்கு
வந்து சேர்ந்து விட்டன
லொறி லொறியாய்
வெலிக்கடைக் கழிசடைகள்;
கத்திகள், வாள்கள், கோடரிகள்
புதை பொருளாய்வில்
புத்தரை மீட்டெடுக்க உதவிய
ஆயுதங்கள் கூட வந்தாயிற்று.
எல்லாமும் எண்பத்தி மூன்றின்
இரத்தக்கறை மாறாதவை

இனியென்ன? நித்திரைப்
பாயை விட்டு எழும்புவதற்குள்
வெட்டு; கோடரியால்
நெஞ்சைப் பிள;
ஈரற்குலையைப் பிடுங்கி
இரத்தக் காட்டேறிகளிடம் போடு;
கண்கள்!
குட்டிமணிக் கண்கள்!
தோண்டியெடு!
மூஞ்சியை மொங்கானால் சப்பளி!
மூக்கிற்குள் ஊக்கை ஓட்டியிழு!
அலவாங்கை காதுட் செலுத்து
மறுகாதின் வழி இழுத்து
ஊஞ்சலாட்டு!
தீமூட்டி வீசு! வீரிட்டழும் குரல்களும்
வெந்து போகட்டும் ! வீசு!

ஒன்று ரெண்டு
ஓரிரண்டு ரெண்டு!
ஈரிரண்டு நாலு!
நாலிரண்டு எட்டு!
எண்ணிரண்டு பதினாறு!
பதினாறிரண்டு முப்பத்திரண்டு!

ஆர்தொடக்கி வைச்சதிந்த
அரிச்சுவடிக் கணக்கு?
ஆர் தொடக்கினாலும் என்ன
அப்படியே பின்'ற்று;
வெலிக்கடை விட்டவழி
வியாபாரம் அமளி!
இன்றைய விசேடம் புலியிறைச்சி
மனிதப்புலால் நாறும் கையோடு
புனர்வாழ்வைத் துண்டாடு!

வடக்கு உனக்கு; கிழக்கு அவைக்கு;
பிணக்குப்படுக என பிரிச்சாடு
இடைக்கால மடம் கட்டி
பஞ்சத்து ஆண்டிகளுக்கு
பொதியை அவிழ்த்து
பரிமாறு பழைய சோறு;

ஆகட்டும் எங்களுக்கு புலியிறைச்சி
ஆரங்கே! புனர்வாழ்வு முகாமிற்கு
புதுசாக் கொண்டு வா இளசுகள்!
புலியிறைச்சி இனவாத உடம்பிற்கு நல்லது!
வெலிக்கடை வாசல் திறந்தது திறந்ததேதான்
பலிக்கடாவாய் களுத்துறைகள்
இன்றைக்கு பிந்துனவேவ*
இது புதுசு
புனர்வாழ்வின் பேரால் புலியிறைச்சிக்
கடைவிரிப்பு
சமாதானத்தின் பேரால் யுத்தம் என்பது
போல்

வேடுவம்; வெறியாட்டம்;
மலையகத்தில் ஆடுபுலியாட்டம்;
பாவம்! பச்சிளங் கன்றுகள்
மடி முட்டிக் குடித்தவைகள்
வாலைக் கிளப்பிக் கொண்டு
ஊர்வழியே ஓடித்திரிஞ்சதுகள்!
வீதிவிடங்கப் பெருமானே!
விடுதலை நாளை அல்லது நாளையின்றென
கூவிக் களிச்சதுகள்
அதர்மச் சக்கரங்கள் ஏறிமிதிக்க
ஆணையிட்டதார்?
குரல் வளைகள் முறித்து
குருதி பீச்சிக் கிடந்தன காண்;

பிறகென்ன? வெட்டிச் கொத்தி
விடிய விடியப் புலியிறைச்சி
விநியோகமாச்சுது
இனவாத நாய்களுக்கு!
தெருநாய்கள் முகஞ்சுழித்த
சுவரொட்டி வாசகங்கள்
இனவாத நாய்களால்
எல்லாம் பலிதமாச்சு
பேயரசு செய்தால்
பிணந்தின்னும் சுவரொட்டிகள்


கவனியுங்கள் ;
இன்னும் மீதமிருக்கின்றன சுவரொட்டிகள்;
இன்னும் மீதமிருக்கின்றன இனவாத
சுலோகங்கள்;
இன்னும் மீதமிருக்கின்றன புத்தசாசனங்கள்
புனித சின்னங்கள் பத்திரமாய்;
எவராவது சொல்க
மீதமாய் இருக்கின்றனவா புத்தரின்
அன்பு, கருணை, நற்செயல்கள் துளியேனும்?
எவரேனும் சொல்க
இனவாதப் புலால் நாறாத வாயால்

—சு.வி.

பிந்துனுவேவ - பண்டாரவளையில் தமிழ் இளைஞர்கள் முப்பத்தொருவர் இனவாத அரசால் படுகொலை செய்யப்பட்ட புனர்வாழ்வு முகாம் அமைந்திருந்த இடம்


# மஹாகவி பாரதியை "பாரதி" கொச்சைப்படுத்துகிறதா?

பாரதி திரைப்பட காட்சியும், அதைத் தொடர்ந்த கலந்துரையாடல் ஒன்றும் கடந்த ஞாயிறு மாலை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் 'விபவி'யினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வைத்தியரும், எழுத்தாளருமான எம்.கே.முருகானாந்தன் அவர்களது தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில், பாரதி திரைப்படத்தின் 'வீடியோ' பிரதி ஒன்று காண்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடல் தலைவர் எம்.கே. முருகானந்தன், எஸ்.கே.விக்னேஸ்வரன், சோ.தேவராஜா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கலந்துரையாடலில் திருமலையில் இருந்து வந்திருந்த சட்டத்தரணி சிவபாலன், காவலுார் ராஜதுரை, தேவதாஸ், யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த குப்பிளான் ஐ.சண்முகன், கலைவாதி கலீல், ஔவை, கே.எஸ். சிவகுமாரன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.




தலைவர் எம்.கே. முருகானாந்தன் அவர்கள் திரைப்படங்கள் பற்றியும், தமிழில் நல்ல திரைப்படங்களின் குறைவான வருகை பற்றியும், தமது அறிமுக உரையில் குறிப்பிட்டதுடன் 'பாரதி' திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் அத்தயாரிப்பில் இயக்கம், ஒலி ஒளிப்பதிவு போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் பற்றியும் விளக்கினார்.

இதையடுத்து பேசிய எஸ்.கே.விக்னேஸ்வரன், பாரதி திரைப்படம் இதுகாலவரை பாரதி பற்றிய எழுத்துக்களூடாக நமக்குக் கிடைத்த தகவல்களினூடாக நம்மத்தியில் பாரதி பற்றி ஏற்பட்டுள்ள ஒரு பிம்பத்தை இப்படம் உடைக்கிறது என்றும், பாரதி திரைப்படம் பாரதியின் இன்னொரு பக்கத்தை - ஒரு குடும்பஸ்தனான பாரதி என்ற பக்கத்தை - எமக்குக் காட்டுகிறது என்றும், இதுவே இந்த உடைப்பிற்கு காரணமாக அமைகிறது என்றும் குறப்பிட்டார். ஆயினும், இந்த உடைவு தவிர்க்க முடியாததும், அவசியமானதும், பலரையும் சிந்திக்க வைக்கக் கூடியதும் கூட என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் பாரதியின் பாடல்கள் இளையராஜாவின் இசையில் மிகவும் சிறப்பாக வந்துள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டதுடன், 'பாரதி'யை எடுத்துவிட்டு பார்த்தால் அல்லது பாரதிக்குப் பதிலாக வேறொரு நபர் இந்த கதாநாயகனாக இருந்திருந்தால், இப்படம் ஒரு அசல் தமிழ்ப் படமாக எந்த சர்ச்சைகளுமற்ற ஒன்றாக இருந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.



சோ. தேவாராஜா தனது கருத்தை தெரிவிக்கையில் இப்படம் பாரதியை அவரது குடும்ப வாழ்வு, கனகலிங்கத்தை பூநூல் அணியவைக்கும் சடங்கை செய்தல், மகளின் திருமணத்திற்காக திரும்பவும் பூநூல் அணிதல், ஒரு பொறுப்பற்ற மனிதனாகக் காட்டல் என்பவை சமகால அரசியல் சமூக சிந்தனைகளாக செல்வாக்குப் பெற்றுவரும் பெண்ணியம், தலித்தியம், போன்றவற்றின் செல்வாக்கினால் உந்தப்பட்டு பாரதியை நோக்குவதாக அமைவதால், பாரதி என்ற மகாகவியின் ஆளுமைகளையும் கௌரவத்தையும் கொச்சைப்படுத்துவதாக அமைகிறது என்று குறிப்பிட்டார். பாரதியை கொச்சைப் படுத்தக் கூடிய இந்த திரைப்படக் கதைக்கான ஆதாரங்களை தயாரிப்பாளர்கள் எங்கிருந்து பெற்றார்கள் என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

இவரது பேச்சையடுத்து நடந்த சபையோர் உரையாடலில் பேசிய சட்டத்தரணி சிவபாலன் திரைப்படத்தை வீடியோவில் பார்க்கக் கூடாது என்றும், அதன் 30சதவீதமான சிறப்பை இதன் மூலம் நாம் அனுபவிக்க முடியாமல் போய்விடும் என்றும் சொன்னார்.

குப்பிளான் ஐ.சண்முகன் அவர்கள் தனது கருத்தினைத் தெரிவிக்கும் போது இப்படம் ஒரு 'டொக்குமன்டரி' வகையைச் சேர்ந்தது என்றும், ஒரு திரைப்பட நெறியாளர் என்ற வகையில் ஞான ராஜசேகரன் பார்வையாளர்களிடம் எத்தகைய அனுபவத்தை தொற்ற வைத்திருக்கின்றார் என்று கேட்டால் வெறுமையே எஞ்சுகிறது என்று குறிப்பிட்டார். இளையராஜாவின் இசையில் பாடல்கள் சிறப்பாக வந்துள்ளன என்று கூறப்படுகிற போதும், பாரதியின் பாடல்களது வீச்சையும், கம்பீரத்தையும் இவற்றில் காண முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்தப்படம் மிகவும் சராசரியான ஒரு படம் தான் என்றதையும் அது எப்படி போகப் போகிறது என்பதையும் 'சுப்பையா'வாக இருந்த சிறுவன் மூலம் பாரதி பற்றிய ஆரம்பக் காட்சிகளிலேயே ஞானசேகரன் வெளிப்படுத்திவிட்டார். அதன் பின் வந்தவை வெறும் இணைப்புகள் தான் என்று குறிப்பிட்டார்.

பாரதி என்ற மகா கவிஞனை கொச்சைப்படுத்துவதையும், பிராமணியத்தை ஏற்றுக் கொண்டு செயற்படும் ஒருவனாக பாரதியைக் காட்டுவதாகவும், பொறுப்பற்றவனாக அவன் காட்டப்படுகிறான் என்றும், உரையாடல் தொடர்கையில், 'உண்மையில் இங்கே பிரச்சினை குடும்பம் பற்றியது. பாரதி என்ற கவிஞன் தனது குடும்பத்தளைகளிலிருந்து விடுபட்டவனாக இருப்பதால் அவனால் மகா கவிஞனாக வரமுடிந்தது. ஆனால், குடும்ப அமைப்பினுள் அமிழ்ந்தியுள்ள ஒரு கலைஞரால் மகா கவியாக வரமுடியுமா? பாரதி பற்றி அறிய அவனது படைப்புகளைப் படிப்போம். அவனது குடும்ப உறவை வைத்து அவனை எடைபோடத் தேவையில்லை. ஆனால், குடும்ப அமைப்பு கலைஞர்களின் ஆளுமையை வளரவிடாமல் தடுக்கிறது. அது ஆணாயிலும் சரி, பெண்ணாயிலும் சரி, இதைப் பற்றிப் பேச நாம் பயப்படுகிறோம். ஆனால், அதுதான் மையப் பிரச்சினை' என்று ஔவை கூறினார். இது தொடர்பான விவாதம் ஆரம்பித்து சூடுபிடிக்க முன்பாகவே நேரம் போதாமையால் கலந்துரையாடல் இடையில் நிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சி இரண்டு முக்கிய கேள்விகளை நம்முன் போட்டு வைத்ததில் வெற்றி பெற்றிருக்கிறது.

ஒன்று 'பாரதி' படம் மகாகவியை கொச்சைப் படுத்துகிறதா? மற்றையது 'குடும்ப அமைப்பு' கலைஞர்களின் ஆளுமையை வளர விடாமல் தடுக்கிறதா?

- இதை ஒழுங்கு செய்த விபவியினர்க்கு பாராட்டுக்கள் உரியவை!

– மகேஸ்

நன்றி - நூலகத்திட்டம்






கருஞ்சுழிக்குள் ஆழப் புதைந்து தொலைந்து போகவிருந்த, நெபுலக் கட்டியை சுழியின் அரைவழியிலேயே பிடித்திழுத்து திறந்து பார்த்தேன். கோடானுகோடி கலக்சிக்குள், கவிழ்த்து வைக்கப்பட்ட இரண்டு வெள்ளை நிற சோற்றுப் பீங்கான்களை கஷ்டப்பட்டு கண்டுபிடித்தேன்.

அதனுள்ளும் கோடானுகோடிகள் நட்சத்திரங்களாய். எங்கிருந்தோ பாலை வனத்து நெடும் பயணத்து வழிப்போக்கனாய், அழையா விருந்தாளியாய் வந்த, கல்லொன்று நட்சத்திரமொன்றுடன் மோத, அது பத்துப் பதினொன்று துண்டுகளாய் சிதிலமடைகின்றது. கைக்கெட்டும் தூரத்தில் இருக்கின்ற துண்டு , குளிர்ந்து திண்மமாகி, நீருண்டாகியது. கண்டங்கள் மோதி, பஞ்ஜியாக்கள் பஞ்சுகளாய் விலகின. மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை நீராய் இருக்க இந்த துண்டோ, பூமியெனப்பட்டது. அப்போதே பெரும்பான்மை - சிறுபான்மை திரிபுகளும் தொடங்கிவிட்டிருந்தன.

அண்டவெளிக் கடலில் வெளித்துண்டு பூமிக் கப்பல் ஓடிக் கொண்டிருக்கிறது. வெள்ளையாய் படிந்து கடலடியில் உயிர் தோன்றி, ஒரு கலம், இரு கலமாகி, இழையமாகி, அங்கமாகி, தாவரமாகி, விலங்குகளாகியது. விலங்குகளுள் சில மிருகங்களுமாகின. மிருகங்கள் நான் என்றன. நானுக்குள் தொலைந்து, மூழ்கி, இரத்தத்தாலும், வாந்தியாலும், சீழாலும் முக்குளித்து சுயம் கொண்டு வந்தன. திடீரென வால் முளைத்த வானரங்கள் வந்தன. சுயநலத்தில் மூழ்கி மனிதன் தேடின. தேடியும் கிடைக்காமல் அலுத்துப் போய் வாலிழந்து, நிமிர்ந்து மனிதனாய் வந்தன. எனக்கோ தலை சுற்றியது. எனது பொறுமையைத் தொலைத்த நான், எனது கூடு தேடி பறக்கத் தொடங்கினேன்.

**

எனது நாட்டை கட்டியெழுப்ப, Operation terminated seeds (மழுங்கடிக்கப்பட்ட விதைகள்- இனி சுருக்கமாக ots எனப்படும்) திட்டத்திற்கான தலைமைப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. குட் ஹெறட் இஸ் நொட் எ டிக்ரெற்றர். பட் உறீ இஸ் த டெடிக்கேற்றர்- நல்ல தலைவன் சர்வாதிகாரமாக ஆணையிடுபவனல்லன். ஆனால் செயலில் இறங்கி தியாகிப்பவன். எனவே நானே செயலில் இறங்கினேன். (நான் எனப்படும் அம்ரிஷ் ஸாகர்- உயிர் இரசாயன உயர் தொழிநுட்ப, இராணுவ விஞ்ஞான கலாநிதிப் பட்டதாரி).

வள நாட்டில் பெரிய நீர்த்தேக்கம் ஒன்று இருந்தது. வளநாட்டிலிருந்து செழிநாடு பிரிந்து தனி நாடாகியபோது, அந்த நீர்த்தேக்கத்தை வளநாட்டுக் காரர்களாகிய நாங்கள் எடுத்துக் கொண்டு, இந்த நீர்த்தேக்கத்திற்கு அப்பால் எல்லை போட்டுக் கொடுத்தோம். எங்கள் நாட்டுக்கு நீர் தந்து, மின்சாரம் உருவாக்கி, பயிர் வளர்த்து, செல்வம் கொழிக்க வைத்து, எங்கள் நாட்டு மக்களுக்கு வாழ்வு தந்த இந்நீர்த்தேக்கத்தில், மூன்று மாதங்களுக்கு முன்னால், அதே மக்களுக்கு, மற்றவனை அடுத்துக் கெடுத்து, சாம்பல் மேட்டில் கட்டடம் கட்டி சுகபோக வாழ்க்கை நடாத்தி, நல்ல உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொடுக்க நான் செயலில் இறங்கினேன்.

இரவோடிரவாக நீர்த்தேக்கத்தை அண்டியிருந்த எங்கள் நாட்டு மக்களை, வெள்ளப் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்திவிட்டு செயலில் இறங்கினேன். இல்லை நீரில் இறங்கினேன்.

நானும் இன்னும் ots ஐச் சேர்ந்த மூன்று பேரும், நடு இரவு நேரம் படகிலிருந்து ஒக்சிஜன் சிலிண்டர்களை வாய்க்குள் திணித்து நீருக்குள் விழுந்தோம். பின் செழிநாட்டுப் பக்கமிருந்து அணைக்கட்டின் அடிக்கு நீந்திச் சென்றோம். நான்கு பேரும் தயாராக வைத்திருந்த குண்டுகளை பொருத்தினோம். வெடிக்கும் நேரம் 61 நிமிடமா அல்லது 19 நிமிடமா எனத் தெரியவில்லை. குழம்பிப் போனேன். 61 நிமிடமாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன். இன்னும் பல இடங்களிலும் நேரத்தைச் செலவழித்து குண்டுகளைப் பொருத்திவிட்டு விரைவாக மேலே வர முயற்சி செய்துகொண்டிருந்தோம்.

சத்தங்கள் பலமாய்க் கேட்க, தொடர்ச்சியானது எனவும், வாலில் இறந்ததையும், தலைப்பக்கத்தில் எதிர்வையும் கொண்டுள்ளது என்று அபத்தமாய் எண்ணும், நிகழ்வதுவே யதார்த்தம் என்ற காலத்திற்கான வெடி வெடித்தது.

எங்கள் திருவிழா தினங்களில் வாண வேடிக்கையின், பட்டாசு வெடிகளின், பல நாளாய் அடைத்து வைக்கப்பட்ட புறாக்களை, திறந்து மேகத்துள் கலப்பதற்காக, கொண்டாடப்படும், சுதந்திர தினவிழாக்களின் பீரங்கிகளிடை மரியாதைக் குண்டுச் சத்தங்கள் போல், குண்டு வெடித்து சத்தம் போட்டு அணை உடைந்தது.

அடுத்த நாள் காலை செழி நாடு எங்கும் வெள்ளம். விதவைகளின் கணவர்களினதும். தபுதாரர்களினது



மனைவிகளினதும், பிள்ளைகளின் பெற்றோர்களினதும், பெற்றோர்களின் பிள்ளைகளதும் பூதவுடல்கள் ஆடு, மாடு, நாய்களுடன் மிதக்கத் தொடங்கின. இந்தப் பூதவுடல்களின் மீது எனது நாட்டின் சுயாதிபத்யம் , இறைமை, கௌரவம், பொருளாதாரங்களின் அடித்தளம் காலையில் தெரியத் தொடங்கியது.

குண்டு வெடித்த செய்தி கேட்டு சந்தோச மிகுதியால் விடிய விடிய விஸ்கியடித்து, அரண்மனை மஞ்சத்தில் மங்கைகளுடன் கொஞ்சிக் குலவிய வளநாட்டு தலைவர்களும் அமைச்சர்களும் அடுத்த நாள் கண்ணை கசக்கி பிதுக்கி, மலத்திவிடும் இரங்கல் செய்திகளுக்காக முதலைக் கண்ணீர் வடிக்க பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

வளநாட்டுத் தலைவர் கிளிசறீன் வாரி முகர்ந்து, கண்ணீர் வடித்து, ஒரு தாயின் பிள்ளைகளாக (தென்னம் பிள்ளையா? அல்லது கீரிப் பிள்ளையா?) இருந்த நாம் பிரிந்து கொண்டோம். ஆனாலும் உங்களுக்கோர் துன்பம் என்றால் அது எங்களுக்கானது மாதிரி. எங்களால் முடிந்த உதவிகளைச் செய்வோம் என்று அறிவித்தார்.

ஓசியிலயெண்டா அம்மாக் கொண்டு, அப்பாக் கொண்டு, அதுவும் ஆபத்திலயெண்டா சின்னம்மாக்கொண்டு, பெரியம்மாக்கொண்டு என்ற அடிப்படை மனப்பான்மையை சரியாக அளவெடுத்துக் கொண்டோம். எங்கள் வேலையைக் காட்டத் தொடங்கினோம். அதிக உரங்கள், பூச்சி, பீடை நாசினிகள் தேவைப்படும் (இவைகளை நாங்களே ஆரம்பத்தில் இலவசமாகவும், பின்னர் கடனாகவும் கொடுப்போம். ஒரு நிலையில் எங்கள் நாட்டின் பாரிய கடன்காரனாக செழிநாடு ஆகும். ஏனெனில் நாங்கள் கொடுக்கும் விதைகளுக்கு எங்களது இரசாயனங்கள் மட்டுமே பொருந்தக் கூடியதாகையால்)

நோய் பீடைத் தாக்கம் கூடிய குறுகிய கால விளைச்சல் கொண்ட, அதன் அறுவடைகளை சாப்பிட்டால் உடம்புக்கு அலர்ஜி, புற்று நோய் வரக்கூடிய, நரம்பு, தசைநார் இழையங்களின் அயன் கால்வாய்களை அடைத்து ஆளின் கதையை முடிக்கும், அல்லது அங்கவீனராக்கும் பதார்த்தங்களை சுரக்கக்கூடிய, மீண்டும் நாற்றாய் பாவிக்க முடியாத இயல்புகளைக் கொடுக்கக்கூடிய, வைரசுகளிலிருந்து எடுத்த பரம்பரை அலகை பயிர் விதைகளுக்கு பொருத்தி பரம்பரையலகு மாற்றம் செய்யப்பட்ட விதையைப் படைத்து, படைத்தல் தொழிலைச் செய்ததினால் நான் பிரம்மாவாகியதாக மகிழ்ந்த போது,ots இன் கதாநாயகனும் தயாரானான். மானியத் தொப்பியும், இலவச மார்புக் கவசமும் அணிந்து கதாநாயகன் தயாரானான். இலவசமாக கொடுக்க விரைவாக வளர்ந்து, பெருத்து உள்நாட்டு மீனினங்களை நீர்நிலைகளிலிருந்து துரத்தும் மீனினங்களை உருவாக்கினேன்.

தாய்ப்பால் சுரக்கும் மாடு, தந்தையில்லா கால்நடைகள், வளர்ந்த நாடுகளுடன் செழிநாட்டை சண்டை மூட்ட, அந்நாடுகளின் பேடண்ட் பண்ணப்பட்ட தானியவகை, எண்ணெய்தரும் விதைவகைகளின் போலிமாதிரி விதைகளையும் செழிநாட்டு தர்மமாக) கொடுக்க உருவாக்கினேன்.

மரங்கள் மனிதனை வளர்த்து வாழ்வளிக்கும். பரம்பரையலகு மாற்றப்பட்ட விக்ஸ், பைனஸ், இபில் இபில் போன்ற மரங்களையும் நடுவதற்காக கொடுக்க உருவாக்கினேன். ஓசியில் கிடைத்த சந்தோசம், தேவைக்கதிகமாக கோடிக் கணக்காக நாட்டுவார்கள். மரங்களோ விரைவில் வளரும். நிலத்திலிருந்து கனியுப்புக்களையும், நீரையும் விரைவாய் உறுஞ்சி முடிக்கும். இலைகளோ விரைவிலோ உக்காது. இபில் இபில் போன்ற விதைகள், கொட்டும் இடமெல்லாம் பல்கிப் பெருகும். பின் மண் வளம் குன்றும். பின் ஏனைய பயிர்ச் செய்கை குன்றும். விவசாயம் பாதாளத்தில் போகும். செழிநாடு செழிக்காது.

நாங்கள் உடைந்து நொறுங்கிய, செழிநாட்டின் எலும்புகளை எடுத்து எங்கள் நாட்டு முன்னேற்றத்தின் பிள்ளைகளுக்கு சூப்புக் காய்ச்சிக் கொடுப்போம். அந்த எலும்புகளினாலேயே படிக்கட்டுக்களையும் கட்டுவோம். "ரொக்கட்டின் மூக்கில் அணுகுண்டு சுமந்து, போர் செய்து குடி அழித்தது அந்தக் காலம். கத்தியின்றி, சத்தமின்றி யுத்தமொன்று நடக்குது அது இந்தக் காலம். தக்கத் திமி தக்கத் திமி" என்று நான் பாடுவேன், என்பதை நினைக்க மனம் சந்தோசத்தில் இறக்கைகள் கட்டி பறக்கத் தொடங்கியது.

இலவசமாகக் கொடுத்தோம். கடனாளியாகுமாறு கடன் கொடுக்க பதினோராவது விரலாக ஒப்பமிடும் பேனாவையும் நீட்டி வாங்கிக் கொண்டார்கள்.

திடீரென ஆஸ்பத்திரியின் வளவின் நடு மையத்தில் ஹெறாலோகிறபிக் மணிக்கூடு வானவில் நிறங்களுடன் தோன்றியது. நேரம் பிறபகல் 2.40 மணி எனக் காட்டிவிட்டு, காற்றிலே பைற் பைற்சாய் கரையத் தொடங்கியது.

நல்ல குணமும், காருண்யமும், மனித நேயமும் மிக்க தாய் தந்தைக்கு தானே பிறந்தேன். இடையில் ஏன் நான் இப்படி ஆனேன். இவர்களினதில் கொஞ்சமேனும் எனக்கு பரம்பரை அலகின் மூலம் வந்துதானே இருக்க வேண்டும். எனக்கு எப்படி இந்த வக்கிர, காட்டுமிராண்டி புத்தி வந்தது. என்னை ots யிற்கு தலைமை தாங்க வைத்தது, செழிநாட்டை அழிக்க வைத்தது எது? நானா? நான் என்றால் எது? அதன் குறியீடும் குறிப்பானும் எது? ஒரு வேளை நாங்களா? அப்படி நாங்கள் என்றால் வளநாடா? வளநாடு என்றால் காட்டுமிராண்டிச் சித்தாந்தமா?

சீனனிடமிருந்து கந்தகச் செம்புருளை தொழிநுட்பம் வெளவி, அதனை பீரங்கி வாயால் அனுப்பி, மஙர், பெண், பொன், பிடுங்கி, மனிதம் அழித்து, கிடைத்த, வெற்றிக் கொக்கரிப்பின் போது, காலனித்துவத்தினதும் அதன் பேய்ச்சேய்கள் பல்தேசியக் கம்பனிகளினதும் வாயால் வழிந்த வீணியிலிருந்து வழிந்ததா இந்த காட்டுமிராண்டிச் சித்தாந்தம்.

நன்றி - நூலகத்திட்டம்



மொன்சன்ரோயிசமே ! நீவீர் தாலிகள் அறுத்து தேசங்கள் சிதைத்து நீடுழி வாழ்க.

ஒரு முடிவுக்கு வந்தவனாக ஹெறாஸ்பிட்டலின், எனக்கு முன்னாலிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றேன். அப்போது சில தாதிகளும் மருத்துவர்களும் எனக்கு முன்னால் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னை கவனிக்காதது போலும், கண்டும் காணாதது போலும் சென்றார்கள்.

அங்கிருந்த பெரிய மெசினுக்கு அருகில் போகிறேன். மெசினை ஒன் பண்ணினேன். EEG(எலக்ரொனிக் என்செபலோகிராபி) யா? (அதிலும் அல்பா, பீட்டா? டெல்ற்றா என்ற கேள்விகள் வேறு). CAT (கம்பியூட்டரைஸ் அக்சியல் ரொமொகிராபியா? DSR (டைனமிக் ஸ்பேசியஸ் ரிகன்ஸ்ரக்சன்) ஆ? NMR (நியுக்ளியர் மெக்னடிக் ரெசோனன்ஸ் இமேஜ்) ஆ? MRI (மக்னட்டிக் றெசொனன்ஸ் இமேஜ்) ஆ? என்று கேட்டது. MRI தெரிந்து வெள்ளை கோட் தலை தவிர்த்து உடம்புபூராக மாட்டி, மெசினில் ஏறிப் படுத்தேன்.

கால்ப் பக்கமிருந்து தலைப் பக்கம் நோக்கி கட்டில், போறணைக்குள் பாண் தட்டம் தள்ளப்படுவது மாதிரி அசைந்து, தலையை ஒரு குகைக்குள் பொருத்தியது. பின்னர் தலையைச் சுற்றி, X-கதிர்கள் ஒரு மூலத்திலிருந்து பாயத் தொடங்கியது. சிறிது நேரத்திற்கு பின் கட்டில் கால்பக்கம் நோக்கி அசைய. தலை குகைக்குள்ளிருந்து வெளிவர நான் கட்டிலைவிட்டு இறங்கி, கோட்டை கழற்றிவிட்டு, கம்பியூட்டர் முன் போய் அமர்ந்தேன்.

மெய்ன் மெனுவில் Brain போய் சற்று நேரத்திற்கு முன் ஒளிக் கட்டியாய் பிடித்து வைக்கப்பட்ட எனது மூளை தெரியத் தொடங்கியது. வலது, இடது, மேல், கீழ்ப் பக்கமாக திருப்பியும், சுழற்றியும் எனது மூளையைப் பார்த்தேன். என்ர தாயே இந்த வழா வழா- கொழா கொழாவுக்குள்தான் இவ்வளவு சமாச்சாரங்களா?. மூளைத் தண்டுக்கும், நடுமூளைக்கும் இடையில் எதேச்சையாக மவ்ஸ் போக, உடனே ரெட்டிக்கியுலர் போர்மேசன் என்று எழுத்தில் வந்தது. அதை டபிள் கிளிக் பண்ண மனம் வந்தது. மனத்தை திறந்தேன். அங்கே மனம் அசுரனுடைய உசிர் நிலைபோல ரெட்டிகுலர் போர்மேசனில் மூளையின் அடிக் கூட்டத்தில் ஒரு கலக் கூட்டத்திற்குள் இருந்ததைக் கண்டேன். அங்கே மனத்தின் பல பகுதிகளும் வந்தன. சப் கொன்ஸியஸையும், இட்டையும் திறந்தேன். எங்கும் சிவப்பு மயம். எத்தியோப்பிய, கென்ய, புற்பற்றைக்குள் நாலு காலில் ஊர்ந்து. இரண்டு காலில் நின்று, பெண் துரத்தி, மண் பிடித்து, ஆட்சி பிடித்து,

## அம்ரிஷ் ஓலம்

விவசாயம் கண்டுபிடித்து, சக்கரம் செய்து, மாடு பழக்கி, காடுவெட்டி, அடுத்துக் கெடுத்த அந்த மனம், நாற்பதினாயிரம் வருடங்களாக இன்னும் மாறவில்லை என்று தெரிந்தது. இதுதான் "மழுங்கடிக்கப்பட்ட விதைகள்" உருவாகிய அடித்தளம். நிகழ் மனம் மற்றையை மனங்களின் தளங்களினால் பாரமேற்றி மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

என்றாலும் நல்ல தாய்க்கும், தந்தைக்கும் பிறந்த நான் இடையில், எப்படி இழிந்தவன் ஆனேன். வாசிப்புச் சூழலுடன் எளிமையாகத்தானே வளர்க்கப்பட்டேன். உலக மயமான முதலாளித்துவ வானில் காற்றிற் கரைந்து போய்விட்ட நட்சத்திரமான மார்க்சிசத்திலே தானே நான் ஊஞ்சல் ஆட்டி வளர்க்கப்பட்டேன். இடையில் எப்படி நான் முதலாளியாய் மாறியது? எனக்குச் சந்தேகம் வந்தது. அந்த சிவப்பு புள்ளிகளுக்குள் டபிள் கிளிக் பண்ணி, இரசாயனம் அழுத்தினேன். சோடியம் தயோ பென்டோன், பென்டத்தோல் என்று விடை வந்தது.

உடனே துாசணத்தில் சத்தம் போட்டு விட்டு, உடனே வழா வழா- கொழா கொழா அழுக்கு நிற எனது மூளைக்குள், இடது பக்க டெம்போரல் லோபிற்குள் வந்து பார்த்தபோது, அது சோடியம் தயோ பென்டோன், பென்டத்தோல், அட்ரோப்பின் ஊசி மருந்தால் சேதமாக்கப்பட்டிருந்தது தெரிந்தது. கடமையுணர்ச்சியும், நாட்டுப் பற்றும் ஊட்டப்படடிருப்பதும் தெரிந்தது.

கம்பியூட்டரை மூடிவிட்டு ஹெறாஸ்பிட்டலின், மூன்றாவது தளத்திற்கு வந்து கண்ணீர் விட்டு அழுகிறேன். எத்தனை கொலைகள், அழிவுகள். நான் கண்ணீர் விட்டு அழுதாலும். நான் அழுது கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு என்னுடன் ஓடவில்லை. சற்று நேரத்திற்குப் பிறகு நடக்கப் போகும் மிகச் சிறிய கவன ஈர்ப்புக் கூட, அழுகையை நிறுத்தி விட போதுமானது எனத் தெரிந்தது.

திடீரென கீழே மழுங்கடிக்கப்பட்ட விதை பயிர் நிலங்களைப் பார்க்கிறேன். ஆயிரக் கணக்கான, இல்லை இலட்சக் கணக்கான பூச்சிகள், நாங்கள் இனாமாக கொடுத்த விதையிலிருந்து உருவான பயிர்களில் அயன் மகரந்தச் சேர்க்கைக்காக மொய்த்து, மேலெழும்பி, கம்பி வேலி எல்லைகளைத் தாண்டி, எனது தாய் நாட்டிற்குள் புக ஆயத்தமாகி கொண்டிருந்தன.

உடனே கண்ணீர் நின்று கன்னத்தில் வழிந்த நீர் மாயமாய் உலர்ந்து மறைந்தது. ஐயோ, மோசம் போனோமே என்று சோடியம் பென்டத்தோல் மனம் கத்தியது. பூச்சிகள் எங்கள் நாட்டு பயிர்ப்பெண்களை கற்பழித்தால் தினம் தினம் மழுங்கடிக்கப்பட்ட விதைப் பிள்ளைகளின் பிறப்புத்தான். அதைத் தொடர்ந்து நாட்டின் சுயத்தின் அழிவுக்கும் தொடக்கம்தான்.

இயல்பூக்கமாக மாடியிலிருந்து இறங்கி ஓடி வீதிக்கு வந்தேன். சுப்பர் கண்டக்டர் கார்கள் காந்த வீதியில் பறந்து கொண்டிருந்தன. மிகுந்த பிரயாசைப்பட்டு நிறையவைகளில் ஒன்றை நிறுத்தி, அருகிலிருந்த எனது நாட்டுத் தலை நகரிலுள்ள, எனது தலைமை அலுவலகத்திற்கு பத்து நிமிடத்திற்குள் சென்றுவிட்டேன்.

வழமையாக எனக்கு சலாம் போட்டு சல்யூட் அடிக்கும் வாயிற் காப்போன், நான் கூப்பிட்டும், விளங்காத மாதிரி நின்றான். இவன் கதவைத் திறப்பது மாதிரியும் இல்லை. எனவே நான் திறக்கிறேன். கதவு திறபடுகிறது. நான் உயரதிகாரி ஓடிக்கொண்டு போகிறேன் எந்த சலனமுமின்றி அவன் நின்றுகொண்டிருந்தான். நாட்டுக்கு வரவிருக்கம் ஆபத்தைவிட எனக்கு ஏற்பட்டு வரும் மரியாதைக் குறைவு ஒன்றும் பெரிய விடயமல்லவே?

இப்போது தலைமைச் செயலக கூட்டம் நடைபெறும் வட்டமேசை மண்டபத்தை அடைந்து, கதவைத் திறந்து கொண்டு ஓடுகிறேன். நாட்டுக்கு நடக்கவிருக்கும் அழிவைச் சொல்லி கத்துகின்றேன். ஒருத்தரும் என்னைக் கவனித்த மாதிரியும் இல்லை. காதால் வாங்கிக் கொண்ட மாதிரியும் இல்லை. இப்போது எல்லோரையும் நன்றாகக் பார்க்கிறேன். அங்கு எல்லா இராணுவ தரத்தார்களும் தொப்பி கழற்றி கண்ணை மூடி யாருக்கோ மௌன அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் முன்நோக்கிக் கொண்டிருந்த சுவரைப் பார்க்கிறேன். அங்கு மாலையிட்டு மாட்டப்பட்ட புகைப்படத்திற்கு கீழ், தொண்ணூறாவது நாள் நினைவஞ்சலி. மேஜர் அம்ரிஷ் ஸாகர், மண்ணில், விண்ணில் (நீரில்) என்று எழுதப்பட்டிருந்தது. என் பாதத்தை குனிந்து பார்க்கத் தொடங்குகின்றேன்.

○

## என்ன சொல்கிறாய்?

எமது முற்றவெளி மீது
யுத்தத்தின் கரு நிழல்கள் நெளிந்து வரத் தொடங்கிய வேளை
எமது வாழ்வின் துயர்மிகு அத்தியாயம் எழுதப்படலாயிற்று!

திடீரென ஊரின் எல்லை கடந்து - நீ
தொலை துாரமேகியதன் பின் வந்த நாட்களில்
இருளடர்ந்த இரவுகள் யாவிலும்
எமது வாழிடமெங்கிலும் உனைத் தேடி ஏமாந்து திரும்பினார்கள்!

அதன் பின் நிகழ்ந்த பிரளயப் பொழுதில்,
எங்கள் குடிமனைகளுக்கு மேலாகப் பறந்த இயந்திரப் பிசாசுகள்
அதிரும் ஓசையுடன் அச்சத்தைப் பொழிந்தன.
மரக்கிளைகள் சுழன்று அசைந்ததில்
சிதறுண்டு பறந்த பறவைக் கூட்டங்களோடு!
எமதினிய இளைஞர்களும் காணாமற் போயினர்.
துன்பம் பல சுமந்து முன்னோர்கள் தேடி வைத்தவை யாவும்
எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டன.
ஆனந்த மழை பாய்ந்த இல்லங்களுக்குள்ளிருந்து
எமது பெண்களின் அவலக்குரல்கள் எழுந்தன.
எங்கள் குழந்தைகளைக் காத்திட
எந்தத் தேவதைகளும் வரவேயில்லை!

எங்கோ துாரத்தில் துப்பாக்கிகள் வெடிக்கின்றன;
ஈனக்குரலெடுத்துக் கதறும் ஓசை காற்றிலேறி வருகின்றது
தினம் தோறும் சாவு எமது வாசல் வந்து
திரும்பிய தடயங்களைக் காண்கிறோம்;
எப்போதும் கதவு தட்டப்படலாம்!

நீ தேடியலைந்த எதுவுமுனக்கு ஈடேற்றம் தரவில்லை
தோற்றுப் போன அரசியலின் பின்னர்
அமைதியைத் தேடி துார தேசம் ஒன்றில் அடைக்கலம் புகுந்தாய்
மனச்சுமைகள் அனைத்தையும் மௌனமாக
அஞ்ஞாத வாசத்திற் கரைத்தாய்!

ஐரோப்பாவில் எங்கோ அடர்ந்த மூங்கிற் காட்டினிடையே
இராணுவ வீரர்களுக்கு மத்தியில் இருந்து
நீ எடுத்தனுப்பியிருந்த நிழற்படம்
சொல்லாத சேதிகள் பலவற்றை எனக்குச் சொன்னது;
அதில் ஆனந்தமின்னல் பளிச்சிடும் உன்முகம்
எத்துணை அழகாக உள்ளது!

அன்பானவனே!
எந்த விடிவுமற்ற தேசத்தின் தலைவிதியை நொந்தவண்ணம்
இங்கு எனது இருப்புப் பற்றியும் நம்பிக்கைகள் பற்றியும்
ஓயாது விமர்ச்சிக்கின்றாய்.
தினமும் வாழ்வு சூனியத்தில் விழுந்திட.......
உயிர்கள் எந்தப் பெறுமதியுமற்று அழிந்திட.........
யாருக்கும் யாருமற்ற சாபம் பிடித்த வாழ்வை
சபித்தவளாக நான் வாழ்ந்த போதும்
எனது தேசம் எனக்கு வேண்டும்!
நீ என்ன சொல்கிறாய்?

பஹீமா ஜஹான்
30.10.2000

## மன உருக்கலின் பிடிப்புக்குள்......!

காலையையும், மாலையையும்
வெறிஞ் சோடிப் பொழுதுகளாக...
விழுங்கி ஆயுதக் கலா(ச்)சாரம் தின்னும்.
நெஞ்சத்து ஈரத் தண்ணீரும் காய்ந்தும்,
இதயத்துடிப்புகள் அறுந்தும்,
நகல் கிராமத்துப் பச்சைகள் பழுதடைந்தபடி-
என் மௌனம் வருடிய வாழ்விடம்
அவலத்துக்குள் முகாரி பாடின.
ஊரோடு உள்ளவர்கள் உயிரின் உறம் தேடி...
மந்தைகளாக கழன்று இடம் நகர்கையில்...
முகத்தின் திரையை மூட்டை ஒன்று-
மூடிப்போட, இன்னலின் தஞ்சம்
முடிவுரை எழுதும்
கால நாழிகைக்குள்
வயிற்றுப் பள்ளத்தாக்கு நிரம்ப நிம்மதி புதையும்.
நான் சோகங்களால் வெந்து-
வேரறுந்து கிடக்கையிலே-
அக்காவின் வல்லுறவு பற்றியதையே
மனசு மனனம் கொண்டு காயப்படுத்தும்.
மற்றொரு குடியமர்வுக்குள்
சோதனைச் சாவடி கடக்கையில்
கம்பிச் சுருளுக்குள்ளே கழுத்தை நீட்டி கத்தும்...
அம்மாவோடு முகர்ந்து திரிந்த ஆட்டுக்குட்டி
வளவெல்லாம் கரையான் புற்றுக்களும்,
பற்றைகளுமாக சுடு காடாக.. விளங்கும்
தீப்பிடித்து எரிந்து எச்சமான
சுவரில் படிந்த ரத்தக்கறைகளால்
என் சகோதரர்கள் கைரேகை சுவடாக சுட்டிருக்கும்.
சில எழும்புத் துண்டுகள் கரியாக கிடக்கின்றன.
துப்பாக்கி அராஜகத்தை - என்
சுவாசப்பை சுவாசித்து மூச்சரிக்கும்
மயான மண்ணுக்கு மரண
மனு அனுப்பிய படி...

~ கோ. நாதன்

நன்றி - நூலகத்திட்டம்



# லோறன்சால் சமரசம் செய்து கொள்ள முடியவில்லை!

## நினைவுக் குறிப்புகள் – 8

நான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த அதே காலத்தில் தான் லோறன்ஸும் அங்கு சேர்ந்திருந்தார். அவர் ஒரு மருத்துவபீட மாணவர். அவருக்கு தனது கல்வி மூலம் எல்லாவிதத்திலும் சிறப்பாக முன்னுக்கு வரக்கூடிய ஒரு எதிர்காலம் இருந்தது. ஆயினும் அவர் லங்கா சமசமாஜக் கட்சியின் கல்வி வகுப்புகளில் சேர்ந்து கொண்டார்.

நான் முதன் முதலாக இந்தக் கல்வி வகுப்பில் கலந்து கொண்ட அன்று, அவர் மாக்சியம் எவ்வாறு பௌத்தத்துடன் முழுமையாகப் பொருந்தக் கூடியவாறு அமைந்துள்ளது என்று விவாதித்துக் கொண்டிருந்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. அப்போது அவருக்கு மாக்சியக் கோட்பாடுகள் பற்றி ஆழமாகத் தெரிந்திருக்கவில்லை. அத்துடன் அவருடைய அரசியற் செயற்பாடுகட்கு அக்கருத்துகள் பிரதான ஊக்குவிக்கும் கருத்துக்களாக இருந்ததென்றும் நான் கருதவில்லை.


சேகுவேரா ஒரு முறை 'ஒரு புரட்சியாளன் வெறும் புலமையாளனாக மட்டும் இருந்து விடுகிற ஆபத்துள் வீழ்ந்து விடாமல் இருக்க வேண்டுமானால் அவன் மனிதத்தின் மீது கொண்ட பேரன்பினால் வழி நடாத்தப்படுகின்றவனாக இருக்க வேண்டும், என்று ஓரிடத்தில் எழுதியிருந்தார்.(இதை நான் எனது ஞாபகத்திலிருந்தே சொல்கிறேன்.) மனிதம் மீதான பேரன்பும் துன்பங்களுக்கு எதிராகப் போராட வேண்டுமென்ற பெரு விருப்பும் தான் லோறன்சை இயக்கி வந்தன.

எங்களது கல்வி வகுப்பில் அவரைத் தவிர்ந்த ஏனையோரில் ஒரு சிலர் காலப் போக்கில் அந்த வகுப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்கள். மற்றையோர் தங்களது கல்வித் தெரிவுகட்கும் அரசியல் ஈடுபாட்டிற்கும் இடையில், செயற்படக் கூடிய இரண்டிலும் ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

ஆனால் லோறன்ஸுக்கு இந்தச் சமரசப் பார்வையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர் அரசியலால் முற்றாக ஈர்க்கப்பட்டவராய் கட்சியின் முழுநேர ஊழியராகச் சேர்ந்து கொண்டார். அவர் பல்கலைக்கழகத்திலிருந்து முறைப்படி வெளியேறினாரா என்பது எனக்குத் தெரியாது. படிக்க நேரமில்லாதளவுக்கு அவர் அரசியலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு விட்டார். அவர் ஒரு தொழில் முறைப் புரட்சியாளருக்குரிய **பட்டினி கிடத்தலும் , சட்ட விரோதமாக வேலை செய்தலும், இனந்தெரியாமல் இருந்து கொள்ளலுமான** வாழ்க்கைக்குள் நுளைந்து கொண்டார்.

1942 இல் கைது செய்யப்படும் வரை அவர் இந்தச் செயற்பாட்டிலேயே தொடர்ந்து ஈடுபட்டிருந்தார்.(அவர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பம் பற்றி நான் பின்னர் விபரிப்பேன்.) அவர் தலைமறைவாக இருந்த காலங்களில் அவரது மறைவிடத்துக்குச் சென்று நான் அவரைச் சந்திப்பதுண்டு. அப்போதெல்லாம் அவர் கிட்டத்தட்ட பட்டினி நிலையிலேயே இருப்பார்.

ஆனாலும் அடிக்கடி என்னைத் தன்னுடன்




தலைமறைவு வாழ்க்கை

றெஜி சிறிவர்த்தன

தங்கிச் செல்லுமாறும் தான் சமைத்த அவரது பரிதாபத்துக்குரிய அந்த உணவை என்னையும் தன்னுடன் பகிர்ந்து கொள்ளச் சொல்வார். அவரைப் போன்ற ஒருவரை நான் ஒருபோதும் கண்டதில்லை என்பதாலும் நிச்சயமாகக் கட்சிக்குள் அப்படி வேறொருத்தர் இருக்கவில்லை என்பதாலும் அவர் மீது எனக்கு ஒரு ஆழமான மதிப்பு இருந்தது.

பிலிப்பின் கவர்ச்சியோ கொல்வினின் அலங்காரப் பேச்சு வன்மையோ டொறிக்கின் கூர்மையான புலமைத்திறனோ இல்லாத போதும் அவர் வெளிப்படையில் மிகவும் எளிமையானவராகவும் சாதாரணமான தோற்றம் கொண்டவராகவும் எதிலும் தலையிடாதவராகவும் இருந்தார்.

> **“ஒரு புரட்சியாளன் வெறும் புலமையாளனாக மட்டும் இருந்து விடுகிற ஆபத்துள் வீழ்ந்து விடாமல் இருக்க வேண்டுமானால் அவன் மனிதத்தின் மீது கொண்ட பேரன்பினால் வழி நடாத்தப்படுகின்றவனாக இருக்க வேண்டும்.**

1942இன் பிற்பகுதியில் கைது செய்யப்பட்ட பின், யுத்தம் முடியும் வரை அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அப்போது அவர் காச நோயால் பீடிக்கப்பட்டார். அவரது கடந்த கால வறிய வாழ்க்கையின் தன்மை அவர் இந்த நோயினை எதிர்க்கும் தன்மை அற்றவராக மாற்றிவிட்டிருந்தது அவர் அதனால் பீடிக்கப்படக் காரணமாக இருந்திருக்கலாம்.

சிறையிலிருந்து வந்ததும் மீண்டும் கட்சிக்காக வேலை செய்யத் தொடங்கினார். ஆனால் இந்தத் தடவை அவர் தனது மருத்துவக் கல்வியைத் தொடர்ந்த படியே இதில் ஈடுபட்டார். அத்துடன் அவர் பகத்தல வீதியிலிருந்த கட்சி அலுவலகத்திலிருந்து இரண்டு வீடு தள்ளி இருந்த வீட்டிலிருந்த ஒரு இளம் பெண்ணுடன் காதல் வயப்படவும் செய்தார்.

சில காலத்திற்குப் பின் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். எந்தக் களைப்போ குறைசொல்லலோ இன்றி தனது மருத்துவக் கல்வியுடனும் தனது வருத்தத்தை அடிக்கடி பரிசோதித்தபடியும் அவர் தனது குடும்பத்தை நடாத்தி வந்தார். சிறிது காலத்திற்குப் பின் அவர் கட்சியிலிருந்து விலகிக் கொண்டார்.

உண்மையில் சமசமாஜக் கட்சியின் சுதந்திரத்திற்குப் பின்னான அரசியல் செயற்பாடுகளுடன் அவரால் சமரசம் செய்து கொண்டிருக்க முடியும் என்று என்னால் கற்பனை பண்ணக்கூட முடியாது. ஆனால் லோறன்ஸ் மனித துன்ப துயரங்களுக்கு எதிராகப் போராடுகிற தனது தார்மீக அர்ப்பணிப்பிலிருந்து ஒரு காலமும் விலகிவிடவில்லை என்றே நான் நினைக்கிறேன். அவர் தனது மனிதத்தின் மீதான அன்பை தன்னிடம் வரும் ஏழை நோயாளிகளைப் பராமரிப்பதை நோக்கித் திருப்பிக் கொண்டார் என்றே நினைக்கிறேன். ஒப்பீட்டளவில் மிக இளம் வயதிலேயே அவர் காலமாகிவிட்டார்.

லோறன்ஸ் எப்படிப்பட்டவர் என்பதை எனக்கு புரியவைத்த ஒரு சம்பவம் ஒன்றைச் சொல்லலாம். அவர் இன்னமும் ஒரு மருத்துவபீட மாணவனாக இருந்த போது அது நடந்தது. பசில் மெண்டிஸ் ஒருநாள் அவரைப் பார்க்க வந்தார். பசிலை நானும் அப்போது நன்றாக அறிவேன். அப்போது அவர் கட்சி அரசியலிலிருந்தும் மாக்சியத்திலிருந்தும் விலகி மதச் செயற்பாடுகளில் இறங்கியிருந்தார். அந்தக் காலத்தில் அவர் தேவாலய வழிபாட்டிற்குத் திரும்பி ஒரு கத்தோலிக்க மதகுருவாக மாறியிருந்ததுடன் மதமாற்றும் பணிக்குரிய ஒருவராகத் தன்னைத் தானே நியமித்துக் கொண்டு தனது நண்பர்களுக்கும் கருத்தை ஏற்றுக்கொள்வோர்களுக்கும் கடவுள் இருக்கிறார் என்று நிரூபிக்கும் தனது தத்துவங்களை விளக்கிக் கொண்டு திரிந்தார்.

அன்று அவர் இந்த வேலையை லோறன்ஸுக்கும் செய்தார். லோறன்ஸ் தான் தனது ஆஸ்பத்திரி வாட்டுக்குப் போகும் வரை அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். விவாதிக்கவோ மறுத்துரைக்கவோ அவர் முயலவில்லை.

ஆஸ்பத்திரிக்குப் போகும் வேளை வந்ததும் பசிலையும் அழைத்துக் கொண்டு போனார் லோரன்ஸ். போகும் வழியிலும் பசில் தனது போதனையை விடவில்லை. ஆஸ்பத்திரிக் கேற் வந்ததும் பசில் திரும்ப முயன்றார். ஆனால் லோறன்ஸ் அவரையும் உள்ளே வருமாறு அழைத்துக் கொண்டு சென்று அங்கிருந்த ஒரு வாட்டில் புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு சாவுடன் போராடிக் கொண்டிருந்த சில நோயாளிகளைக் காண்பித்தார்.

அதன் பிறகு அவர் அமைதியாகச் சொன்னார்: "இதனால்தான் நான் கடவுளை நம்பவில்லை" பசில் இதற்கும் நல்லதொரு தத்துவார்த்த பதிலை கூறியிருக்கக் கூடும். ஆனால் லோறன்ஸின் வெளிப்பகட்டில்லாத நேர்மைக்கு முன்னால் அவரால் மௌனமாக இருப்பதைத் தவிர வேறெதையும் செய்ய முடியவில்லை.

**(வரும்)**

## விருது பெறும் பேராசிரியர்



பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கு தமிழக அரசின் திரு: வி.க. விருது வழங்கப்-பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பன்முக ஆளுமையும் ஆழமான புலமையும் கொண்ட பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கு இவ்விருதை வழங்குவதன் மூலம் தமிழக அரசு தன்னைக் கௌரவப் படுத்திக் கொண்டுள்ளது. அதற்கு எமது பாராட்டுக்கள். பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கு சரிநிகரின் வாழ்த்துக்கள்.

## இருப்பொழிதல்

சொல் நதியே!
ஒரு சோகமும் இன்றி ஓடுவதெப்படி?
இருள் சூளும் துயரப் பகலில்
விடை காண முடியாததாகிய கனவுகளுடன்
அர்த்தம் எதுவுமின்றி
யாரைக் குறை சொல்ல முடியும்.
இருப்பிழந்து - பின்
இழக்க எதுவுமில்லாமல்
சுடுபுழுதி கிளம்பி
காது மடலை சுட்டு அள்ளிப் போகும்.
குறி விறைத்து,
தெருவில் போகிறவளை அடித்து மடக்கி
அர்ச்சனைக்கு பூத்தேடும்.
ஒது துளிர்பூவின் ௨௪ மணி நேரம்
மனதில் எழுகையில் ஏன்?
பிறப்பென்றாகி விடுகின்றது.
எங்கே தொலைந்து?
எங்கே தேட?
இனி, யார் வருவார்?
கொடி,குடை, ஆலவட்டத்துடன்
சிறு தளிர் கிள்ள
யாருடையதற்றதும் என்னுடையதற்றதும்
கனவுகளை ஒப்பேற்ற வேண்டிய
பணியில் காலம்.
கோடை கால குளிரில் காணாமல்
போன கவிதையை எத்தனை
காலமாய்த்தான் தேடுவது?

– பனை கோகுலராகவன்

## வெறுமை = முழுமை

நான்
வெற்றுத்தான்
வெறும் வெளி
ஒரு கருப்புப் படலம்
என்னில்
எந்த சிறு புள்ளியுமில்லை

ஏதுமற்ற எனது கறுப்புப் படலத்தை
பெரும் கரும்புள்ளியாக
கண்டவர்கள் நீங்கள்

எனது வெளிர் தன்மையை
ஏழு நிறங்களாக
வகுத்துப் பார்த்தவர்கள் நீங்கள்

எனது சூனியத்தை
இன்னும் நீங்கள்
ஏற்றுக் கொள்ளவில்லை

எனது கருமை ஊடும்
வெண்மை ஊடும்
என்னை நீங்கள்
முழுமையாய் காண்கிறீர்கள்

முழுமைதான்....
வெறுமையில் நான் முழுமைதான்.

– சசீ மகரிஷி

நன்றி - நூலகத்திட்டம்



# தன்னை அறிதலுக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் என்ன தொடர்பு?

"தன்னை அறிதலுக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் என்ன தொடர்பைக் காண்கிறீர்கள்?" என்றார் தமிழ் இனி மாநாட்டில் கலந்து கொண்ட தமிழக நண்பர் ஒருவர். அவர் ஏனைய எழுத்தாளர்களோடு நான் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு இப்படிக் கேட்டார்.

தமிழ் பேசும் இனத்தவராகிய நாம், எமது சுதந்திரத்தையும் அடையாளத்தையும் பேணுவதற்கு தமிழ்த்தேசியம் அவசியமானது. நாம் நமது நிலத்தினூடாகவும், மொழியினூடாகவும் கலாசாரத்தினூடகவுமே எமது சுதந்திரத்தை சுவாசிக்க முடியும். இதைத் தான் செவ்விந்தியத் தலைவர் சீ:ஃசியற்றல் அமெரிக்கா ஜனாதிபதி ஆபிராம் லிங்கனுக்கு அறிவுறுத்தினார்". என்று நான் முடிப்பதற்குள்ளேயே "அதையே நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இதற்குள் தன்னை அறிதலை எப்படித் தொடர்புபடுத்துவீர்கள்" என்று அவர் குறிப்பிட்டார்.

"இங்கேதான் அதன் முக்கியத்துவம் வருகிறது" என்று ஆரம்பித்து நான் தொடர்ந்தேன். "தமிழ்த்தேசியமும் சரி எந்தத் தேசியமும் சரி இனவாதமாக அல்ல இனவெறியாக மாறும் ஆபத்தையும் கொண்டிருக்கிறது. இனவாதத்தின் ஒரங்களில் இது இயங்க நேர்கின்ற சந்தர்ப்பத்தினால், அதனால் விழுங்கப்படும் சாத்தியங்களும் இதற்கு நிறைய உண்டு. அதுதான் முசோலினியின் பாசிசத்துக்கும், ஹட்லரின் தேசிய சோஷலிஸத்திற்கும் நடந்தது. இங்கேதான் Self Inquiry என்கின்ற தன்னை நோக்கிய விசாரணை ஒவ்வொருவருக்கும் அவசியமாகும்.

இத்தகைய ஒன்றைத்தான் கிராம்சி தான் இயங்கிய கொம்யூனிஸ்ட் தொழிலாளர் அமைப்புள் செய்ய முயன்றார். எல்லாவித சமூக, அரசியல், கல்வி அமைப்புகளுக்குள்ளும் இதற்கான 'களங்கள்' ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு அமைப்புக்குள்ளும் அன்றைய வேலை முடிந்ததும் அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் கூடி தாம் விட்ட தவறுகள் தம் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாட வேண்டும். தம்மை நோக்கிய சுயவிசாரணையை முடுக்கிவிட வேண்டும். இது படிப்படியாக, ஆழமான சுயவிசாரணையாகவும், மாறும். இந்த 'ஆத்ம கலாசாரம்' ஒவ்வொரு அமைப்புக்குள்ளும் எடுத்துச் செல்லும் கலாசாரப் புரட்சி உருவாக வேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு ஸ்தாபனங்களுக்குள்ளும் இருக்கும் கரிய சக்திகளையும் நல்ல சக்திகளையும் இனங்காணவும், தீயவற்றை திருத்தவும் முடியும்.

தமிழ்த் தேசியம் பாசிசமாக மாறாமல் செய்ய இதுவே உதவும்"

நான் சொன்னதைக் கேட்டிருந்த நண்பரின் முகத்தில் காணப்பட்ட புன்முறுவல் எனக்குள்ளும் ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்திற்று.

0.00


தமிழ் இனி மாநாட்டில் ஓரமாகவே நடந்த நிகழ்ச்சிகள் இரண்டு. ஒன்று ஓவியம் சிற்பம் அடங்கிய கண்காட்சி. அடுத்தது நாடக அளிக்கை. ஓவியம் சிற்பம் அடங்கிய கண்காட்சி கைலாசபதி அரங்கின் பின்புறத்தில் நடைபெற்றது. அதற்கு பொறுப்பாக ஈழத்துக் கவிஞர் பா.அகிலனும், ஓவியர் ரி.சனாதனனும் இருந்தனர். தமிழ் அடையாளம் காண்பியக் கலைகளின் காட்சி' என்று பெயரிட்ட மேற்படி கண்காட்சி வெங்கட்சாமிநாதனால் திறந்து வைக்கப்பட்டது. இதில் எஸ்.தனபால், பி.வி.ஜானகிராமன், வித்தியாசங்கர் ஸ்தபதி, டி.தட்சணாமூர்த்தி, ட்ரஸ்கி மருது, ஜி.சந்துரு, மரியா அந்தோனி, ராஜ் செல்லையா ஆகியோரின் சிற்பக் கைவினைகளும், ஏ.பி.சந்தானராஜ், கே.எம்.ஆதிமூலம், ஜி.ராமன் ஆர்.பி.பாஸ்கரன், ஏ.விஸ்வம், கே.முரளிதரன், கிராம பழனியப்பன், எம்.நடேஸ், எஸ்.மைக்கல் இருதயராஜ், எம்.நிலாந்தன், டி.எபனேசர் சுந்தர்சிங், ஆர்.வைதேகி, ரி.சனாதனன் ஆகியோரின் ஓவியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவர்களுள் ரி.சனாதனன், ஆர்.வைதேகி, எம்.நிலாந்தன் ஆகியோர் ஈழத்துக் கலைஞர்களாவர். நிலாந்தனின் பிள்ளையார் ஓவியங்களே இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மேற்படி தமிழ் அடையாளம் காண்பியக் கலைகளின் காட்சி தொடர்பாக "கண்ணுக்குள் வெளி"யென்ற சிறுநூலும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதைச் செவ்வனே செய்த பா.அகிலனும் சனாதனனும் பாராட்டுக்குரியவர்களாவர்.

## ஓர நிகழ்வுகள் - 8

தமிழ் இனி 2000 மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும், அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது.

- மு.பொ.




தமிழ் பேசும் இனத்தவராகிய நாம், எமது சுதந்திரத்தையும் அடையாளத்தையும் பேணுவதற்கு தமிழ்த் தேசியம் அவசியமானது. நாம் நமது நிலத்தினூடாகவும், மொழியினூடாகவும், கலாசாரத்தினூடகவுமே எமது சுதந்திரத்தை சுவாசிக்க முடியும்.

ஹோட்டல் அட்லான்றிக்கின் முன்றலுக்குச் சற்றுத்தள்ளி நாடக அளிக்கை இடம் பெற்றது. இலக்கிய அமர்வுகள் ஓய்வு காணும் மாலை நேரத்தில் நாடக அளிக்கைகள் இடம்பெற்றன.

முனைவர் வ.ஆறுமுகத்தின் "தூங்கிகள்" என்னும் நாடக அளிக்கை இடம்பெறுவதற்கு முன்னர் இதே ஆசிரியரால் எழுதப்பட்ட கருஞ்சுழி நாடக நூல் வெளியிடப்பட்டது. இது பேராசிரியர் ராமானுஜம் தலைமையில் இடம்பெற்றது. 'கருஞ்சுழி' நாடக நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கும் பொறுப்பு இலங்கைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தனக்குக் கொடுத்த பங்கை மிக அழகான சிற்றுரையொன்றுடன் செய்து முடித்தமையும், அதன் பின் அவரைப் பலர் பாராட்டியமையும் தமிழகத்தில் அவருக்கு இருக்கும் பெருமதிப்பைக் காட்டிற்று.

நாடகம் "தூங்கிகள்' அரங்கேற்றப்பட்டது.

"நீங்கள் இன்னும் தூங்கவில்லையா? எப்ப தூங்கப்போறீங்க? தூங்குங்க, தூக்கம் ரொம்ப நல்லது" என்று ரயில் தண்டவாளத்தின் மேல் கிடந்தவாறு கதைக்கும் பாத்திரத்தோடு ஆரம்பிக்கும் நாடகம் பெரிய வெற்றிப் படைப்பு என்று சொல்ல முடியாது. பாத்திரங்கள் கதைப்பதற்கிடையே விடப்படும் இடைவெளி நீண்டுவிட்டதாகத் தெரிந்தது.

அந்நாடகத்தைப் என்னோடு பார்த்துக் கொண்டிருந்த விபவி ஜீவா அந்நாடகம் பற்றிச் சொன்னது மிகச் சரியாகவே பட்டது. நாடகத்திற்காக தண்டவாளம் ஒன்றை அமைத்தது அவசியமா? அதை வேறுவிதத்தில் காட்டியிருக்க முடியாதா? நாடக அரங்கில் போடப்பட்டிருந்த ஒரு கூடாரம் எதற்கும் தேவைப்படாமல் ஏன் போடப்பட்டது? போன்ற ஜீவாவின் கேள்விகள் அர்த்தமுள்ள அவரின் நாடக அனுபவத்தின் வெளிப்பாடாகவே எனக்குப் பட்டது.

இரண்டாம் நாள் ந.முத்துச்சாமியின் நாடகம் மேடையேற்றப்பட்டது. அந்நாடகமும் அவ்வளவு மெச்சும் படியாக இல்லை என்பதே அனேகரின் கருத்து.

இவற்றையெல்லாம் விட ஹோட்டல் முன்றலில் வி.அரசு, ந.முத்துசாமி, சுகுமார், (கிழக்குப் பல்கலைகழக)ஜெயசங்கர். வ.ஆறுமுகம் ஆகியோரும் ஏனைய இளைஞர்களும் மழைத் தூறலையும் பொருட்படுத்தாது தெருக்கூத்தொன்றை நிகழ்த்துவது போல் ஆடிப்பாடி மகிழ்ந்ததோடு மற்றவர்களுக்கும் மகிழ்வூட்டியது. தமிழ் இனி 2000த்தை என்றும் நினைவு கூரும் வகையில் வைத்தது.

இவையெல்லாவற்றோடும் இன்னும் ஒன்றையும் நாம் நினைவு கூர வேண்டும். ஈழத்து எழுத்தாளர்கள் பலரை தமிழ் இனி மாநாட்டில் கலந்துகொள்ளவைத்து அதன் மூலம் அவர்கள் பங்களிப்பையும் பதிவுசெய்ய வைத்த சரிநிகரையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

(முற்றும்)

## இதுவரை காலமும் ...........

தமது படைப்பான "மண்பட்டினங்கள்" இல் குறிப்பிடுகிறார். "பாரி' போன்ற குறுநில வேளிர் குழுத் தலைவர்களின் ஆட்சிப் பரப்பையும் இழித்து ஒழித்து அவர்களையும் கொன்றொழித்தவர்களும் இவர்கள் தான். இதே குலப் பரம்பரையினன் ஒருவரைப் பார்த்துத் தான் கம்பன் கேட்டான்:

மன்னவனும் நீயோ வளநாடும்
உன்னதோ
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்" -

"வீரார்ந்ததும் திராணியும் திறனும் உள்ள ஒரு எதிர்க் குரல் கம்பனிடமிருந்து வெளிப்பட்டதும் இந்தச் சோழரை எதிர்த்தே தான்.

இந்தச் சோழர்கள் தம்மை ஆரிய மன்னர் பரம்பரையின் வழித்தோன்றல்களாக காட்டியதும் ஆரிய மயப்படுத்தும் ஆரியப் பண்பாட்டு ஆதிக்கத்தை நிறுவியதற்கும் பின்னால் ஒரு தேவை இருந்தது. முழு இந்தியாவையும் மும் முடிச்சோழ மண்டல நாடுகளையும் ஒன்றிணைத்த ஆட்சிப் பரப்பிற்குள் கொண்டு வர வேண்டிய ஒரு மதம் வழிப்பட்ட சித்தாந்தம் தேவைப்பட்டது. தமிழ் மொழியை மையப்படுத்தினால் சாம்ராஜக் கனவு சிதைந்து விடும். மதவழிப்பட்ட மையப்படுத்தலினால் அகன்ற சாம்ராஜ்யப் பரப்பை ஆளுதல் இலகு. இதையே தான் அசோகச் சக்கரவர்த்தியும் கையாண்டான். யுத்தத்தால் வென்ற பகுதியை எதிர்ப்பின்றி ஆளவும், பின்னர் கத்தியின்றி யுத்தமின்றி பல பிரதேசங்களையும் தனது சாம்ராஜ்யத்தின் சார்பு நிலைப்படுத்தவும் பௌத்த மதம் சார்ந்து அதன் பரம்பலையும் ஆதரித்து நிலைப்படுத்தினான். அதற்கு பௌத்தத்தின் அகிம்சைக் கோட்பாடு மிகவும் உதவிற்று. இதே போலவே தான். இந்துமதக் கோட்பாட்டை இறுக்கமாய் ஆதரித்து ஆரிய மயப்படுத்திய ஒரு பொதுப் பண்பாட்டுச் சூழலின் குடை விரிப்பில் தனது ஆதிபத்தியத்தை சோழர்கள் நிலைப்படுத்த அவாவி நின்றனர். அதற்குள் நசிந்து போனவர்களின் நீதிக்குரல்கள் எத்தனையோ அமுக்கப்பட்டன: கொன்றொழிக்கப்பட்டன: ஆனால் அதற்குப் பெயர் மனுநீதி. அவர்களுக்குப் பெயர் மனுநீதிச் சோழர்கள் சரிதானா?

ஆக, விடுதலை விரும்பிப் போராடும் விடுதலைக் குரலை ஒலிக்கும் நாம் விரும்பியோ விரும்பாமலோ எமக்குள் உருவேறும் உணர்ச்சிகளுக்கேற்ப வார்த்தைகளைக் கொட்டாமல் மிகவும் அறிவு பூர்வமான நிதானமான சுய விமர்சனத்திற்கும் பின்பே எமது படைப்புகளை வெளிக்கொணர வேண்டும். எமது தொன்மங்களையோ, மரபுகளையோ , ஆதிக் குரல்களையோ நாம் பாவிக்கக் கூடாதென்றல்ல. ஆனால் அது தற்காலத்திற்கேற்ப மறுவாசிப்போடும் புதிய பார்வைக்கேற்ப புதுக்கியும், திருத்தியும் வெளிப்படுத்தப்பட வேண்டும். புத்தரைப் போக அரச போகத்தையே துறந்து அனைத்து மக்களையும் அன்பால் அரவணைத்து விடுதலை காட்ட முயன்ற புத்தரை நோக்கி அசிங்கங்களை வீசுவதையும் ஆதிக்க சாம்ராஸ்ய விஸ்தரிப்பை அவாவிய சோழர்களை மனுநீதிக்காரர்களாக சித்திரிப்பதையும் விடுத்து அறிவும் உயர்வும் இணை நின்ற தரிசனம் வாய்ந்த படைப்புக்களை ஆக்கித்தர வேண்டும். இல்லாவிடின் அந்தக் காலத்திற்காக அடைகாத்திருக்கவும் தெரிய வேண்டும். இது கலவிற்கு மட்டுமல்ல எல்லா படைப்பாளிகளிற்கும் பொருந்துவதே. இதேவேளை சரிநிகரும் இவை போன்ற படைப்புகளின் இருக்கக் கூடிய இடரல்கள் குறித்து கவனம் கொள்ள வேண்டும். இல்லையென்றால் இவைகுறித்த பரப்பான விமர்சனங்களை உருவாக்கும் சாதாரண பத்திரிகைத் தனங்களை ஒத்ததாக மாறிவிடும் சரிநிகரின் போக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்



~ ஜோதிலிங்கம்

# சைவ வேளாள கருத்து நிலைகள் சிதைந்து வருகின்றனவே தவிர முற்று முழுதாக அழிந்து விடவில்லை!

பேராசிரியர் சிவத்தம்பியின் யாழ்ப்பாணம், சமூகம், பண்பாடு, கருத்துநிலை என்ற நூலினை யாழ்ப்பாணச் சமூகத்தின் அரசியல் வரலாற்று நிலையிலிருந்து பார்க்கவே நான் முற்படுகின்றேன்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் நவீன அரசியல் வரலாறானது 1833ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

இவ் அரசியல் வரலாற்றினை அச்சமூகத்தின் அரசியல் கருத்து நிலை நின்று பின்வரும் நான்கு காலகட்டங்களாக பாகுபடுத்தலாம் என்று நான் கருதுகின்றேன்.

1. 1833 தொடக்கம் - 1921 வரையான காலகட்டம்.

2. 1921 தொடக்கம் - 1949 வரையான காலகட்டம்.

3. 1949 தொடக்கம் - 1968 வரையான காலகட்டம்.

4. 1968 தொடக்கம் இன்று வரையான காலகட்டம்.

1833 தொடக்கம் - 1921 வரையான முதலாவது கட்டத்தில் யாழ்ப்பாணச் சமூகத்தின் அரசியல் இலங்கையர் என்ற அடையாளத்திற்குள் தமது பண்பாடு, கலாசாரத்தை பேண முற்படுவதற்காகவே அமைந்திருந்தது. அதாவது தமிழர்கள் இலங்கையர்கள் என்ற அடையாளத்தோடும், தமிழர்கள் என்ற அடையாளத்தோடும் வாழ முற்பட்ட காலகட்டம் அது. பொன்னம்பலம் இராமநாதன் இக்காலகட்டத்தின் முக்கிய அரசியல் தலைமையாக விளங்கியிருக்கின்றார்.

இரண்டாவது காலகட்டம் 1921ம் மானிங் அரசியல் சீர்த்திருத்தத்துடனும், இலங்கைத் தேசிய காங்கிரஸ்சிலிருந்து பொன். அருணாசலம் வெளியேறி தமிழர் மகாஜனசபையினூடாக இன அரசியலை நோக்கி நகர்ந்ததிலும், ஆரம்பமாகின்றது. தமிழர் அரசியலின் இரண்டாவது கட்டமாகவும், இன அரசியலின் முதலாவது கட்டமாகவும் இக்கட்டம் அமைகின்றது. 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல்யாப்பின் அறிமுகமும், அதன்வழி வழங்கப்பட்ட அரைகுறைப் பொறுப்பாட்சி சிங்கள மக்களின் ஆதிக்கத்தில் சென்றதிலிருந்தும் இக்கட்டம் முனைப்புப் பெறுகின்றது. சேர்.பொன். அருணாசலம் இக்கட்டத்தினை ஆரம்பித்து வைத்தாலும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலமே இக்கால கட்டத்தில் தலைவராக விளங்கினார்.

> **யாழ்ப்பாணம்**
> **சமூகம், பண்பாடு, கருத்துநிலை**
> கட்டுரைத் தொகுதி
> கார்த்திகேசு சிவத்தம்பி
>
> வெளியீடு:
> குமரன் புத்தக இல்லம்
> இல் 201, டாம் வீதி, கொழும்பு - 12
>
> விலை: (இந்திய) 100.00

மூன்றாவது கட்டம் 1949ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சியுடன் ஆரம்பமாகின்றது. தமது தாயகத்தை வரையறுத்து அத்தாயகத்திற்கு அதிகாரத்தினைக் கோருகின்ற சமஷ்டி அரசியலாக இக்காலகட்ட அரசியல் அமைந்திருந்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இக்காலகட்டத்தின் அரசியல் தலைவராக விளங்கினார்.

நான்காவது காலகட்டம் 1968ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்துடன் ஆரம்பமாகின்றது. தனிநாட்டுக் கோரிக்கையே இக்காலகட்டத்தின் அரசியல் கோரிக்கையாகும். பல்வேறு அமைப்புகள் தொழிற்பட்டபோதும், புலிகளின் தலைவர் பிரபா்கரனே இக்கால கட்டத்தின் அரசியல் தலைவராக விளங்கி வருகின்றார்.

இந்த நான்கு காலகட்டங்களில் முதல் இரண்டு காலகட்டங்களைப் பற்றியே பேராசிரியர் சிவத்தம்பியின் இந்த நூல் அதிகளவில் பேசுகின்றது.

முதலாவது காலகட்டத்தில் யாழ் சைவ வேளாளரின் நலன்களே அரசியலில் முக்கியத்துவம் பெற்றது. இவர்களின் நலன்களைப் பேணக்கூடிய அரசியற் கருத்துக்கள் நாவலரினால் உருவாக்கப்பட்டன:

கிறிஸ்தவமயமாக்கலைத் தடுத்தல், சைவ வேளாளம் என்பன பிரதான இலக்குகளாக இருந்தன. சமஸ்கிருதமயமாக்கல், சைவமும் தமிழும் என்கின்ற இரு பிரதான சிந்தனைகள் நாவலரினால் முன்வைக்கப்பட்டன. சமஸ்கிருத மயமாக்கல் மூலம் சைவமதம் தூய்மையான மதம் என்பதை புரட்டஸ்தாந்து, கிறிஸ்தவங்களுக்கு சுட்டிக் காட்டப்பட்டதுடன் சைவவேளாளத்தின் மேலாதிக்கம் பேணக்கூடிய வகையில் சாதிச் சமூக அமைப்பு கட்டிக்காக்கப்பட்டது. சைவமும், தமிழும் என்ற சிந்தனையின் மூலம் தமிழ் சைவர்களுக்கு மட்டும் உரியது என்பதை நிலைநாட்ட முயற்சி எடுக்கப்பட்டு சைவர்கள் அல்லாத தமிழர்கள் மையத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டனர். இம்மைய ஓட்டத்தில் வராத கலைகளும், இலக்கியங்களும் புறக்கணிக்கப்பட்டன. நாவலரின் சிந்தனைகளை அரசியற்தளத்தில் பொன் இராமநாதன் பிரதிபலித்தார். 1912ஆம் ஆண்டு குறு - மக்கலம் அரசியல் சீர்த்திருத்தத்தின் மூலம் கல்வி கற்றவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டபடியால் யாழ் சைவ வேளாளர் பெரும் அரசியல் சக்திகளாகவும் மாறினர். அக்கால கட்டத்தில் இலங்கை முழுவதும் கல்வி கற்றோரில் ஏறத்தாழ 25 வீதத்தவர்கள் யாழ் சைவ வேளாளராகவே விளங்கினர்.

சைவ உதயபானு (1880), இலங்கை நேசன், (1875), சைவாபிமானி (1884) இந்து சாதனம் (1889) திராவிடகோகிலா (1900) போன்ற அக்காலகட்டத்தில் வெளிவந்த பத்திரிகைகள் இக்கருத்து நிலைகளை பிரச்சாரப்படுத்துவதில் முன்னணியில் நின்றன.

பேராசிரியர் இவ் அரசியல் போக்கினைத் தனது நூலில் நன்றாகவே பதிவு செய்திருக்கின்றார். யார் இந்த யாழ்ப்பாணத்தான்? யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல், யாழ்ப்பாணத் தமிழரின் பண்பாடும், கருத்துநிலையும் பற்றி விளங்கிக்கொள்வதற்கான ஓர் அறிமுகக் குறிப்பு, யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு - ஓர் இலக்கிய வரலாற்றுக்கான போராட்டம், யாழ்ப்பாணத்தின் எழுத விடப்படாத கலை வரலாறு பற்றி போன்ற கட்டுரைகளில் மிக அழகாகவே எடுத்துக் காட்டியுள்ளார். நூலின் பெரும்பகுதி காலகட்டம் பற்றிப் பேசுகின்றதாகவே நான் கருதுகின்றேன்.

எனினும், மைய நிலைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டளவு, விளிம்பு நிலைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் பெரிதளவிற்கு கொடுக்கப்படாதது ஒரு குறைபாடுபோல எனக்குத் தெரிகின்றது.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சமூக சக்திகள் யாவர் எனப் பார்க்கின்ற போது நான்கு சமூக சக்திகளை அடையாளம் காணலாம். சைவவேளாளர், கத்தோலிக்கர்கள், புரட்டஸ்தாந்து, கிறிஸ்தவர்கள், (மெதடிஸ் மிஷன், அமெரிக்கன் மிஷன்) தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என்போரே இவர்களாவர். சைவவேளாளரைத் தவிர ஏனையவர்கள் விளிம்பு நிலைச் சமூகத்தினர்களாகவே இருந்தனர். இவர்களின் அக்கால கட்ட அரசியல் என்ன? அவ் அரசியலை முன்னிறுத்திய கருத்து நிலைகள் என்ன? அவற்றை முன்னெடுத்த இயக்கங்கள் யாவை? இக் கருத்துநிலை முன்னெடுப்பிற்கு துணைபுரிந்த பத்திரிகைகள் யாவை? இவர்களின் கலை இலக்கிய முயற்சிகள் யாவை? புறக்கணிப்புகளை முகம் கொடுப்பதற்கு மேற்கொண்ட வழிவகைகள் யாவை? போன்ற விவரங்களையும் தந்திருந்தால் இக்காலகட்டத்து யாழ்ப்பாணச் சமூகத்தை ஒரு பன்முகப்பார்வையுடன் பார்ப்பதற்கு அவை உதவியிருக்கும்.

யாழ்ப்பாணத்தின் எழுதவிடப்படாத கலை வரலாறு பற்றி தமிழர் சைவப் பண்பாட்டில் செல்வச்சந்நிதியின் முக்கியத்துவம், கந்தபுராணத்திற்குள் வராத முருகனுக்கு ஒரு பெரிய புராணம் உருவாகின்றது என்கின்ற கட்டுரைகளில் விளிம்புநிலைக் கருத்துக்கள் பற்றி வெளிவந்திருந்தாலும், பூரண விளக்கத்தினைப் பெறுவதற்கு போதியதாக இருக்கவில்லை.

இதைவிட இக்காலகட்டத்தில் தமிழகத்தில் வளர்ந்து யாழ்ப்பாணத்தில் சிறியளவில் ஊடுருவியிருந்த தனித்தமிழ் இயக்க இலக்கிய சிந்தனைகள், திராவிடச் சிந்தனைகள் பற்றிய விடயங்களையும் நூல் பேசியிருந்தால் மிகவும் நன்றாயிருந்திருக்கும். சிவஞான முனிவரால் உருவாக்கப்பட்டு மறைமலையடிகளால் முன்னெடுக்கப்பட்ட சைவத்தையும், தமிழையும் சமஸ்கிருத மயமாக்கலில் இருந்து பிரிக்கின்ற சிந்தனைகள் 1910 அளவில் யாழ்ப்-




பாணத்தில் ஊடுருவியிருந்தன. சு.முருகேசப்பிள்ளை என்பவரினால் வெளியிடப்பட்ட மகாவிஜயலக்ஷ்சுமி என்னும் பத்திரிகை இக்கருத்துக்களை பிரச்சாரப்படுத்துவதில் முன்னணியில் நின்றது. இதே காலப்பகுதியில் திராவிடவியல் கருத்துக்களும் இலங்கையில் முன்னணிக்கு வந்தன. அது யாழ்ப்பாணத்துக்கு வெளியே தான் பிரசித்தம் பெற்றிருந்தது. நீர்கொழும்பைச் சேர்ந்த தமிழ்க் கத்தோலிக்கரான ஜே.ஆர்.மிராண்டோவினால் வெளியிடப்பட்ட திராவிட மித்திரன் என்னும் பத்திரிகை இக்கருத்துக்களைப் பரப்புவதில் முன்னணியில் இருந்தது. அது திராவிடர் என்ற பதத்திற்குள் இலங்கையில் வாழ்ந்த இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று பிரிவினரையும் இணைத்திருந்தது. தமிழரசுக் கட்சியின் தமிழ்பேசும் மக்கள் என்ற தேசியம் இக்கருத்து நிலையிலிருந்து உருவாகியிருக்கலாம் என்றே நான் நினைக்கின்றேன். இதன் தாக்கம் யாழ்ப்பாணத்தில் அக்காலகட்டத்தில் எப்படியிருந்தது? கத்தோலிக்கர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலாவது இக்கருத்துக்கள் ஊடுருவியிருந்ததா? என்பதைப் பற்றியெல்லாம் இந்நூல் பேசியிருந்தால் அதிக பயனுடையதாக இருக்கும்.

தமிழர் அரசியலின் இரண்டாவது கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இரு அரசியற் போக்குகள் தெளிவாகத் தென்படத் தொடங்கின. ஒன்று பொன் அருணாசலத்தினால் ஆரம்பிக்கப்பட்டு ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினால் முன்னெடுக்கப்பட்ட இன அரசியல் போக்கு. இரண்டாவது யாழ்ப்பாண வாலிப காங்கிரசினால் ஆரம்பிக்கப்பட்டு இடதுசாரிகளால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட சமூக மாற்றத்திற்கான அரசியல் போக்கு.

இவற்றில் இன அரசியல் போக்கு ஆரம்பத்தில் மந்த நிலையில் இருந்தாலும், 1931ஆம் ஆண்டு டொனமூர் யாப்பின் அறிமுகத்தைத் தொடர்ந்தும், ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல் பிரவேசத்தைத் தொடர்ந்தும் முனைப்புப் பெறத்தொங்கியது. இவ் அரசியல் போக்கு பற்றி நூல் அதிகம் பேசவில்லை. ஆனால், சமூக மாற்றத்திற்கான அரசியல் போக்குபற்றி அது விளைவித்த தாக்கங்கள் பற்றி தெளிவாகவே விளக்கியுள்ளார். சமூக மாற்ற அரசியலில் பேராசிரியருக்கு இருந்த அளவு கடந்த ஈடுபாடு அதற்குக் காரணமாக இருக்கலாம்.

யாழ்ப்பாண வாலிப காங்கிரசின் செயற்பாடுகள் பற்றி யாழ்ப்பாணத் தமிழரின் பண்பாடும், கருத்து நிலையும் பற்றி விளங்கிக் கொள்வதற்கான ஓர் அறிமுகக் குறிப்பு, யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம், யாழ்ப்பாணச் சமூகமும், இளைஞர் எழுச்சியும், யாழ்ப்பாணத்தின் தொடர்பும் பண்பாடும் போன்ற கட்டுரைகளில் தெளிவாக வந்துள்ளன. எனினும், யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் தோல்வியைத் தழுவியதற்கான காரணங்கள் யாவை? என்பதும் முன்வைக்கப்பட்டால் நூல் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். யாழ்ப்பாணச் சமூகத்தில் சமூக மாற்ற அரசியலை முன்னெடுத்த இயக்கங்கள் ஏன் தொடர்ச்சியாக தோல்விகளைத் தழுவுகின்றன என்பதை ஆய்வு செய்வதற்கு அவ் ஆய்வினை யாழ்ப்பாண வாலிப காங்கிரசிலிருந்தே ஆரம்பிக்க வேண்டியது இன்று முன் நிபந்தனையாக உள்ளது.

மூன்றாம், நான்காம் காலகட்ட தமிழர் அரசியல் பற்றி பேராசிரியர் ஆங்காங்கே தொட்டுத்தான் செல்கின்றார். அவை பற்றியும் விரிவாக பேச எதிர்காலத்தில் பேராசிரியர் முன்வர வேண்டும்.

இந்நூலில் யாழ்ப்பாணச் சமூகத்தின் அசைவியக்கம் பற்றி பேராசிரியர் எடுத்துச் சொல்வது தான் மிகச் சிறப்பாக உள்ளது. சைவ வேளாள கருத்து நிலைகள் படிப்படியாக சிதைவுக்குள்ளாகி வருவதையும் தமிழ்த் தேசிய உணர்வு அதற்கு ஆற்றி வந்த, வருகின்ற பங்களிப்பையும் நூல் தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால், சைவவேளாள கருத்துநிலைகள் சிதைந்து வருகின்றதே தவிர முழுமையாக அழியவில்லை என்பது தான் வரலாறு. வடக்கு, கிழக்கு, கொழும்பு, புலம்பெயர் நாடுகள் எல்லாம் அது இன்று கொடிகட்டிப் பறக்கின்றது என்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. நாவலர் போட்ட பலமான அத்திவாரமே முழுமையாக அழியாததற்குக் காரணம்.

நாவலர் சிந்தனைகளின் மோசமான விளைவு எங்களால் சைவர்களையும், ஐக்கியப்படுத்த முடியவில்லை. தமிழர்களையும், ஐக்கியப்படுத்தவில்லை. தமிழ் பேசுவோரையும், ஐக்கிய படுத்தமுடியவில்லை.

இன்று ஐக்கியம் போலத் தெரிகின்ற மாயத் தோற்றம் பேரினவாத ஒடுக்கு முறையின் கொடூரத்தால் ஏற்பட்டவையே! நாளை பேரினவாதிகளின் ஒடுக்கு முறை நீங்கும் போது தான் எமது ஐக்கியத்தின் உண்மை நிலை தெரியவரும்.

பேராசிரியரின் இந்த நூல் எம்மைப் போல அரசியற் சமூகவியலில் அக்கறையுள்ளவர்களுக்கு மிகவும் பயனுடைய நூல். நாங்கள் எமது பணிகளை மேற்கொண்டு செல்வதற்கு நல்ல அத்திவாரத்தை இந்நூல் தந்துள்ளது.

பேராசிரியர் இதுபோன்ற நூல்களை இனியும் எழுதவேண்டும் என்பதே என் பேரவா!

⊙

> பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் யாழ்ப்பாணம், சமூகம், பண்பாடு, கருத்து நிலை என்ற நூல் தொடர்பாக கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் கடந்த நவ.12 ஞாயிறன்று நடைபெற்ற கலந்துரையாடலில் படிக்கப்பட்ட கட்டுரை இது

# கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துக!

கடந்த 2000.10.24ம் திகதி பண்டாரவளை பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு, முகாமில் தமிழ் இளைஞர்கள் மிக மோசமாகவும், மிலேச்சத்தனமாகவும் கொலை செய்யப்பட்டது மன்னிக்க முடியாத மறக்க முடியாத ஒரு கொடூரச் செயலாகும். மனித நேயம் உள்ள எவரும் இதனைக் கண்டிக்காமலிருக்க முடியாது.

இதனை முன்னிட்டு மலையக மக்கள் தமது அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்து மேற்கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும், ஹர்த்தால்கள் என்பன உணர்ச்சிக் கொந்தளிப்புகளினால் எல்லைமீறி கட்டுக்கடங்காமல் துரதிருஷ்டவசமாக வன்முறையில் முடிந்தது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

மலையக தமிழர்களின் உடமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டு உயிர்களைப் பறித்து அவர்களை நடுவீதியில் நிற்க வைத்தமை மிகவும் வேதனைக் கொள்ள வைக்கும் விடயமாகும். எந்தவொரு இனத்துக்கும் இத்தகைய நிலைமை ஏற்படுவது நாகரீக சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

போராட்டங்களை துாண்டிவிடுவது பெரிய விடயங்கள் அல்ல. ஆனால், அவற்றை முன்னின்று முறையாக கட்டுக் கோப்பாக வழிநடத்தக் கூடிய தலைமைத்துவங்கள் இருக்க வேண்டும்.

அத்தகைய தலைமைத்துவங்கள் மலையகத்தில் உள்ளனவா? என்ற சந்தேகம் இப்பொழுது எழுந்துள்ளது. மலையக மக்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளதாகவே நாம் காண்கின்றோம்.

மலையகத்து அரசியல்வாதிகளால் இம்மக்களைப் பெரிதாக காப்பாற்ற முடியவில்லை. பொலிசாரிடமோ, இராணுவத்திடமோ முறையிட முடியவில்லை. இராணுவத்தினர் தமிழர்களின் கடைகளை துப்பாக்கியால் சுட்டு உடைத்துத் திறக்க, காடையர்கள் கடைகளை சூறையாடியும், கொள்ளையிட்டுமுள்ளனர். இலங்கை தன்னை ஒரு பௌத்த நாடாக அடையாளப்படுத்திக் கொள்கின்றது. கருணைக்கும், அன்புக்கும், அஹிம்சைக்கும், மனித நேயத்துக்கும் பெயர் பெற்றது பௌத்தம். இத்தகைய மேலான போதனைகளைக் கொண்டுள்ள பௌத்தத்தின் பெயரால் இன்று நிகழ்வன என்ன? இனவாதத்தை அணி திரட்டும் கேந்திரமாக விகாரைகளும், பிக்குகளும், செயற்படுகின்றார்கள். சிங்கள மக்களின் உயிர்களை உடமைகளை கலாசாரங்களை மட்டுமே பாதுகாக்கின்ற ஓர் அமைப்பாகவே நாம் பௌத்த பிக்குகளையும் பொலிஸ் இராணுவத்தையும் கருதவேண்டியுள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்களின் ஏக தலைவனாக தமிழினத்தின் இரட்சகனாக வேலுப்பிள்ளை பிரபாகரனை வரித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இம்மக்கள் தள்ளப்படுகின்றார்கள். தனிநாட்டுக் கோரிக்கை இம்மக்களுக்கு ஏற்புடையதாக இல்லாவிடினும் வேறு வழியில்லை என்ற நிலையில் மனதளவிலாவது தனிநாட்டுக் கோரிக்கைக்கு வலு சேர்ப்பவர்காளாகவே இருப்பார்கள். எனவே இன்னுமோர் வரலாற்றுத் தவறை இலங்கை செய்து விடக்கூடாது என்றே நாம் விரும்புகின்றோம்.

ஆகவே அரசிடம் பின்வரும் கோரிக்கைகளை நாம் முன்வைக்கின்றோம்.

1. பண்டாரவளை பிந்துனுவெவ சம்பவத்துக்குக் காரணமானவர்களை இனங்கண்டு சட்டத்தின் முன் அவர்களை நிறுத்த வேண்டும்.

2. இது தொடர்பாக சுதந்திரமான பக்கச் சார்பற்ற ஓர் ஆணைக் குழு அமைத்து, அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. பிந்துனுவெவ தலவாக்கலை, சம்பவங்களுக்கு பின்னணியில் இருந்தவர்களைக் கண்டு அவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. இருப்பிடங்களையும், உடமைகளையும் இழந்தவர்களுக்கு அவற்றை மீள அமைத்துக் கொள்ள உதவ வேண்டும்.

5. இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் வகையில் திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

இதுகால வரையும் கட்டியெழுப்பப்பட்ட இன சௌஜன்யம் மீளவும் சரிக்கப்பட்டுள்ளது. இதன் சிதைவுகளுக்கு மத்தியிலிருந்து நாம் வெளிப்பட்டேயாக வேண்டும். இல்லை எனின் எமக்கு நாமே குழிவெட்டிக் கொண்டவர்களாவோம்.

-மலையக தமிழ் சங்கம்

# சுட்ட மண்ணும்........

## பன்மைத்துவ சமூகத்தில் அரசின் கடப்பாடென்ன?

சாதாரண சட்டம், ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் விசேட சட்டங்களைக் கொண்டு வருவதில்லை. நாட்டில் எழுந்துள்ள விசேட சூழ்நிலையைச் சமாளிப்பதற்கே விசேட சட்டங்களை அரசாங்கம் ஆக்கிட வேண்டி ஏற்படுகின்றது. எனவே சாதாரண குற்றங்கள் வேறாகவும் விசேட குற்றங்கள் வேறாகவும் முதலில் அடையாளம் காணப்பட வேண்டும். விசேட சூழ்நிலைகளுக்குப் பாவிக்கப்படுவதற்கென விசேட சட்டங்கள் வரையறுக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஜனநாயக நாடொன்றின் பிரசைக்குச் சட்டம் [illegible] என்பது பற்றிய தெளிவும் முழு நடைமுறையின் மீதான நம்பிக்கையும் ஏற்பட முடியும். ஆனால் இந்த நாட்டில் எல்லாமே தலைகீழாக உள்ளது. பன்மைத்துவ சமூகம் வாழும் நாடொன்றில் மேற்சொன்ன விசேட சட்டங்கள் என்பன பல்வேறு சமூகங்களது இருப்புக்கும் உத்தரவாதம் வழங்குவதாகவும் அவற்றுக்கு இடையே பரஸ்பரப் புரிந்துணர்வு ஏற்பட உதவுதாகவும் பயன்பட வேண்டும். அத்தகைய புரிதலுக்கப் பங்கம் ஏற்படும் போது மட்டுமே விசேட சட்டங்களுக்கும் வேலை ஏற்படுகின்றது.

இனவாதக் கோஷங்கள் எழுப்பப்படும்போது அவசரகாலச் சட்டம் பாவிக்கப்படுவதில்லை. ஆனால் பஸ் வண்டியில் இலககம் தெரியாமல் ஏறும் பெண் அவள் தமிழிச்சி என்பதால் அவசரகாலச்சட்டம் அவள் மீது பாய்கின்றது. இனரீதியில் படுகொலைகள் நிகழும்பொது அங்கு அவசரகாலச் சட்டம் பாய்வதில்லை. உயர்ந்த கட்டிடத்தை அண்ணாந்து பார்க்கும் தமிழருக்கு எதிராக அச்சட்டம் தன் வீரத்தைக் காட்டி நிற்கின்றது. தமிழரைத் தமிழர் தாக்கினாலும் அது பயங்கரவாதம். அவன் வேறுயாரைத் தாக்கினாலும் அது பயங்கரவாதம். ஆனால் அவரை எவர் தாக்கினாலும் அது எதுவுமே இல்லை என்பது தான் இந்நாட்டின் சட்ட நிலைமையாகின்றது. அப்படிப்பட்ட நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ள ஒரு சமூகம் தனது தலைவிதியைத் தானே தீர்மானிக்க வேண்டியது சாதாரண தற்பாதுகாப்புக்கு உட்பட்ட நியதி என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

இரத்தினபுரியில் பாராளுமன்ற உறுப்பினர் நந்தா எல்லாவெல சுட்டுக் கொல்லப்பட்ட போது எதிராளி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. ஆனால் திருகோணமலையில் தங்கத்துரை பா.உ. சுட்டுக் கொல்லப்பட்டபோது எதிராளி பயங்கரவாதியாகிவிடுகின்றார். இறந்தவர்கள் இருவருமே பா.உக்கள் தான். எப்படி ஒரு வழக்கு சாதாரண சட்டத்தின் கீழும் மற்றைய வழக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும் கொண்டுவரப்படுகின்றது? யார் இதனைத் தீர்மானிக்கின்றார்கள்? அகப்பை பிடிப்பவர் நம்மாள் என்றால் அடிப்பந்தி என்றால் என்ன? நுனிப்பந்தி என்றால் என்ன? என்று தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள். அது போன்றே அகப்பையை வைத்திருப்பவர்களே இவற்றைத் தீர்மானிப்பதால் பயங்கரவாதமும் ஓரினத்தை மட்டுமே சுற்றிச் சுற்றி வரவேண்டியுள்ளது.

சிறுபான்மை இனங்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவல்ல நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாவிக்கப்பட வேண்டியதான விசேட சட்டங்கள் அதே மக்களை அடக்கி ஒடுக்குவதற்குப் பாவிக்கப்பட்டால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணந்தானென்ன? எல்லாவற்றையும் விட மேலாக இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றின்படி, அரசாங்கத்தின் ஆதரவின்றி எத்தகைய வன்முறையும் இனரீதியில் நடாத்தப்பட்டதாக இல்லை என்பது பலரையும் விழி பிதுங்க வைக்கும் விடயமாகும். இதற்குப் பிந்துனுவெவவும் விதிவிலக்கல்ல. அத்தகைய இன்னொரு பாடம் தமிழ் மக்களுக்குப் புகட்டப்பட முன்பாக சர்வதேச சமூகம் விழித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அதற்காவன செய்ய வேண்டியதே கையறு நிலையிலுள்ள நமது கடனாகின்றது.

# வைத்திய சான்றிதழ்......

வசதியும் இந்த வழக்கில் அளிக்கப்பட்ட வைத்திய அறிக்கையில் கன்னிமை கழியவில்லை என்று உறுதிப்படுத்திய வைத்திய நிபுணரினால் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் முறையற்ற உறவின் மூலம் பிறந்துள்ள பெண்குழந்தையின் பிறப்புப் பதிவை எங்ஙனம் மேற்கொள்வது என்பது நீதிமன்றத்திற்குப் பிரச்சினையாகியுள்ளது. அத்துடன் அந்தக் குழந்தையின் தந்தை யார் என்பதைத் தீர்மானிப்பதும் சிக்கலாகியுள்ளது.

இந்த வழக்கு மட்டுமல்லாமல், ஒரு மணித்தியால இடைவெளியில் இருவர் ஒரே பெண்ணை பாலியல் வல்லுறவு செய்த வழக்கொன்றில் இதே வைத்திய நிபுணர் பாலியல் வல்லுறவுசெய்ய முயற்சிக்கப்பட்டது என்றே வைத்திய அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த வழக்கிலும் அவருக்கு எதிராக உத்தரவிடுவதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்றும் நீதிவான் தெரிவித்தார்.

பாலியல் வல்லுறவு சம்பந்தப்பட்ட வழக்குகளில் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்கின்ற வைத்தியர்கள் மிகவும் கவனத்தோடு நடந்து கொள்ள வேண்டும். எனினும் இந்த வழக்குகள் இரண்டிலுமே நீர் கவனமாக நடந்தீரோ இல்லையோ, உம்மைப் பொறுத்த அளவில் நீர் ஒரு பெண்நோயியல் நிபுணர் என்ற வகையில் நீதிமன்றம் கவனத்தோடும் பொறுப்போடும் நடந்து கொள்ளும்.

பெண் நோயியல் வைத்தியர் என்ற முறையில் இந்தப் பாலியல் வல்லுறவு வழக்கில் உம்மால் வழங்கப்பட்ட வைத்திய அறிக்கை நீதிமன்றத்தினால் சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 456 ஆம் பிரிவின் கீழ் ஒரு சான்றறிக்கையாக ஏற்கப்பட்டுள்ளது. வழக்கொன்றைத் திசை திருப்பும் வகையில், இந்த வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய வேண்டிய நிலைமை நீதிமன்றத்திற்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என்பது நிருபிக்கப்பட்டால் அது பாரதுாரமான குற்றமாக அமையும்.

பதினைந்து வருட கடூழியச் சிறைத்தண்டனை பெறவேண்டிய குற்றம் ஒன்றை இந்தப் பாலியல் வல்லுறவுக் குற்றத்தின் மூலம் சந்தேக நபர் புரிந்திருக்கின்றார். அவரைத் தப்பச் செய்வதற்காக இந்த வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும் நீதிமன்றம் ஆராயும். அது நிரூபணமானால், குற்றம் புரிந்தவருக்கு உடந்தையாகச் செயற்பட்டதற்கும் உம் மீது விசாரணை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் நீதிவான் வவுனியா ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த அந்த பெண்நோயியல் நிபுணரிடம் தெரிவித்தார்.

வைத்திய தொழில் என்பது புனிதமானது. வைத்தியர்கள் மீது நம்பிக்கை வைத்துத் தான் மக்கள் அவர்களிடம் செல்கின்றார்கள். வைத்தியர்கள் பொறுப்போடும் கடமை உணர்வோடும் நடந்து கொள்ள வேண்டும். நீதிமன்றத்தைப் பிழையான வழியில் வழிநடத்தத்தக்கதாக இவ்வாறு அறிக்கை சமர்ப்பிப்பதை நீதிமன்றம் பொறுத்துக் கொள்ள மாட்டாது. குறிப்பிட்ட வைத்திய அறிக்கையில் நீதிமன்றத்திற்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தையடுத்து, இது தொடர்பாக இந்த நீதிமன்றத்தில் வைத்தியருக்கு எதிராகக் குற்றம் சாட்டி வழக்குத் தொடர்வதா அல்லது இலங்கை மருத்துவ சபைக்கு அறிவித்து அதனுாடாக நடவடிக்கை எடுப்பதா என்பதற்கான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக வழக்கின் விபரங்கள் அடங்கிய கோவைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும், அதன் பின்னர், என்ன செய்வது என்பது குறித்து டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி நீதிமன்றம் முடிவெடுக்கும் எனத் தெரிவித்து நீதிவான் வழக்கை ஒத்தி வைத்து அன்று நீதிமன்றத்தில் வைத்திய நிபுணர் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.

O

# அஷ்ரப்பின்....

ஏன் அஷ்ஃரப்பின் மரணம் பற்றி எதுவுமே பேசாத முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யவில்லை.

இனிமேலும் வாய்மூடி மௌனிகளாய் இருந்து பேரினவாதிகளின் எலும்புத் துண்டுக்காய் காத்துக் கிடக்காது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் அஷ்ஃரப்பின் மரணம் இயற்கையல்ல திட்டமிட்டு செய்யப்பட்ட சதி என்பதை எடுத்துக் கூறி இச்சதிகாரக் கும்பலை சட்டத்தின் முன் நிறுத்தி இனி ஒரு போதும் முஸ்லிம் சமூகத்தின் குரல்களை நசுக்க முடியாதவாறு பாடம் புகட்ட வேண்டும்.

இவற்றை எவருமே பேசாமல் மௌனிகளாய் இருந்தபோது பெற்ற பாசத்தால் வளர்த்த காரணத்தால் மதீன உம்மா மாத்திரம் மகன் அஷ்ஃரப்பின் மரணத்தில் சந்தேகம் என்பதை அப்துல்லாஹ்வின் உதவியோடு சந்திரிகாவிடம் கேட்டுள்ளமைக்கு நியாயம் கிடைக்க முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் வழி செய்வார்களா? அஷ்ஃரப் மறையவில்லை மறக்கப்பட்டார் எனும் உண்மையை அடுத்த சந்ததிகளுக்கு கூறுவார்களா?

O

# பிரதமரும்..........

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்கான கொள்கை அடிப்படையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசோ, புலிகள் இயக்கமோ இந்த கொள்கை அடிப்படையைப் பற்றி எந்தக் கருத்தையுமே குறிப்பிடவில்லை. இதன் மூலம் இரு தரப்பினருக்கும் இக் கொள்கைகள் குறித்து திருப்தியற்ற நிலைமையே உள்ளதென்பது தெளிவாகின்றது. ஐக்கிய இலங்கை கட்டாய நிபந்தனையாக இருக்கும் போது இவ்வரையறைக்குள் பரவலாக்கம் செய்யப்படக் கூடிய அதிகபட்ச அதிகாரங்கள் குறித்து அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. 13வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் பொ.ஐ.முவின் யாப்பு வரைவுப் பிரதிக்கு அப்பாலான முழுமையான நிர்வாக முறையொன்று அரசியல் தீர்வாக முன்வைக்கப்படலாம். புலிகளினால் ஈழத்தைக் கைவிட இயலுமா? அரசினால் ஐக்கிய இலங்கையை விட்டுக் கொடுக்க இயலுமா? தற்போது சொல்ஹெய்ம் அவர்களினால் இலங்கை அரசியல் மேடைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள விடயங்கள் இவை இரண்டுமே ஆகும்.

பொதுத்தேர்தல் காலத்தில் பொ.ஐ.முவின் யுத்தவாத நிகழ்ச்சி நிரலின் பிரதான பிரச்சாரகரான பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் அவரினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் சிங்கள இனவாத இயக்கங்களும் இவ்வாறான தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தற்போது பிரதிப் பாதுகாப்பமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே செயற்பட்டு வருகின்றார். இதன்படி, அவர் பலம் வாய்ந்தவர். ஆனால் அவரால் எரிக் சொல்ஹெயிமை தோற்கடிக்க இயலுமா என்பது ஒரு கேள்வி! பெரும்பாலும், வடக்கு சமாதான விரோதிகளின் ஆதரவுடனேயே அவர் இக்காரியத்தில் வெற்றி பெறக் கூடும். சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பதிலாக சுதந்திர அரசுக்காக மேற்கொள்ளப்படும் வடக்கு போர், ஐக்கிய அரசுக்காக தெற்கில் போராடும் சக்திகள் என்பனவே பிரதான விரோதிகளாகவும், நண்பர்களாகவும் இருக்கக் கூடும்.

O

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வார இதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி/ தொலைமடல்: 074-400045
மின்னஞ்சல் :sarini@sltnet.lk

## யுத்தத்தின் எதிரிகளும் சமாதானத்தின் ஆர்வலர்களும்

மாவீரர் வாரம் ஆரம்பமாகிவிட்டது!

தமிழீழ விடுதலைப் புலிகள் வருடா வருடம் நடாத்தும் மாவீரர் வார நிகழ்வுகள் இம்முறையும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. கொழும்புப் பத்திரிகைகள் மிகவும் வெளிப்படையாகவும், (தைரியமாகவும்) முக்கியத்துவம் கொடுத்து இச்செய்தியைப் பிரசுரித்திருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் முன்னெப் போதையையும் விட இவ்வருடம் ஒரு முக்கியமான நிகழ்வாக கொழும்புப் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் கருதுவதற்கு நிச்சயம் ஒரு காரணம் இருக்கிறது. புலிகளின் மாவீரர் தினத்தை குழப்பவும், அதில் ஈடுபடுவோரை தாக்கவும் முன்பெல்லாம் முயன்ற இலங்கை அரசுப் படைகள் கூட, இம்முறை நிகழ்வுகள் பற்றி மிகவும் அக்கறையாக இருப்பது தெரிகிறது.

இந்த அக்கறைக்கும், ஆர்வத்திற்கும் காரணம் மாவீரர் தின நிகழ்வுகள் அல்ல. உண்மையில், இவ்விழா முடிவில் பிரபாகரன் பேசப்போகிற பேச்சுத்தான் இவற்றுக்கெல்லாம் காரணம்.

சென்ற வருட மாவீரர் தினப் பேச்சிலும் பிரபாகரன் சமாதானப் பேச்சுக்கான கோரிக்கையை முன்வைத்தார் என்பது உண்மை தான். அந்தப் பேச்சில் ஜனாதிபதி பற்றியும், அவரது அணுகுமுறை பற்றியும் கூட விமர்சித்திருந்தார். ஆனால், ஜனாதிபதி அது தொடர்பாக எந்த அக்கறையும் காட்டாதது மட்டுமல்ல, அப்பேச்சை இரண்டு மாதம் கழித்தும் தான் பார்க்கவில்லை என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், இம்முறை அந்தப் பேச்சுப் பற்றிய பேச்சே எங்கும் பேசப்படும் பேச்சாக இருக்கிறது!

புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு - அதுவும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்று அறிவித்ததும், நோர்வே விஷேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை வன்னிக்கு அழைத்து பிரபாகரனுடன் நேரடியாக சந்தித்துப் பேசும் நிலைமையை உருவாக்கியமையும் தான் இந்தப் பரபரப்புக்கு பிரதான காரணமாகும்.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்த தகவல், யுத்தமூலம் பிரச்சினையை தீர்க்க முடியுமென்று பிரச்சாரம் செய்து ஆட்சியைக் கைப்பற்றிய பொ.ஐ.முவினர்க்கு குறிப்பாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு முகத்திலடித்தது போல் அமைந்து விட்டிருக்கிறது., பிரதம மந்திரியும், உத்தியோக பூர்வமாக நியமிக்கப்படாத பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமாக இருக்கும் தனக்கு தெரியாமலே ஜனாதிபதியின் அனுமதியுடன் எரிக் சொல் ஹெய்ம் வவுனியா சென்று பிரபாகரனை சந்தித்துவிட்டு திரும்பி வந்ததை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. பிரபாகரனை யுத்தத்தில் முறியடிக்க அவர் தீவிரமாக முயன்று கொண்டிருக்கையில், திடீரென்று பேச்சுவார்த்தைக்கு பிரபாகரன் அழைத்ததும் ஜனாதிபதி அதற்கு அனுமதி கொடுத்ததை எப்படித்தான் ஒருவரால் சகித்துக் கொள்ள முடியும்.

பிரபாகரன் பேச்சுவார்த்தையை குழப்புவார். திரும்பவும், யுத்தத்தை தொடர்வதற்கான கால அவகாசத்துக்காகவே இந்தப் பேச்சுவார்த்தையை அவர் கோரியுள்ளார் போன்ற அபிப்பிராயங்களின் அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சி தோல்வியுற வேண்டும். பிரதமருக்கே தெரியாமல் பிரபாகரனுடன் பேச எரிக் சொல் ஹெய்மை வன்னி போக அனுமதித்த ஜனாதிபதியின் முகத்தில் பிரபாகரன் கரிபூசுவதை பார்க்க வேண்டும் - போன்ற ஆர்வத்துடன் இனவாதிகளும், படையினரும் பிரபாகரனின் பேச்சை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். பயங்கரவாதிகளுடன் பேசமுடியாது என்று காட்டுக் கத்தல் கத்துபவர்களுக்கு இன்னொரு முகத்து அடியாக வீழ்ந்திருக்கிறது பிரித்தானிய வெளிவிவகார ராஜாங்க அமைச்சின் ஹெய்ன் இன் விஜயமும், அவர் தெரிவித்த கருத்துக்களும். பயங்கரவாதம் என்று கூறி சமாதான கதவுகளை அடைப்பதும், பேச மறுப்பதும் தவறானது என்று அவர் அழுத்தித் தெரிவித்தது பெரும் சங்கடத்தை ஆட்சியினருக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

சர்வதேச நெருக்கடிகட்காக மேலும் பேச்சுவார்த்தையில் இறங்குவதை தவிர்க்க முடியாது என்ற நிலைக்கு வந்துள்ள ஆட்சியினருக்கு, பிரபாகரன் ஒரு எதிர்மறைப் பேச்சை ஆற்றமாட்டாரா என்ற ஆதங்கம் இருக்கிறது. இதுதான் மாவீரர் தினத்தை இவர்கள் அக்கறையுடன் எதிர்நோக்குவதற்கு காரணம்.

ஆனால், உண்மையான ஆர்வத்துடனும், சமாதான எதிர்பார்ப்புடனும் இதில் அக்கறை காட்டுபவர்களும் இந்நாட்டில் இருக்கிறார்கள். தமிழ் மக்களும், சமாதானத்தை விரும்புகிற யுத்தத்துக்காக தமது மக்களை இழக்க விரும்பாத சிங்கள மக்களும் இந்த உரையை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

பேச்சுவார்த்தை வெற்றி பெறுகிறதோ இல்லையோ, அது தோல்வியுறுவதற்கு ஒரு போதும் புலிகள் காரணமாக இருக்கக்கூடாது என்ற மேலதிக அக்கறை தமிழ் மக்களுக்கு உண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனைத்து மக்களின் சார்பாக வெளிப்படும் இந்த ஆர்வத்தை தனது உரையிலும், அதைத் தொடர்ந்து நடக்கப்போகும் பேச்சுவார்த்தைகளிலும் கௌரவித்து செயற்பட வேண்டும் என்பதே சரிநிகரின் விருப்பம்.

யுத்தம் எவ்வளவு நியாயமானது எனினும்
சமாதானம் அதைவிட இனிமையானது!

## யாழ் படைநகர்வு: மூன்றாவது முயற்சி

~ எழுவான்

மாவீரர் வார காலத்தை ஒட்டி படையினர் முன்கூட்டியே படை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர். மாவீரர் வார காலப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் உயர்மட்ட மாநாடு கூட்டப்பட்டு தற்காப்புத் தாக்குதல்கள் தொடர்பான திட்டங்கள் வகுக்கப்பட்ட கையோடு தென்மராட்சிப் பகுதியில் பெரிய படை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் பலத்த மழை பெய்து கொண்டிருந்த சமயம் 'கினிஹிர -4' எனப் பெயரிட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் இராணுவத்தின் 53, 54ஆவது டிவிசன்களைச் சேர்ந்த படையினர் ஈடுபட்டனர்.

சரசாலையில் இருந்தும், புத்தூர் பகுதியில் இருந்தும் முன்னேறிய துருப்புகள் மட்டுவில் தெற்குப் பகுதியில் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்தது. படை நடவடிக்கை ஆரம்பித்த சிறிது நேரத்தில் புலிகளின் நிலைகள் மீது கடுமை-




யான பல் குழல் எறிகணைத் தாக்குதல்கள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் 10 பெண் போராளிகளின் சடலங்களை படையினர் கைப்பற்றி யாழ்ப்பாண மருத்துவ மனையில் ஒப்படைத்தனர். முற்பகல் அளவில் புலிகளின் தாக்குதல் அணிகள் படையினரை எதிர்த்துக் கடும் மோதலில் ஈடுபட்டன.

மட்டுவில் தெற்கில் புலிகளின் பிடியில் இருந்து ஆறு சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றியதாக அன்று மாலை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்நடவடிக்கையில் ஒரு படையினர் கொல்லப்பட்டதாகவும், நான்கு அதிகாரிகள் உட்பட 27 படையினர் காயமடைந்ததாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், படை நடவடிக்கை முடிவுற்றதாகத் தெரிவிக்கப்படவில்லை.

சில சுயாதீன தகவல்களின்படி படையினர் கைப்பற்றியதாகக் கூறிய ஆறு சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் இரு தரப்புகளுக்கும் இடையே அன்று இரவும் (ஞாயிறு இரவு) கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட படையினர் காயமடைந்து களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டும் உள்ளனர்.




தென்மராட்சியில் உள்ள படையினருக்கு சாவகச்சேரி ஊடாக விநியோகப் பாதையைத் திறக்கும் நோக்குடன் மூன்றாவது தடவையாக படையினர் முயன்றுள்ளனர்.

எனினும், மாவீரர் வாரத்தை ஒட்டி புலிகள் தொடுக்கக் கூடிய பாரிய தாக்குதல்களைக் குழப்பும் உள்நோக்கத்துடன் அவசரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே இது அமைகிறது.

புலிகளை தேடிச்சென்று தாக்கும் கட்டாய நிலையில் - நிர்ப்பந்த நிலையில் - படையினர் இருப்பதை இது வெளிக் காட்டுகிறது. திரும்பத் திரும்ப படையினர் ஒரே விதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ஆனால், புலிகளின் அடுத்த நடவடிக்கை எவ்வாறு அமையும் என்பது புதிராகவே உள்ளது.

படையினரின் மாவீரர் காலத் தூக்குதல் ஒருபுறம் இருக்க, யாழ் நகரிலும் குடாநாட்டின் ஏனைய பல பகுதிகளிலும் அண்மைக் காலத்தில் புலிகளின் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளதை சில சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

படையினரின் நடமாட்டமும் சனநெருக்கடியும் நிறைந்த யாழ் நகர் கஸ்தூரியார் வீதியில் உள்ள சைனீஸ் உணவு விடுதிக்குள் கடந்த செவ்வாயன்று பகல் திடீரெனப் புகுந்த இரு இளைஞர்கள் அங்கு மது அருந்துவதற்காக அமர்ந்திருந்த பொலிசார் இருவரை நோக்கிச் சுட்டுவிட்டு தப்பிச் சென்று விட்டனர்.

இதில் பொலிசார் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். தப்பிய அடுத்த பொலிஸ்காரர் வெளியே ஓடிவந்து பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே அந்த வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில் இருந்த எஸ்.முரளீதரன் (23) என்பவர் பலியானார். சாரதியான கந்தசாமி செல்வராசா (25) ஜெகதீசன் ஜெகமோகன் (24) ஆகியோர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் யாழ் நகர படை அதிகாரிகளுக்கும் பொலிசாருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

கடந்த சில நாட்களாக வீதிக்கு வீதி இளைஞர்களை மறித்து தீவிர சோதனைகளை நடத்தி வந்த படையினருக்கு இரு இளைஞர்கள் துப்பாக்கியுடன் ஊடுருவித் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதைத் தடுக்க முடியாது போய் விட்டது. ○

* யுத்தத்தின் பிரதிபலிப்புகள்
* கைதுகள், காணாமல் போதல், சித்திரவதைகள்
- முகங்கொடுப்பதில் உள்ள பிரச்சினைகள்
* அரசியல் வன்முறைகள் பற்றி........



நவ. 28 செவ்வாய் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது

ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 22.11.2000